நவீன திறனாய்வுக் கோட்பாடுகள்

ஓர் அறிமுகம்

கே.எஸ். சிவகுமாரன்

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன திறனாய்வுக் கோட்பாடுகள்

ஓர் அறிமுகம்

கே.எஸ். சிவகுமாரன்

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன திறனாய்வுக் கோட்பாடுகள்
எழுதியது கே. எஸ். சிவகுமாரன்

© 2014, கே. எஸ். சிவகுமாரன்

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு 06, தொ.பே.: 011 2364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 6

Naveena Thiranaaivuk Kodpaadukal
(Modern Critical Concepts)
by K.S. Sivakumar

Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo 06, Tel.: 011 2364550, E-mail: *kumbhlk@gmail.com*
3, Meigai vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd
39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண் # 619

ISBN: 978-955-659-432-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

'நவீன திறனாய்வுக் கோட்பாடுகள் - ஓர் அறிமுகம்' என்ற சிறிய அளவிலான இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப் பட்டயச் சான்றிதழ் கற்கை நெறிக்காக என்னால் எழுதப்பட்ட ஆய்வறிக்கையினை அடிப்படையாகக் கொண்டது.

எமக்கு அறியாதனவற்றை அறிமுகம் செய்தும், விரிவாக எமக்கு விளக்கவுரைகளை நிகழ்த்தியும் தந்த பேராசிரியர் சபா ஜெயராசா, சைவப்புலவர் செல்லத்துரை, முதுநிலை விரிவுரையாளர் ரகுபரன் ஆகியோர் அடங்கிய நிர்வாகக் குழுவினருக்கும் பேராசிரியர் செ. யோகராஜா உட்பட்ட ஏனைய ஆசிரியர்களுக்கும் என்னை வழிப் படுத்தியமைக்காக நன்றிகளை கூறிக்கொள்கின்றேன்.

திறனாய்வுத்துறை சம்பந்தமாகக் கடந்த சில வருடங்களாக ஏற்பட்டு வரும் விபரங்கள் அனைத்தையும் இச் சிறுநூலில் சேர்த்துக் கொள்ள முடியவில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

நன்றி

29.05.2014

கே.எஸ். சிவகுமாரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

முன்னுரை

1. திறனாய்வு: சில பொதுப் பண்புகள் 1

2. இலக்கியம்: சில விளக்கங்கள் 3

3. திறனாய்வின் உட்கூறுகள் 5

4. செயன்முறைத் திறனாய்வு 8

5. பல்நெறிசார்ந்த திறனாய்வு 10

6. கலை நயமும் திறனாய்வும் 16

7. ஈழத்தில் திறனாய்வு 23

8. சில ஈழத்துத் திறனாய்வு நூல்கள் 31

9. கவிதைத் திறனாய்வு 35

10. நாடகத் திறனாய்வு 39

11. சமூகவியல் போக்குத் திறனாய்வு 45

12. கைலாசபதியின் திறனாய்வு அணுகுமுறை 49

13. சுவாமி விபுலாநந்தர் ஈழத்தின் திறனாய்வு முன்னோடி 56

பின்னிணைப்பு:

ஆய்வறிவாளர் கைலாசபதியும் நூல் ஆசிரியரும் 72

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

திறனாய்வு: சில பொதுப் பண்புகள்

முதலிலே 'திறனாய்வு' தொடர்பான சில பொதுப் பண்புகளைப் பார்ப்போம்.

திறனாய்வு என்னும் பொழுது, அங்கு திறன் சக ஆய்வு இடம் பெறுகிறது. ஒரு படைப்பாளியின் இலக்கிய ஆக்கத்திறனை இனங்கண்டு, அதனை ஆய்வுக்கு உட்படுத்தி, தனது இரசனையையும் கணிப்பையும், திறனாய்வின்போது, திறனாய்வாளன் வெளிப்படுத்துகிறான். திறனாய்வு, ஆக்கபூர்வாகமாக அமையவேண்டும்.

திறனாய்வாளன் ஒரு படைப்பை வாசித்து, படித்து, அதன் நுட்பங் களையும் நல்ல அம்சங்களையும் எடுத்துக் கூறுவதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். அதேவேளையில், அப்படைப்பின் குறைபாடு களையும் சுட்டிக்காட்டி, செம்மைப்படுத்துவதற்கான வழிமுறைகளை, ஆலோசனைகளாகத் தெரிவிப்பதும் விரும்பத்தக்கது.

திறனறிதல் ஒன்றும் புதிதானதல்ல, திருக்குறள் காலத்தில் இருந்தே, இப்பதம் புழக்கத்தில் உள்ளது. அதே சமயம், ஒரு பயிற்சி நெறியாகப் பழங்காலத்திலே திறனறிதல் மேற்கொள்ளப்படவில்லை.

நமது மொழியைப் பொறுத்தமட்டிலே தி. செல்வகேசவராய முதலியார் எழுதிய பல கட்டுரைகள், குறிப்பாக, மகாகவி கம்பன் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்கள், திறனாய்வு அடிப் படையில் அமைந்திருந்தன என்று தமிழறிஞர்கள் நமக்கு நினைவூட்டி யுள்ளனர். இவரைத் தொடர்ந்து மறைமலை அடிகள் எழுதிய சில கட்டுரைகள், ஓரளவு திறனாய்வுப் போக்கிலே அமைந்திருந்தன என்று சொல்லலாம். 'ஓரளவு' என்று குறிப்பிடப்படுவது ஏனெனில், இக்கட்டுரை களிலே, குறிப்பாக, 'முல்லைப்பாட்டு' பற்றிய கட்டுரையிலே பழைய உரையாசிரியர்களின் போக்கும் காணப்படுவதனால்தான்.

'கம்பராமாயண ரசனை' என்ற தலைப்பிலே வ.வே.சு. ஐயர் எழுதிய கட்டுரைகள் ஆரம்பகால நவீன கோட்பாடுகளுக்கு இணங்கியனவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தன. ஈழத்திலே திறனாய்வுத் துறையின் முன்னோடியாக சுவாமி விபுலாநந்தரையே கருதலாம்.

கு.ப. ராஜகோபாலன், பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி) ஆகிய இருவரும் எழுதிய 'கண்ணன் என் கவி' என்ற புத்தகம், உடன் நிகழ்காலத் திறனாய்வு முயற்சியின் ஆரம்ப வெளிப்பாடு எனலாம். மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கவிதைகளை ரசனைப் பாங்காக வெளிப்படுத்துவது மட்டு மன்றி, நெறிப்படுத்தப்பட்ட திறனாய்வின் அடிப்படை அம்சங்களையும் உள்ளடக்கியதாய் இந்நூல் அமைகிறது.

இலக்கியத் திறனாய்வின் போது ஒரே காலத்தில், பல பார்வைகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்விடத்தில் இவ்விடயம் தொடர்பாக இரு ஆய்வாளர்களின் கூற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தம் என நினைக்கின்றேன்:

''இலக்கியம் மொழியால் ஆக்கப்படுவதால், முதலில் மொழித்திறன் பற்றிய ஆய்வும், மொழி குறிக்கும் பொருள், காலதேச வர்த்தமானத் திற்குக் கட்டுப்பட்டனவாய் இருப்பதால், சரித்திரம், சமுதாயம் என்பன பற்றிய ஆய்வும், இலக்கியத்தைப் படிப்போர் அனுபவத் தெளிவுடன் இன்பமும் பெறுகின்றனராகையால், இன்ப நுகர்ச்சியின் இயல்பு பற்றிய ஆய்வும், குறைந்த பட்சம் இன்றியமையாததாகின்றன'' எனக் கூறினார் பேராசிரியர் க. கைலாசபதி.

அவர் மேலும் ''சுருக்கமாகக் கூறுவதனால் ஓர் இலக்கியப் படைப்பின் மொழி நுட்பம், வாழ்க்கை நோக்கு அல்லது தத்துவம், இன்பச் சுவை என்பன ஒன்று சேர்ந்தே அதற்கு நிறைவை அளிக்கின்றன. இவை ஒன்றுக் கொன்று தொடர்புடையன, ஒன்றையொன்று ஆதாரமாகக் கொண்டன'' என்றும் குறிப்பிட்டார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கூற்றுப்படி, ''இலக்கியத் தன்மை, அதன் நோக்கம், அது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் ஆகியன பற்றிய ஆய்வுநிலை நின்று தேடுதல் இலக்கிய விமர்சனமாகும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

இலக்கியம்: சில விளக்கங்கள்

இலக்கியத் திறனாய்வு பற்றி அறிய முற்படும் பொழுது 'இலக்கியம்' பற்றிய சில விபரிப்புக்களையும் நாம் அறிந்திருத்தல் நலம்.

- கலை நயம் தோன்ற, ஏதேனும் ஒரு வடிவத்தில் எழுதி வெளிப்படுத்தப்படும் படைப்பு (Creative Literature)
- ஏதேனும் ஒரு துறையைச் சார்ந்து எழுதப்படும் கட்டுரைகள், நூல்கள் போன்றவை. (Literature in Particular Fields)
- வாய்மொழியாக வழங்கப்படும் நாட்டார் கதைகள், பாடல்கள் போன்றவை. (Folk Literature)

என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது.

இலக்கியம் என்றால் என்ன என்பதற்கு ஆங்கில கலைக்களஞ்சியம் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

- Knowledge of books – Literary Culture.
- The production of literary work especially as an occupation.
- Writings in prose or verse, especially, writings having excellence of form or expression and Presenting ideas of permanent values of universal interest.
- The body of written works produced in a particular language, country or age.
- The body of writings on a particular subject.

மேற்கண்டவற்றைத் தமிழில் பின்வருமாறு கூறலாம்:

- நூல்கள் பற்றிய அறிவு - இலக்கியப் பண்பாடு.
- இலக்கிய ஆக்கத்தை உருவாக்குவதில், குறிப்பாக அதனைத் தொழிலாகக் கொள்ளும்போது, எழக்கூடிய பிரச்சனைகள்.
- உரைநடையிலும், கவிதையிலும் எழுதப்படும் எழுத்து - குறிப்பாக, உருவச் சிறப்பும், நிரந்தரத் தன்மையும், அனைத்துலகப் பெறுமதியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட கருத்துகளும் அவற்றை வெளிப்படுத்தல் அளித்தல் என்பவற்றில் காணப்படும் சிறப்புக்களும்.

- குறிப்பிட்டதொரு மொழியில் அல்லது தேசத்தில் அல்லது காலத்தில் எழுதப்பட்ட எழுதப்படும், ஆக்கங்களின் தொகுதி.
- குறிப்பிட்டதொரு பொருள் பற்றிய எழுத்தாக்கங்கள்.

திறனாய்வும் மதிப்புரையும்

ஒரு படைப்பைப்பற்றிய விரிவான (ஆழமான) ஆய்வைத் திறனாய்வு எனலாம். சுருங்கச் சொல்லி (மேலோட்டமாக) விளக்குவதை மதிப்புரை எனலாம். மதிப்புரை பக்க வரையறைக்கு உட்பட்டது. திறனாய்வுக்கோ அத்தகைய கட்டுப்பாடு இல்லை. அனைவரும் புரிந்து கொள்வதற்காக எழுதப்படுவது மதிப்புரை. எனவே எளிமை, சுருக்கம் அவசியமாகிறது. இலக்கியப் பயிற்சி மிக்கோருக்காக, விரிவாகவும் அடிக்குறிப்புக்கள் கொண்டும் விரிவுரைகளுடன் திறனாய்வு எழுதப்படுகிறது.

புகழ்வதும் கண்டிப்பதும் திறனாய்வன்று. முழுக்க முழுக்கப் புகழ் மாலையாகவும் முழுக்க முழுக்கக் கண்டனமாகவும் அது அமையாது. திறனாய்வாளர்களது இலக்கியக் கொள்கைக்கேற்பத் திறனாய்வுப் போக்கு அமைகிறது.

பத்தி திறாய்வு

பத்தி எழுத்தாளர்கள் (Columnists), இலக்கியப் பத்திரிகையாளர்கள் (Literary Journalists) காலந்தோறும் இலக்கியம் தொடர்பான பத்திகளையும், மதிப்புரைகளையும் எழுதி வருகிறார்கள். பத்தித் திறனாய்வு திறனாய்விலிருந்து வேறுபட்டது.

மேலோட்டமான திறனாய்வுக் குறிப்புக்கள், தகவல்கள், அறிமுகம், மதிப்புரைகள் என்பன இந்தப் பத்தி எழுத்தில் இடம்பெறும். இட வசதியின்மை, ஜனரஞ்சகம், கண்டனத் தவிர்ப்பு, திட்டவட்டமான முடிவுரைகளை வழங்காமை, பொருளைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறுதல், கவர்ச்சித் தன்மை, தலைப்பு ஆகியனவற்றிற்கேற்ப அழுத்தம் மாறுபடல் போன்றவை, பத்தி எழுத்துக்களுக்கும் பொதுவான அடிப்படைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

திறனாய்வின் உட்கூறுகள்

திறனாய்விலே பல உட்கூறுகள் இருக்கின்றன. இவை இலக்கியக் கொள்கை, இலக்கிய வரலாறு, இலக்கித் திறனாய்வு, மதிப்புரை, இலக்கியப் பத்தி எழுத்து, அறிமுகம் என்பனவாம்.

திறனாய்வுக் கொள்கைக்கும் (Literary Concepts) செயன்முறைத் திறனாய்வுக்கும் (Practical Criticism) இடையில் வேறுபாடுகள் உள்ளன.

இலக்கியப் படைப்புகளை விளக்குவதற்கும், அவைபற்றி அபிப் பிராயம் கூறுவதற்கும், அவற்றை வகைப்படுத்தி மதிப்பிடுவதற்கும் உரிய பொதுவான அடிப்படைகளையும், அளவுகோல்களையும் வகுப் பதைக் கோட்பாட்டுத் திறனாய்வுக்குள் அடக்குவர்.

ஓர் இலக்கியப் படைப்பை அல்லது ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குரிய படைப்பை நுணுக்கமாக ஆராய்ந்து விளக்குதல் அல்லது மதிப்பிடுதல் செயல்முறைத் திறனாய்வில் அடங்கும்.

எனினும், '20 ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்' என்ற எம்.ஏ. நுஃமான், மௌனகுரு, சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் எழுதிய நூலில் குறிப்பிட்டிருப்பது போல, செயல்முறைத் திறனாய்வு வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ திறனாய்வுக் கொள்கை யாகவே நிர்ணயிக்கப்படும் என்பது ஒரு பொதுவான உண்மையாகும்.

கலை, இலக்கிய உலகங்களில் திறனாய்வு இன்றியமையாததொன்று. கலையும் திறனாய்வும் பிரிக்க முடியாத நிலையில் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து இருக்கின்றன. திறனாய்வு என்பது கலை இலக்கிய முயற்சிகள் பற்றிய திறனாய்வாளன் ஒருவனின் தனிப்பட்ட கருத்தாகும் ஆயினும், தனிப்பட்ட தனது கருத்தை தனது கல்வி, கேள்வி, அறிவு, அனுபவம் ஆகியனவற்றிற்கேற்ப அவன் தெரிவிக்கின்றான். இவ்வெதி ரொலியின் வெளிப்பாடே திறனாய்வாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலமொழியில் திறனாய்வு

ஆங்கில மொழியில் வளர்ச்சி கண்ட இலக்கியத் திறனாய்வு இன்று, பல்வேறு திசைகளில் வளரத் தொடங்கியுள்ளது.

உதாரணமாக, இன்றைய நிலையில் பின்வரும் திறனாய்வுப் போக்குகள் ஆங்கில மொழியில் பின்பற்றப்படுவதை அவதானிக்கலாம்: சிக்காக்கோ திறனாய்வாளர்கள் முறை, கட்டுடைப்புவாதத் திறனாய்வு, பெண்ணியத் திறனாய்வு, உருவவாதத் திறனாய்வு, ப்ரொய்டிஸத் திறனாய்வு, ஜெனிவாத் திறனாய்வாளரின் திறனாய்வு, மார்க்சியத் திறனாய்வு, புதிய முறைத் திறனாய்வு, நவ வரலாற்றியல் திறனாய்வு, நவீனவாதத்தைத் தொடர்ந்து வந்த திறனாய்வு, செயன்முறைத் திறனாய்வு, வாசகர் எதிர்வினைத் திறனாய்வு, அமைப்பியல் வாதத் திறனாய்வு.

உளவியல் நோக்கு

இவற்றைவிட, உளவியல் நோக்கில் திறனாய்வு தொடர்பாகப் போதிய விளக்கங்கள் தரப்படுவதாகத் தெரியவில்லை. இவ்வாறு நிலைமை இருந்த போதிலும் ப்ரொய்டின் திறனாய்வைப் பின்பற்றி Psychological Criticism என்றதொரு முறையும் இருந்து வந்ததைக் குறிப்பிடலாம். இதனை 'உளவியல் பகுப்பாய்வுத் திறனாய்வு' எனத் தமிழில் நாம் அழைக்கலாம்.

உதாரணமாக, ஒரு நாவலை அல்லது சிறுகதையைப் பற்றிய உளவியல் பகுப்பாய்வு கொண்ட திறனாய்வை மேற்கொள்ளும் போது, அந்த ஆக்க இலக்கியத்தின் விவரணை முறையைப் பார்க்கிலும் அப்படைப்பில் வரும் பாத்திரங்களின் சிந்தனைப் போக்கு, உணர்வுகள், நோக்கங்கள் பற்றிக் கூடுதலாகக் கவனம் செலுத்தப்படுகிறது. இவ்வாறான தனிமனித அக வாழ்வுச் சித்திரங்கள், முற்றாகப் புற வாழ்வை யொதுக்கி யதாக அமைவதுமில்லை. சமூகம் தனிமனிதரைப் பாதிப்பதும், தனி மனிதரின் பங்களிப்பு சமூகத்தில் பிரதிபலிப்பதும் இயல்பே.

இத்தகைய படைப்புக்களின் திறனாய்வு, ஒரு சீரொழுங்காகவும் காரணகாரியத் தொடர்பாகவும் அமைவதில்லை. அதேவேளையில், ஆங்காங்கே பாத்திரங்களின் உணர்வு தொடர்பான முன்னைய அனுபவச் சிந்தனைகள், நினைவுகள், குறைகள் போன்றவையும் பகுப்பாய்வுக்கு உட்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பிரக்ஞை ஓட்டம்' அல்லது 'நனவோடை' உத்தியைப் பயன்படுத்திப் பல எழுத்தாளர்கள் ஆங்கிலத்தில் எழுதியிருப்பது போன்றே, தமிழிலும் சிலர் இந்த மாதிரியான உளவியல் பாங்குகொண்ட கதைகளை எழுதியுள்ளனர்.

வாசகர்கள் இலக்கியத்தை எவ்வாறு இனங்காண்கின்றனர் என்பதையும் படைப்பாளியின் உளவியல் எப்படியிருக்கிறது என்பதை வாசகர்கள் எவ்வாறு பொருள் கொண்டு விளங்கிக் கொள்கிறார்கள் என்பதையும், தம்மையறியாமலே தமது நிதர்சனப் பிரக்ஞையினின்றும் விலகிய பிரக்ஞையற்ற நிலையில் படைப்பாளியின் உள்ளக் கிடக்கையை மறுசிருஷ்டியாக வாசகர்கள் எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள் என்பதையும் அறிந்துகொள்ள உளவியல் பகுப்பாய்வுத் திறனாய்வு வகை செய்கிறது.

மேல்நாட்டில் உளவியல் பகுப்பாய்வுத் திறனாய்வு முறை சிக்மன்ட் பிராய்ட்டின் சித்தாந்தங்களினின்று தான் ஆரம்பமானது.

Ernest Jones, Otto Rank, Marie Bonaparte போன்ற திறனாய்வாளர்கள் Sigmund Freud ஐத் தொடர்ந்து உளவியல் பகுப்பாய்வை மேற்கொண்டனர்.

பின்னர் Carl Jung, Norman Ubrown, Jacques Laccan, Julia Kristeva, Hellne Cixous, Luce Irigary போன்றோர் இந்தத் திறனாய்வு முறையில் பல விரிவாக்கங்களைச் செயற்படுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

செயன்முறைத் திறனாய்வு

திறனாய்வில் எந்தவிதமான அணுகுமுறை அமைந்தாலும், நடைமுறைச் செயற்பாடுகள் அத்தியாவசியமாகின்றன.

திறனாய்வுக் கொள்கைகளில் செயன்முறைத் திறனாய்வும் (Practical Criticism) தொழிற்படுகிறது. இவற்றிற்கிடையே சில வேறுபாடுகள் உள்ளன.

இலக்கியப் படைப்புக்களை விளக்குவதற்கும், அவை பற்றி அபிப்பிராயம் கூறுவதற்கும், அவற்றை வகைப்படுத்தி மதிப்பிடுவதற்கும் உரிய பொதுவான அடிப்படைகளையும், அளவுகோல்களையும் வகுப்பதைக் கோட்பாட்டுத் திறனாய்வுக்குள் அடக்குவர்.

ஒரு குறிப்பிட்ட இலக்கியப் படைப்பை அல்லது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய படைப்பை நுணுக்கமாக ஆராய்ந்து விளக்குவதை அல்லது மதிப்பிடுவதைச் செயல்முறைத் திறனாய்வின் பாற்படுத்துவர்.

கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், திரைப்படம், ஓவியம், சிற்பம், நாட்டியம், இசை போன்ற சகல, ஊடகங்கள் பற்றியும் திறனாய்வு செய்யும் போது பலரும் பலவிதமான அணுகுமுறைகளை மேற்கொள்கின்றனர். இன்னொரு விதத்தில் கூறுவதாக இருந்தால், திறனாய்வின்போது சில விஷயங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகிறது. அந்த அழுத்தம் என்ன என்பது திறனாய்வாளரைப் பொறுத்தது.

திறனாய்வாளரின் இலக்கியக் கொள்கை என்ன என்பதைப் பொறுத்து, அவரது திறனாய்வுக் கொள்கையும் அமையும். அத்திறனாய்வுக் கொள்கைக்கேற்ப அழுத்தம் அமையும்.

இலக்கியக் கொள்கையைப் பின்வருமாறு பகுப்பர்: அகவயக் கொள்கை (Organic), அறிவியற்கொள்கை (Emotive), உணர்ச்சிக் கொள்கை (Didactic), அழகியற் கொள்கை (Aesthetic), சமுதாயக் கொள்கை (Sociological).

இவ்வாறான இலக்கியக் கொள்கைகளுக்கு ஏற்ப திறனாய்வுக் கொள்கைகளும் அமையும். இத்திறனாய்வுக் கொள்கைகளை (Critical

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Concepts) பின்வருமாறு அழைப்பர்: அனுசரனைக் கொள்கை (Imitative), பயன்வழிக் கொள்கை (Subjective Apprecpation), புற நிலைக் கொள்கை அல்லது விடயக்கொள்கை (Objective Appreciation).

இவ்வாறு பகுக்கப்படும் இலக்கியக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு திறனாய்வுக் கொள்கைகளும் அமையும் என்று கண்டோம். இத் திறனாய்வுக் கொள்கைகளை அனுசரணைக் கொள்கை, பயன்வழிக் கொள்கை, புறநிலைக்கொள்கை அல்லது விடயக்கொள்கை எனப் பிரிப்பர்.

எல்லாவிதமான பார்வைகளிலும் சில அடிப்படை அனுசரணைகளை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. உதாரணமாக, ஓர் ஆக்கத்தை, அதாவது ஓர் நாவலை அல்லது நாடகத்தை அல்லது திரைப்படத்தைத் திறனாய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது, அப்படைப்பு என்ன கூறுகின்றது, எப்படிக் கூறுகின்றது என்ற அடிப்படைக் கேள்விகளுக்கு விடை காணத் திறனாய்வாளன் முயல்வான். ஒரு படைப்பின் உறுதிப் பொருள்களை வாசகருக்கு விளக்கிக் காட்டுவது திறனாய்வாளனின் கடமை.

எனவே, திறனாய்வாளன், அந்தப் படைப்பின் அடிநாதக் கருத்து என்ன என்பதை முதலில் இனங்கண்டு கொள்ள முற்படுகிறான். அந்த அடிநாதக் கருத்தாகிய கதைப்பொருள் திறனாய்வாளனுக்கு உடன்பட்ட கருத்தாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். ஆயினும், திறனாய்வாளன் அந்தப் படைப்பில் அக்கருத்தை மாத்திரம் இனங்கண்டு கொள்வதுடன் நின்றுவிடுவதில்லை. அக்கருத்தைப் படைப்பாளி, கலை நயமாகக் கூறியிருக்கிறானா என்றும் பார்க்க முற்படுகிறான்.

கூடியவரை திறனாய்வாளன் படைப்பாளியின் அனுபவம், நிலைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் நின்றே, படைப்பை அணுக வேண்டும். அதாவது, படைப்பாளியின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். படைப்பு எழுந்த சமூகப் பின்னணியை அறிந்து, அப் பின்னணியின் முக்கியத்துவத்தை இனங்கண்டு, அந்தப்படைப்பை மதிப்பிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

பல்நெறிசார்ந்த திறனாய்வு

Social Context எனப்படும் சமுதாயப் பின்னணியில் படைப்பை வைத்தணுக வேண்டியது திறனாய்வாளர்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான பண்பு.

கலை, இலக்கியங்கள் சமுதாயத்தின் விளைபொருள்கள். அவை, வெறுமனே கலை, கலைக்காக அல்ல. அவை, மக்களுக்குப் பயன்பாடுடையதாக இருத்தல் வேண்டும். பிரச்சார வெளிப்பாடுகளைக் கலை இலக்கியங்கள் எனக் கொள்வதில்லை.

சமுதாயத்திற்குப் புத்தறிவும் புத்தனுபவமும் புத்துணர்ச்சியும் பரிவர்த்தனை தரக்கூடியதாக செயற்பட வேண்டும். படைப்பாளியின் தனித்தன்மையும், திறனும் இப்பரிவர்த்தனையின் போது இணைந்தே வெளிப்படும்.

எல்லாவிதமான விமர்சன அணுகுமுறைகளிலும் பல்நெறி சார்ந்த அணுகுமுறையே முழுமையானது. அதே வேளையில், புறநிலைக் கொள்கை, ஒரு படைப்பை நன்கு விமர்சிக்கத் துணை செய்கிறது.

''ஓரளவு சான்றாதாரங்காட்டத் தக்கனவாயுள்ள படிமக் கூறுகள், அழகியற் பண்புகள், அமைப்பு, ஒழுங்கு, இலக்கண அமைதிகள் ஆகியவற்றைத் துணைகொண்டு இலக்கியத்தை அணுகுவதற்கு இக்கொள்கை வகை செய்கிறது'' என 'இலக்கியமும் திறனாய்வும்' என்ற தனது நூலிலே பேராசிரியர் கைலாசபதி குறிப்பிடுகிறார்.

செயன்முறைத் திறனாய்வு பெரும்பாலும் வடிவம் சம்பந்தப்பட்டதாகவே இருப்பதுண்டு. அப்படிக் கூறுவதனால், உள்ளடக்கம் பற்றிய அக்கறை இல்லை என்றாகாது. வடிவமே பொருள் என்பது இந்த முறையின் ஓர் அம்சமாகும். பயிற்சி, திறனாய்வுத் திறனைப் பெற்றுக்கொள்ள உதவுகிறது.

''வாசகரது தனி விருப்பு, பாவனை, தற்போக்கெண்ணம், திடீர் ஆர்வக் கருத்து என்பன போன்ற, முன்னறிந்து கூற முடியாத காரணக் கூறுகளைச் சாராமல், ஓரளவு சான்றாதாரங் காட்டத்தக்கதாயுள்ள வடிவக் கூறுகள், அழகியற் பண்புகள், அமைப்பு ஒழுங்கு, இலக்கண அமைதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றைத் துணை கொண்டு இலக்கியத்தை அணுகுவதற்கு இம் முறை உதவுகிறது'' என்று விவரித்துள்ள பேராசிரியர் கைலாசபதி, ''இன்று வழக்கிலுள்ள திறனாய்வுக் கொள்கைகளுக்குள் இதுவே வகுப்பறைகளில் கைக்கொள்வதற்குச் சாதகமாயுள்ளது'' என்றும் (மேற்படி நூல், பக்கம் 113) வலியுறுத்துவதை நாம் காண்கிறோம்.

மதிப்பீட்டியல்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்ட 'தமிழ் 9' (நான்காம் பதிப்பு) என்ற பாட நூலில் 'மதிப்பீட்டியல்' என்ற ஒரு பாடமும் சேர்க்கப்பட்டுள்ளது.

அமரரான கவிஞர், விமர்சகர் இ. முருகையன் இதனைப் பதிப்பித் துள்ளார். நூலமைப்புக் குழுவிலே நமது நாட்டுப் பிரபல எழுத்தாளர்கள் சு. வேலுப்பிள்ளை, சண்முகம் சிவலிங்கம், சபா ஜெயராசா, த. கனகரத் தினம், க. கந்தசாமி, எம்.சி. சலீம் ஆகியோர் இடம்பெற்றனர்.

'புகழ்ச்சியும், இகழ்ச்சியுமே மதிப்பீடு (விமர்சனம் அல்லது திறனாய்வு) என்று சிலர் கருதுகிறார்கள். அது சரி அன்று. எழுத்தாக்கம் ஒன்றை விளக்கியுரைப்பதும், அதன் பண்புகளை ஆராய்ந்து கூறுவதுமே மதிப்பீடாகும்' என அக்கட்டுரை குறிப்பிடுகிறது. (மேற்படி நூலின் 254 ஆம் பக்கம்).

செயன்முறைத் திறனாய்வுக்குரிய சில அடிப்படைக் கேள்விகள் இப்பாடத்திலும் அமைந்திருப்பதை நாம் காண்கிறோம். அவை நமது திறனாய்வு முயற்சிகளுக்குப் பயனளிக்கக்கூடும் என்று கருதி, அவற்றைத் திரட்டித் தருகிறேன்.

'எங்கள் வாசிப்பு, புத்திசாலித்தனமாக அமைய வேண்டுமாயின் எழுத்தாக்கங்களை மதிப்பீடு செய்யப் பழகுவது அவசியமானதாகும். மதிப்பீடு என்பதுதான் என்ன? நம்முன் உள்ள வாக்கியங்களின் தராதரங்களையும் பண்பு விகற்பங்களையும் கண்டு தெரிந்து கொள்வதே மதிப்பீடு.'

புகழ்ச்சியும், இகழ்ச்சியும் மதிப்பீடாகாது என்று வலியுறுத்துவதுடன், எழுத்தாக்கமொன்றை விளக்கியுரைப்பதும், 'அதன் பண்புகளை ஆராய்ந்து கூறுவதும் மதிப்பீடாகும்' என்று தெளிவாக்கப்பட்டுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, நமது எழுத்தாளர்களிற் சிலர் 'கண்டனமே' விமர்சனம் என்றும் 'அழுத்தம் திருத்தமாக' ஒரு படைப்பாளியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அடிப்பதே' விமர்சனம் என்றும் கருதி, அதுவே ஆழமான விமர்சனத்திற்குச் சான்று எனத் தவறாகக் கருதி வருகின்றனர்.

திறனாய்விலே கவனிக்க வேண்டியவை எவை என்று குறிப்பிட்ட இந்தப் பாடத்திலே சில கேள்விகள் தரப்பட்டுள்ளன. அவையாவன :

1. எழுத்தாளன் கூறும் கருத்து யாது? வெளிப்படையான நேர்க் கருத்தை விட, குறிப்புக் கருத்தான உட்பொருள்கள் உண்டா? அவை யாவை?

2. எழுத்தாளன் கையாண்ட சொற்கள் எத்தகைய உணர்ச்சிகளை எழுப்புகின்றன? இவ்வுணர்ச்சி, சந்தர்ப்பத்துக்கேற்ற அளவான உணர்ச்சியா? மிகையுணர்ச்சியா? அல்லது உணர்ச்சித் துடிப்பே இல்லாத வெறும் பிணம் போல அச்சொற்கள் கிடக்கின்றனவா?

3. சொற்களைத் தொடுத்துள்ள முறையிலே சிறப்பான ஓசை நயம் ஏதும் தோன்றுகிறதா? அது கருத்துக்கும், உணர்ச்சிக்கும் செய்யும் துணை யாது? அல்லது ஓசை நயம், கருத்துப் போக்குக்கும் உணர்ச்சிப் போக்குக்கும் இடையூறாக உள்ளனவா?

4. கையாண்ட சொற்கள் எப்படிப்பட்டவை? எழுத்தாளனின் தனித் தன்மையைக் காட்டுகின்றனவா? அவன் வாழ்ந்த பிரதேசம், அவன் வாழ்ந்த காலம், அவனுடைய தொழில், சமூக நிலை என்பவற்றைத் தெரிவிக்கின்றனவா? சிறப்பான சொற்பிரயோகங்களால், ஆசிரியரின் கருத்துக்களும் உணர்ச்சிகளும் பெறும் நயங்கள் எவை? நாட்டங்கள் எவை?

5. எழுத்தாளனின் தொனி எப்படி உள்ளது? எழுத்தாளன் தனக்குத் தானே பேசுகிறானா? பொது மக்களை நோக்கிப் பேசுகிறானா? தான் படைத்துக் கொண்ட ஒரு பாத்திரத்தை நோக்கிப் பேசுகிறானா? விடயங்கள் நன்கு அறிந்தவன் என்ற முறையிலே அதிகாரத் தோரணையில் எழுதுகிறானா?

6. எழுத்தாளன் வாசகனுக்குத் தரும் மதிப்பு எப்படிப்பட்டது?, வாசகனைத் தனக்குச் சமனாக மதிக்கிறானா, தாழ்ந்தவனாக மதிக்கிறானா? எழுத்தாளன் கையாண்ட எந்தச் சொற்களை ஆதாரமாகக் கொண்டு, நாம் இது பற்றி முடிவு கட்டலாம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எழுத்தாளனின் கொள்கைகள் பற்றி ஏதும் அறிய முடிகிறதா? அவனுடைய வாழ்க்கை நோக்கு எப்படிப்பட்டது? தத்துவச் சார்பு யாது?

கவிதையிலே, குறிப்பாக உணர்த்தப்படும் பொருள், ஓசை நயம், கற்பனை, உவமை, உருவகம் போன்ற அணிச் சிறப்புகள் கவனிக்கப்பட வேண்டியவை.

கவிதை மதிப்பீட்டிற்குரிய சில கேள்விகளும் முன் சொன்ன பாடத்திலே தரப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

1. கவிதையின் வெளிப்படைப் பொருள் யாது? குறிப்புப் பொருள் உண்டா? அது யாது?

2. உவமை, உருவகங்களான உத்திகள், கவிதையின் கருத்துக்கும் உணர்ச்சி வெளிப்பாட்டுக்கும் எவ்வாறு உதவுகின்றன?

3. கவிதையின் ஓசை எப்படிப்பட்டது? அவ்வோசை பொருட் பேற்றுக்கும் உணர்ச்சிப் பேற்றுக்கும் எவ்வாறு உதவுகிறது?

4. கவிதையின் முழு மொத்தமான பயன் யாது?

இலக்கியத்திலே சமூகவியற் பார்வை உள்ளதா என்பதைப் பார்க்கையில், செய்முறைத் திறனாய்வு எவ்வாறு அமைய வேண்டும்?

இலக்கியப் படைப்பாளி, வாசகர், இலக்கியப் படைப்பு ஆகிய மூன்று அம்சங்களுக்கும் இடையே உள்ள தொடர்பினால் உருவாக்கப் படுவது சமூகவியற் பார்வை என்ற உண்மை நிலை தெளிவாகியுள்ளது என்று பேராசிரியர் க. கைலாசபதி விளக்கம் அளிக்கிறார்.

ஆக்க இலக்கியமும் அறிவியலும்

யாழ்ப்பாண வளாகத் தமிழ்த்துறை அதன் முதலாவது வெளியீடாக 'ஆக்க இலக்கியமும் அறிவியலும்' என்ற தொகுப்பை, 1977 ஆம் ஆண்டில் வெளியிட்டது. அதிலே திறனாய்வாளர் கைலாசபதி அவர்கள் ஆற்றிய உரையும் சேர்க்கப்பட்டுள்ளது.

அழகியலைப் பற்றிப் பேசினால் அது 'பூர்ஷுவா' (பணக்கார மத்தியதர வர்க்கம்) தத்துவம் என்னும் பொருள்படச் சில தீவிர மார்க்சிய வாதிகள் வலியுறுத்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சமயம், நிதானமான மார்க்சிய விமர்சகர்கள் அழகியலைப் புறக்கணிப்பதில்லை என்பதையும் நாம் கவனித்தல் வேண்டும்.

பேராசிரியர் க.கைலாசபதி வலியுறுத்திவந்த திறனாய்வு நோக்கு எத்தகையது என்பதை பின்வரும் கட்டுரைப் பகுதியிலிருந்து புரிந்து கொள்ளலாம்:

பூர்ஷுவா சமூகவியல்வாதிகளைப் போலவே நமது பெரும்பாலான எழுத்தாளரும் ஒன்றிணைக்கப்பட்ட தத்துவார்த்த நோக்கின்றித் தமது சின்னஞ்சிறு உலகங்களைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கின்றனர்.

எவ்வாறு பூர்ஷுவா சமூகவியல்வாதிகள் மனித சமுதாயத்தின் முழுமையான வளர்ச்சிப் போக்கு, வர்க்க வேறுபாடுகள், உற்பத்தி உறவுகள் முதலிய அடிப்படைகளை மனங்கொள்ளாமல், வர்க்க வித்தியாசங்களைக் கடந்தவர்களாகக் கருதப்படும் மாணவர்கள், இளைய தலைமுறையினர், கார் சாரதிகள், விபசாரிகள், நாடோடிகள், புலம் பெயர்வோர்கள் முதலிய சிறுசிறு குழுக்களைப் பற்றி 'சமூகவியல்' ஆய்வுகள் நடத்தி வந்துள்ளனரோ, அவ்வாறு நமது எழுத்தாளரும் வர்க்கங்களை மறந்து தனி மனிதர்களைப் பற்றியும் சிறுசிறு குழுக்களைப் பற்றியும் எழுதி வந்துள்ளனர்.

பூர்ஷுவா சமூகவியலாளர் 'பூர்வீகக் குடிகள்' குறித்தும் 'புராதன மக்கட் கூட்டம்' பற்றியும் சுவையான மானிடவியல் ஆய்வுகள் நடத்தி வந்திருப்பதைப் போலவே நமது எழுத்தாளரும் பழங்காலத்து ராஜா ராணிக் கதைகளையும் கொண்டிருக்கின்றனர்.

சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கி, நுணுக்கமாக விளிப்பது, நடப்பியலைக் கண்டு மனமுடைவது, அதனைக் கிண்டல் செய்வது, சிறுமையைக் கண்டு சீறுவது, சில சமயம் உலகினையே சபிப்பது என்றெல்லாம் எத்தனையோ மனப்போக்குகளை நவீன இலக்கியத்திற் காணக்கூடியதாய் உள்ளது.

இப்போக்குகள் ஒவ்வொன்றும், நமக்குகந்த உத்திகளை உருவாக்கியுள்ளமையும் தெளிவு.

எனினும், நிதானமாக நோக்கினால், இப்போக்குகள் அனைத்தும் பூர்ஷுவா உலக நோக்கின் விகற்பங்கள் என்னும் உண்மை புலப்படும். 'ஆக்க இலக்கியமும் சமூகவியலும், ஆக்க இலக்கியமும் அறிவியலும்' பக்கம் 46 - 48)

அதே சமயம், அவர் வலியுறுத்திய மற்றொரு கருத்தையும் இங்கு அடிக்கோடிடுவது முறையாகும். அக்கருத்து இதுதான்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகிய அர்த்தங் கற்பித்து இத்தகைய எழுத்தாளர்கள் நேரடியாகவே 'பூர்ஷுவா' வர்க்கத்தின் நலன்களைப் பிரக்ஞை பூர்வமாகக் கட்டிக்காக்க முனைபவர்கள் என்றோ அல்லது ஆளும் வர்க்கத்தின் அடிவருடிகள் என்றோ நாம் விவரிக்க வேண்டியதில்லை.

உண்மையில் முதலாளித்துவ சமுதாயத்தின் பௌதிக நிலைமைகளின் வரம்புக்குள் நின்று கொண்டு இவர்கள் உலகை நோக்குவதால், அதனால் கட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றார்கள்.

இவர்கள் பூர்ஷுவாத் தத்துவார்த்த எல்லையைத் தாண்ட மாட்டாதவராய் உள்ளனர்.

பூர்ஷுவா சமுதாயத்தை எத்துணை விமர்சித்தாலும் அதிற் காணப்படும் பிரச்சினைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் தீர்வு காண்பதற்கு ஒரே வழி அவற்றை இல்லாமற் செய்வதே என்னும் அடிப்படை உண்மையை உணராமையே இவர்களது குறைபாட்டிற்குக் காரணமாகும்.

எனவே, தாம் அங்கீகரித்துள்ள சமுதாயத்தின் பிரச்சினைகளை மீண்டும் மீண்டும் சித்திரிப்பதல்லாது, யதார்த்தத்தில் அவற்றுக்குத் தீர்வு காணக்கூடிய மார்க்கத்தை அவர்களாற் காட்டமுடியாதிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

கலை நயமும் திறனாய்வும்

கலைநயம் என்னும் பொழுது அப்படைப்பு உள்ளடக்கத்துக்கு இணங்கிய உருவம் கொண்டுள்ளதா என்பது போன்ற வடிவ அம்சங்களிலும் திறனாய் வாளன் கவனஞ் செலுத்துகிறான். அதன்பின் குறிப்பிட்ட உருவத்தில் அல்லது வடிவத்தில் படைப்பு அமைவது நியாயந்தானா என்று பார்க்க எத்தனிக்கிறான்.

ஒரு படைப்பு என்ன கூறுகின்றது, எப்படிக் கூறுகின்றது, ஏன் அப்படிக் கூறுகின்றது என்ற அடிப்படைக் கேள்விகளுக்குப் பதில் கண்டதும், திறனாய்வாளன் தனது இலக்கியக் கொள்கை, திறனாய்வுக் கொள்கை ஆகியனவற்றின் நிலைப்பாடுகளில் நின்று திறனாய்வு செய்யப்படும் படைப்பை ஏற்றுக்கொள்கிறான், அல்லது நிராகரிக்கிறான்.

ஒரு படைப்பு சில திறனாய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதும், சில 'விமர்சகர்களால்' நிராகரிக்கப்படுவதும் அந்தந்த விமர்சகர்களின் நிலைப்பாட்டைப் பொறுத்தது. அதே சமயத்தில் ஒரு விமர்சகர் பொறுப் பின்றி அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக் கூடாது. காரணங்களை அவர் சரியாக எடுத்துக் கூறவேண்டும்.

'கலை நயம்' என்றால் என்ன?

முதலில் அழகியல் வாதம் (Aestheticism), கலை நயம் (Artistic Qualities) என்ற பதத்திற்குச் சமமானதல்ல என்பதை அவதானியுங்கள்.

கலை கலைக்காகவே என்பது தான் அழகியல் வாதத்தின் சாரம். அழகியல் வேறு கலை இலக்கியப் படைப்புகளில் கட்டமைதி, கவினுறு நயமாக அமைதல், உறுதிப் பொருள்களின் பொருத்தப்பாடு போன்ற வற்றை உள்ளடக்கும் கலை நயம் வேறு.

ஒரு படைப்பில் 'கலைநயம்' குன்றியுள்ளது என்று ஒருவர் கூறும் பொழுது, அப்படைப்பின் உள்ளடக்கத்தை அவர் மழுங்கடிக்கிறார் என்று திரித்துக் கூறுவது தவறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தும் வடிவமும் இணைந்தது தான் கலைநயம். நல்ல கருத்துக் களை உகந்த விதத்தில் சொல்லும் பொழுது 'கலை நயம்' ஏற்படுகிறது.

அதே சமயம் நல்ல கருத்துக்கள், குறிப்பிட்ட இலக்கிய அல்லது கலைக்குரிய வகையின் அங்கீகரிக்கப்பட்ட வடிவ உறுதிப் பொருள்களின் அடிப்படையில் தரப்படாவிட்டால், 'கலைநயம்' குன்றி விடுகிறது.

உள்ளடக்கமும் உருவமும் சேர்ந்த விதத்தின் சிறப்பே 'கலைநயம்' ஒருவரின் நடைச் சிறப்பு மாத்திரமே 'கலைநயம்' அல்ல. அது ஓர் அம்சமே.

கருத்து, கதை சொல்லப்படும் விதம், கதைக் கட்டமைதி, கதாபாத்திர வார்ப்பு, மொழியைப் பயன்படுத்தும் முறை (புதுப்புனைவு, கற்பனை சிருஷ்டித்திறன்), கதையைப் படித்த பின்னர் வாசகர் மனதில் எழும் திருப்தி, செயலூக்கத் தூண்டல் போன்றவையும் 'கலைநயம்' தான்.

விமர்சகர் பூர்ஷுவா வர்க்கத்தைச் சேர்ந்தவராயினும், ஒரு படைப் பைக் கருத்துக்காக மட்டும் அல்லது உருவத்திற்காக மட்டும் தூக்கிப் பிடித்து விமர்சிப்பதில்லை இரண்டையும் சேர்த்துத்தான் மதிப்பிடுகிறார்.

பின்னர், எந்த அம்சம் அப்படைப்பில் தலை தூக்கிநிற்கிறது என்பதையும் போக்கோடு போக்காகச் சொல்லிச் செல்கிறார்.

பாட்டாளி வர்க்கப் படைப்புக்களை அலசும் பொழுது, விமர்சன மதிப்பீட்டு அளவுகோல்கள் வேறாகவும், மத்தியதர வர்க்கப் படைப்புக் களை அணுகும் பொழுது திறனாய்வு முறை அளவுகோல்கள் வேறாகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

அங்கீகரிக்கப்பட்ட இலக்கிய வகையில் (Genre) இலக்கிய வகை அமைந்திருக்கிறதா என்று பொதுப்படப் பார்க்கும் அதே சமயம், உருவம் (Form) என்று வரும்பொழுது, பாட்டாளி வர்க்கப் படைப்புகளுக்கு மத்தியதரவர்க்கப் படைப்புகளில் எதிர்பார்க்கப்படும் கட்டமைதி இருக்கின்றதா என்று வலியுறுத்தாமல் விட்டு விடலாம்.

உள்ளடக்கம் என்று வரும்பொழுது, எது எதில் முற்போக்கான (வர்க்கப் போராட்டம் மாத்திரம்தான முற்போக்கு அல்ல) கருத்துக்கள் இருக்கின்றனவோ, அதைச் சிலாகித்துப் பேசலாம்.

என்னைப் பொறுத்த மட்டில், நமது சமுதாய அமைப்பிலே வாழ்க் கையிலே இரண்டு வர்க்கங்களின் தாக்கங்களும் இருப்பதனால், பூர்ஷுவா (Boureois) எழுத்தையும் நான் வரவேற்கிறேன். ப்ரோலிட்டோரியன் (Proletarian - பாட்டாளி) எழுத்தையும் வரவேற்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு எழுத்துக்கள் மூலமும் வாழ்க்கை அனுபவங்கள் வெளிப் படுத்தப்படுகின்றன.

எனவே, ஒன்றை மறுத்து அல்லது கண்டித்து மற்றதை மாத்திரம் கட்டிப்பிடிக்க முடியாதிருக்கிறது.

'கலைநயம்' என்ற பதம் எல்லா மார்க்சிய விமர்சகர்களுக்கும் பீதியை உண்டு பண்ணுவதில்லை. சிலருக்கு மாத்திரமே, அது அருவருப்பை உண்டு பண்ணுகிறது.

உதாரணமாக, பல உலக மார்க்சிய விமர்சகர்கள் (அவர்கள் பூர்ஷுவா வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும்) பூர்ஷுவா படைப்புகளையும், ப்ரோலிட்டேரியன் படைப்புகளையும் 'கலைநயம்' என்ற அம்சத்தின் அடிப்படையிலும் விமர்சித்திருக்கிறார்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவை ஆங்கிலம், பிரெஞ்ச், ஜேர்மன் போன்ற மொழிகளிலேயே இருக்கின்றன. அமெரிக்க நாவலாசிரியர்களை விமர்சிக்கும் சோவியத் விமர்சகர்களும் கலை நயத்தை ஒதுக்கவில்லை. லூசூன், மா ஓ போன்றவர் களும் 'கலைநய'த்தை ஒதுக்கவில்லை.

இன்னுமொரு விஷயம்: பூர்ஷுவா விமர்சகர்கள் எல்லோருமே மார்க்சிய அர்த்தத்தில் கூறப்படும் 'முற்போக்கு'க் கொள்கைகளுக்கு எதிரானவர்கள் அல்ல.

இக்கூற்றுக்களுக்கு ஆதாரமாக மார்க்சிய மேதைகளின் கருத்துக் களைத் தொகுத்துக் கூறலாம்.

பொதுவுடமைத் தத்துவத்தின் தந்தையான கார்ல் மார்க்ஸ், இங்கிலாந்து பூர்ஷுவா எழுத்தாளர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், ''அரசியல் வாதிகள், பிரசாரக்காரர்கள், தார்மீகவாதிகள் அனைவரும் ஒருங்கே தெரிவித்த கருத்துக்களைவிட இந்த எழுத்தாளர்கள் (டிக்கன்ஸ், தக்கரே, திருமதி கஸ்கெல், எமிலி புரொண்டே) கலை நயத்துடனும், சொற்றிறனு டனும் அரிய பல அரசியல், சமுதாய உண்மைகளைத் தெரிவிக்கிறார்கள்'' எனக் கூறியுள்ளார்.

கலைத் திறனற்றவர்கள், தமது கலை வறுமையை மறைக்கவும், இலகுவில் பாட்டாளி வர்க்க மக்களின் கருத்தைக் கவரவும், சுலோகங் களில் தமக்குள்ள பிடிப்பை வெளியுலகுக்குக் காட்டவும் முற்படுவர் எனவும் எங்கல்ஸ் முன்னமே கூறியிருக்கிறார்.

எழுத்தாளர்கள் எந்தவித நிர்ப்பந்தங்களுக்கும் அடிபணியாமல், தமது இலட்சியங்களுக்கு ஏற்பச் சுதந்திரமாக, சிருஷ்டி இலக்கியத்தில் ஈடுபடலாம் என லெனின் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத் துறையில் படைப்பாளிக்கு முழுச் சுதந்திரமும் அளிக்கப்பட வேண்டும் என ட்ரொட்ஸ்கி கூறியிருக்கிறார்.

குறிப்பிட்ட கலை வடிவத்தையோ சிந்தனையையோ நிலை நிறுத்தவும், மற்றையதை மழுங்கடிக்கவும் கூடியதாகச் சட்ட திட்டங்களைப் பயன்படுத்துவது கலைக்கும் அறிவியலுக்கும் பெருந்தீங்கு விளைவிக்கும் என மா ஓ கூறியுள்ளார்.

இப்படிக் கூற்றுக்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இங்கு வலியுறுத்த வேண்டியது என்னவென்றால், நடைமுறைக்கு உகந்ததாக இலட்சியம் அமைய வேண்டும். சில இலட்சியங்கள் கொள்கையளவில் நன்றாகத்தான் இருக்கின்றன. நடைமுறையில் சாத்தியமாவதில்லை.

அதற்கு முக்கிய காரணமே அவ்விலட்சியங்களைப் புரட்சிகரமாகக் கூறுபவர்களே, அவற்றிற்கு உதாரண புருஷர்களாய் இருப்பதில்லை.

சமதர்மம், ஊழல் நீக்கம், வர்க்க பேதமற்ற சமுதாயம் போன்றவற்றை விரும்புபவர்கள் பாட்டாளி வர்க்கத்தில் மாத்திரம்தான் இருக்கிறார்கள் என்றில்லை.

எனவே, பூர்ஷுவா இலக்கியம் என்றும் பூர்ஷுவா விமர்சனம் என்றும் ஏனையவற்றை ஒதுக்கிவிட்டு (எந்தவித சமரசமும் ஏற்படுத்தாமல்) பாட்டாளி வர்க்க சர்வதிகாரத்தைக் கொண்டுவர முடிவதில்லை.

அப்படித்தான் கொண்டு வந்தாலும் அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமா, ஆயுதப் படையினரின் நிர்வாக அதிகாரமா என்றும் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

'கலாசாரப் புரட்சிகள்' தனிமனித - தனிமனுஷி சர்வாதிகாரத்திற்குத்தான் இட்டுச் செல்லும் என்பது அண்மைக்கால வரலாறு.

கலைநயம், அழகியல் ஆகிய சொற்கள் ஒரே பொருளைக் குறிப்பன அல்ல. கலைநயம் (Artistic Quality) என்பது உள்ளடக்கத்துடன் இணைந்த உருவ அமைப்பின் சிறப்புகள் (அதாவது பொருத்தப்பாடும், சிருஷ்டித் திறனும்) மதிப்பீட்டில் கவனத்தைப் பெறுகின்றன. அழகியல் (Aestheticism) என்பது அகவயச் சார்பான இரசனை அழகு என்பதும் காண்டலும் கற்பனை அனுபவமுமே என்பதும் அழகியல் வாதம்.

பேராசிரியர் க. கைலாசபதி எழுதிய 'இலக்கியமும் திறனாய்வும்' என்ற நூலில் இது பற்றிச் சிறிது விளக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மதிப்பீடுகளுக்கு அடிப்படையாக உள்ள கருதுகோள்களாக நான் கருதுபவற்றுள் சில பின்வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. படைப்பில் உண்மையும் நேர்மையும் இருத்தல் வேண்டும்.

2. படைப்பாசிரியர் எடுத்துக் கொண்ட பொருளைக் கலைநயமாகக் கூறியிருத்தல் வேண்டும். உள்ளடக்கத்துக்குப் பொருத்தமான உருவத் தொடர்பமைதி - சிருஷ்டித்தன்மை, புத்தாக்கமான பொருத்த முடைய பிரயோகங்கள் ஆகியன இருத்தல் வேண்டும்.

3. படைப்பாளியின் படைப்பினால் பெறப்படும் பயன்.

4. மதிப்பீடு செய்பவன் பெறும் அனுபவம்.

5. கலைநயம் என்பது முற்றிலும் உருவம் பற்றிய விஷயம் இல்லை. 'கலைநயம்' என்பது இங்கு உள்ளடக்கம், உருவம் இரண்டையும் தொட்டுச் செல்கிறது.

உருவமும் உள்ளடக்கமும் பிரிக்க முடியாதவைதான் என்றாலும், செயன் முறை திறனாய்வில் ஈடுபடும் ஒருவன் அவற்றைப் பிரித்துப் பார்த்தே திறனாய்வு செய்யவேண்டி இருக்கிறது.

படைப்பின் கட்டமைப்பு, நுணுக்கமாக ஆராயப்படுவதற்கு இது தேவை. அதே சமயம், இறுதி ஆய்வில், நிறைவு பெற்ற ஒரு படைப்பில் உருவத்தையும் உள்ளடக்கத்தையும் பிரிக்க இயலாது என்பது மனங் கொள்ளத்தக்கது.

இலக்கியக் கொள்கைகள் பல. விமர்சன அணுகுமுறைகள் பல. இலக்கியமே பல வகை. இந்த நிலைமையில், ஒரேயொரு விமர்சன அணுகுமுறைதான் சரியானது, ஏனையவை எல்லாம் பிழையானவை என்று எந்த ஓர் இலக்கியவாதியும் கூறமாட்டார்.

'கலை கலைக்காகவே' என்ற கோட்பாடு அற்றுப் போய்விட்ட பின், சிலர் 'கலைநயம்' என்பதை அழகியல் வாதத்துடன் சமன்படுத்துகிறார் களே. இது ஏன்?

'அழகிய வாதம்' என்ற கோட்பாடு கடந்த 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலே அற்றுப் போய்விட்டது. 'கலை கலைக்காக' என்பது இக் கோட்பாட்டின் சாரம். கலை இலக்கியத்தில் பிரச்சாரம் இருக்கப்படாது. கலை என்பது அரசியலுக்கும் வர்க்க நிலைக்கும் அப்பாற்பட்டது என்பது போன்ற கருத்துகள் எல்லாம் இந்த அழகியல் வாதத்தின் அடிப்படையில் எழுந்த பிற்போக்கான கருத்துக்கள் தான்.

ஆனால் இவற்றிற்கும் 'கலைநயம்' என்பதற்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் தீவிர மார்க்சிய விமர்சகர்களாக இருந்து, இப்பொழுது நிதானமான நிலைக்கு வந்துள்ள எஸ்.என். நாகராஜன், பரிமாணம் கேவை 'ஞானி', படிகள் 'தமிழவன்', எஸ்.கே. ஆர். மற்றும் 'குணா', எஸ்.வி. ராஜதுரை, 'இலக்கிய வெளிவட்டாரக்' குழுவினர் போன்ற தமிழ் நாட்டு விமர்சகர்களின் எழுத்தையாவது (ஆங்கிலம் போன்ற பிற மொழி களில் வெளிவரும், மாறிவரும் மார்க்சிய அளவு கோல்கள் பற்றி அறிய வாய்ப்பில்லாது போனாலும்) படித்துப் பார்த்தால், வரட்டுக் கூச்சலையும் திரிபு நடவடிக்கைகளையும் சிலர் மேற்கொள்ளார். மிஞ்சிப் போனால், டெரி ஈகிள்டனின் (Terry Eagleton) நூல்களையாவது ஆங்கிலத்தில் படித்துப் பார்க்கட்டும்.

பட்டியல் தொகுத்து வாசகருக்கு அபிப்பிராயம் தெரிவிப்பது என்றால், அங்கு விமர்சனப் பாங்கே வந்து விடுகிறது. பட்டியல் தருவது, ஒருவிதத் தேர்வு அடிப்படையில் நிகழ்த்தப்படுகிறது. அந்தத் தேர்வு, விமர்சனக் கருதுகோள்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

விமர்சகன் என்பவன், தங்க கோபுரங்களில் இருப்பவன் அல்ல. குறைகளும் நிறைகளும் உள்ள ஒரு சாதாரண மனிதன். பல மட்டங்களில் விமர்சகன் செயற்படுகிறான். பிரக்ஞைபூர்வமாகவே Literary Journalisam இல் ஈடுபாடுடைய பத்தி எழுத்துத் திறனாய்வாளர்கள் இருக்கிறார்கள்.

பாட்டாளி வர்க்க இலக்கியம் இருப்பது போல, பூர்ஷுவா வர்க்க இலக்கியமும் இருக்கையில், பிரச்சினை எங்கு எழுகிறது?

இதில் பிரச்சினைக்கே இடமில்லை. சமுதாயம் இரண்டு வர்க்கங்களை யும் கொண்டது போல, இலக்கியமும் இரண்டு வர்க்கச் சார்புடையதாக இருக்கிறது.

பூர்ஷுவா இலக்கியமும் புரோலிட்டேரியன் இலக்கியமும் நமக்குத் தேவை. அப்பொழுதுதான் மற்றப் பக்கத்தையும் நாம் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

அதிதீவிரவாதமும், வன்செயலும், வீரதீரமும் தான் பாட்டாளி வர்க்க இலக்கியம் என்று சிலர் கூறினால், அவருடைய கணிப்பில் நான் பூர்ஷுவா விமர்சகனாகத் தான் படுவேன்.

விஷயம் என்னவென்றால் பூர்ஷுவா வர்க்கத்தினன் கூட, புரோலிட் டேரியன் சார்பாக இருக்கலாம் என்பது மறந்து விடப்படுகிறது.

பூர்ஷுவாக்களும் 'முற்போக்காக' (எனது அளவைக் கற்களின் அடிப்படையிலே) எழுதுகிறார்கள், புரோலிட்டேரியன்களும் முற் போக்காக எழுதுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலேதான் செ. கணேசலிங்கனின் அரசியற் சார்பு கொண்ட நாவல்களும் எனக்குப் பிடிக்கின்றன. சுந்தர ராமசாமியின் அரசியற் சார்பு கொண்ட நாவல்களும் பிடிக்கின்றன.

டானியல், இளங்கீரன், பெனடிக்ட் பாலன், யோகநாதன், காவலூர் ஜெகநாதன், சுதந்திரராஜா, அகஸ்தியர் போன்றோரின் 'கொமிட்டட்' நாவல்களும் பிடிக்கின்றன. செங்கை ஆழியான், ஞானசேகரன், புலோலியூர் சதாசிவம், செம்பியன் செல்வன், சொக்கன், நந்தி, அருள்சுப்பிரமணியன், அ.ஸ. அப்துல் ஸமது, வ.அ. இராசரத்தினம், பாலமனோகரன் போன்றவர் களின் சமூக நாவல்களும் பிடிக்கின்றன.

சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன், அசோகமித்திரன், இந்திரா பார்த்த சாரதி, ஜானகிராமன், க.நா.சு., ந. சிதம்பர சுப்பிரமணியன், ஆதவன், சா. கந்தசாமி போன்றவர்களின் படைப்புகளும் பிடிக்கின்றன.

ரகுநாதன், சமுத்திரம், டி. செல்வராஜ், க. செயப்பிரகாசம், ராஜம் கிருஷ்ணன் போன்ற நாவலாசிரியர்களையும் பிடிக்கிறது.

சுஜாதா, ஆர்வி, எம்.வி.வி., அகிலன், நா. பார்த்தசாரதி போன்ற நாவலாசிரியர்களையும் பிடிக்கிறது.

இங்கு பெயர் குறிப்பிடப்படாத மற்றைய நாவல் ஆசிரியர்களின் எழுத்தும் பிடிக்கிறது.

இலக்கியத்தில், பூர்ஷுவா வர்க்கத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் எழுத்து மாத்திரமா வரவேற்கப்பட வேண்டும்.

இதற்கான பதிலை, கவிஞர் எம். ஏ. நுஃமான், என் சார்பிலே தருகிறார்.

'சமூக, அரசியல் பிரச்சினைகளுக்கு மட்டுமே இலக்கியத்தில் இடம் உண்டு என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை.

முற்போக்கு எழுத்தாளர்கள், சமூக அரசியல் பிரச்சினைகள் பற்றியே எழுத வேண்டும். இவற்றுக்குப் புறம்பான (காதல் போன்ற) தனிப்பட்ட விஷயங்களை எழுதக் கூடாது என்று பல முற்போக்காளர்கள் கருது வதாகத் தெரிகிறது.

இது அபத்தமான கருத்து என்பது என் அபிப்பிராயம். முற்போக் காளர்கள் தனிப்பட்ட விஷயங்கள் என்று சிலவற்றை ஒதுக்குவதும், முற்போக்கை எதிர்க்கும் இலக்கியவாதிகள் அரசியல் விஷயங்கள் என்று சிலவற்றை ஒதுக்குவதும் அபத்தமானது, இலக்கியத்துக்குப் புறம்பானது. இது என் கருத்து'. (அழியா நிழல்கள்' என்ற தனது கவிதைத் தொகுப்பிலே எம்.ஏ. நுஃமானின் முன்னுரைப் பகுதி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

ஈழத்தில் திறனாய்வு

தமிழ் கூறும் நல்லுலகிலே ஈழத்து விமர்சனத்துறை (திறனாய்வு) கற்றோர் மத்தியில் பெரிதும் வரவேற்கப்பட்டு மதிக்கப்படுகிறது.

இது உண்மை, வெறும் தற்புகழ்ச்சியல்ல.

குறிப்பாக, இலக்கியக் கொள்கை, இலக்கிய வரலாறு, இலக்கியத் திறனாய்வு, மதிப்புரை, கலை விமர்சனம் ஆகிய பிரிவுகளிலே தனிச் சிறப்பான வளர்ச்சியைக் காணலாம்.

இந்த வளர்ச்சியைத் தமிழ்நாடு, மலேசியா போன்ற இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்கள் மாத்திரமல்லாது, தமிழியல் பயிற்றுவிக்கும் பிற நாட்டுப் பல்கலைக்கழகங்களும் ஏற்றுப் போற்றியிருக்கின்றன.

பல்கலைக்கழக மட்டத்தில் மாத்திரமன்றி, எழுத்தாளர்கள் மட்டத் திலும் ஈழத்து விமர்சனத்துறை அங்கீகாரம் பெற்றிருக்கிறது. உதாரணமாக, இலக்கிய விமர்சன ஏடாக, 1959இல் ஆரம்பிக்கப்பட்டுச் சில வருடங்கள் தொடர்ச்சியாக வெளிவந்து நின்றுபோன 'எழுத்து' (சி.சு. செல்லப்பா அதன் ஆசிரியர்) என்ற ஏடும், 'சரஸ்வதி' (விஜயபாஸ்கரன், அதன் ஆசிரியர்) என்ற மற்றோர் சஞ்சிகையும், பின்னர் 'தாமரை', 'தீபம்', 'கணையாழி', 'வைகை', 'படிகள்', 'பரிமாணம்', 'யாத்ரா' போன்ற சிற்றேடுகளும் ஈழத்து விமர்சகர்களின் கட்டுரைகளைப் பிரசுரித்து வந்துள்ளன. அவ்வப்போது இலங்கை விமர்சன முயற்சிகளைப் பாராட்டி விதந்துரைத்துள்ளன.

இலங்கையர்கோன், சோ. சிவபாதசுந்தரம் போன்றோரின் விமர்சனக் கட்டுரைகள் தமிழ் நாட்டில் முன்னர் பிரபல்யம் பெற்றதாகவும் அறிகிறோம்.

நவீன திறனாய்வுப் போக்குகள், தமிழ் நாட்டில் பிரபல்யம் பெறக் காரணமாயிருந்தவர்கள் ஈழத்தவரே என்று கூறினும் மிகையாகாது. பேராசிரியர்கள் கனகசபாபதி கைலாசபதி, கார்த்திகேசு சிவத்தம்பி ஆகிய இருவரும் நாம் பெருமைப்படக்கூடிய இரு ஆய்வறிவாளர்கள் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சிவத்தம்பியின் விமர்சன முயற்சிகள் பெரும்பாலும், வரலாற்றுக் கண் கொண்டவையாகவும் மார்க்சிய அழகியல் சார்ந்தவை யாகவும் இருக்கக் காணலாம்.

1. இலங்கையில் தனிப்பட்ட இலக்கிய ஆர்வமும், குறிப்பிட்ட இலக்கிய முயற்சிகளும் தோன்றிய காலந்தொட்டே, இலக்கியங்களை இலங்கையின் சமூகப்பாட்டுக் கோலத்துடன் இணைத்துப் பார்ப்பதில் ஆர்வம் காட்டப்பெற்று வந்துள்ளது.

2. இலங்கைத் தமிழ் இலக்கியப் பயில்வாளர்கள், இந்தியத் தமிழ் இலக்கியப் பயில்வாளரிலும் பார்க்கப் பிரதேச, பிறபண்பாட்டுப் பாரம்பரியங்களை அறிவதற்கும், தழுவியமைத்துக்கொள்வதற்கும் இருந்த வாய்ப்புகள்.

3. இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பங்கு.

4. ஆக்க இலக்கியக் கர்த்தாக்களுக்கும் விமர்சகர்களுக்குமிடையே, ஒருவர் கருத்துரைகளினால், மற்றவர் நன்மையடையும் ஒரு பரஸ்பர நல்லுறவு நிலை.'

மேற்கண்டவாறு இலங்கையின் விமர்சன முனைப்புக்கான காரணிகள் சிலவற்றைப் பேராசிரியர் சிவத்தம்பி எடுத்துக்கூறியுள்ளார். ('ஈழத்தில் தமிழ் இலக்கியம்' என்ற அவரது நூலைப் பார்க்கவும்.)

ஈழத்து இலக்கிய விமர்சன மரபு வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுபவர்கள் யாவர் என்றும் சிவத்தம்பி நிரற்படுத்தியுள்ளார்:

1. ஈழத்து இலக்கிய உரைகாரர்கள்.

2. ஆசிரியப் பரம்பரை முக்கியஸ்தர்கள்.

3. பத்திரிகைத் தொடர்புடைய அழகியல்வாத விமர்சகர்கள்.

4. சமூக நோக்குடைய, இலக்கிய விமர்சன திறன்வாய்ந்த மறுமலர்ச்சிக் குழுவைச் சேர்ந்த ஆக்க இலக்கியப் படைப்பாளிகள்.

5. முற்போக்கு இலக்கியவாத முன்னோடிகள்.

6. பல்கலைக்கழக வழிவந்த முற்போக்கு விமர்சகர்கள்.

7. முற்போக்கு விமர்சகர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. முற்போக்கு இலக்கியத் தாக்கம் காரணமாக அதனை ஆதரித்தும், எதிர்த்தும் நின்ற ஆக்க இலக்கிய கர்த்தாக்களாகிய விமர்சகர்கள்.

9. கல்விப் பயிற்சி வழியாக இலக்கிய விமர்சனத்தைத் தமது ஆய்வுத் துறையாகக் கொண்டுள்ள விமர்சகர்கள். ('ஈழத்தில் தமிழ் இலக்கியம்')

ஈழத்து நவீன தமிழ் இலக்கிய விமர்சகர்கள் யாவர்? அவர்களுடைய பின்னணி என்ன? அவர்களுடைய இலக்கிய காலச் சூழ்நிலை என்ன? அவர்கள் கொண்டுள்ள நேரடி அல்லது மறைமுக நோக்கங்கள் என்ன? இவை அடிப்படையான கேள்விகள்.

கோட்பாட்டு அடிப்படையிலும், கையாளப்படும் விமர்சன முறை அடிப்படையிலும் அவர்களை வேறுபடுத்த முடியும்.

சில விமர்சகர்கள் சித்தாந்த அடிப்படையில் எழுத, வேறு சிலர் விவரணப் பாங்கில் எழுதுவார்கள்.

ஒரு சிலர் வரலாற்றுக் கண்கொண்டு எழுதினால், வேறு சிலர் அதனைப் புறக்கணித்து எழுதுவார்கள். சிலர் தார்மீக நெறிக்கு ஆட்படு வார்கள். பலர் சம்பிரதாயமாக இருப்பார்கள். ஒரு சில விமர்சகர்கள் அகவயப்பட்டு எழுதும் வேளையில், வேறு சிலர் பகுப்பாய்வு முறையில் விமர்சிப்பார்கள். சிலருக்குப் பண்டித மனப்பான்மை உண்டு. வேறு சிலருக்கு நவீனத்துவ சிந்தனைகள் உண்டு இவ்வாறு விமர்சகர்களை வகுக்கமுடியும்.

விமர்சகர்கள் எந்தப் பின்னணியில் நின்று எழுதுகிறார்கள்?

அவர்களுடைய வாசகர்கள் யார்? அவர்களுடைய நோக்கங்கள் என்ன என்பதை நாம் முதலில் கவனித்தல் வேண்டும்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறையில் மூன்று விதமான விமர்சகர்கள் இருக்கிறார்கள் எனக் கூற முடியும்.

முதலாவது பிரிவினரைப் பல்கலைக்கழக விமர்சகர்கள் என அழைக் கலாம்.

இந்த விமர்சகர்கள் பல்கலைக்கழக வளாகங்கள் அல்லது உயர்கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் ஆவர்.

இவர்கள் பெரும்பாலும் தமது வர்க்கத்தினருக்கே (அதாவது சக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமாக) எழுதுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தைப் பாடமாகக் கொண்ட மாணவர்கள் இந்த விமர்சகர்களினால் பெரும் பயன் அடைகிறார்கள்.

தமிழ் இலக்கியத்தை ஒரு பாட நெறியாகப் பயிலும் மாணவர்களை வழிப்படுத்தி, ஆற்றுப்படுத்துபவர்கள் இந்தத் திறமைசார்ந்த பல்கலைக் கழக விமர்சகர்களே.

உண்மையில் 'இலக்கியத் திறனாய்வு' என்ற தனிப் பிரிவுக்கு அடக்க முடியாவிட்டாலும், இலக்கிய விமர்சனம் சார்ந்த, மொழி, மொழியியல், வரலாறு, சரிதை போன்றவற்றில் ஆய்வை மேற்கொள்பவர்களையும், பல்கலைக்கழக விமர்சகர்கள் என அழைக்கலாம்.

இவர்களை ஆங்கிலத்தில் The Academics என்பார்கள். இவர்கள் அனைவரும் ஒத்த தரமுடையவர்கள் என்றோ பல்கலைக்கழக விமர்சகர்கள் பிரிவில் மாத்திரம் அடங்குபவர்கள் என்றோ கருதப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

உதாரணமாக, கலாநிதிகள் கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்களை, ஏனைய பிரிவுகளிலும் அடக்கலாம்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய விமர்சகர்களில் இரண்டாவது பிரிவினரை, ஆக்க இலக்கியத்தில் ஈடுபட்ட விமர்சகர்கள் எனலாம்.

இவர்கள் விமர்சனத்தில் முழுமூச்சுடன் ஈடுபடாமல் ஒரு துணைச் சாதனமாகவே விமர்சனத்தைக் கையாளுகின்றனர். இவர்கள் அனைவரும் பல்கலைக்கழக விமர்சகர்கள் போன்று புலமை உடையவராக இல்லாவிட்டாலும் தமது படைப்பின் அழகியல் அம்சங்களுக்கு ஆதரவு திரட்டுவதிலும், நல்ல இரசனையை வளர்ப்பதிலும் ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

இவர்களுள் மு. தளையசிங்கம், முருகையன், நுஃமான், சண்முகம் சிவலிங்கன், செ. கணேசலிங்கன், எஸ். பொன்னுத்துரை, மு. பொன்னம்பலம், அ. யேசுராசா, டானியல் அன்டனி, மு. கனகராசன், தெணியான், ரஞ்சகுமார், ஷஹுப், தெளிவத்தை ஜோசப், சாந்தன், சொக்கன், சி. சிவசேகரம், செ. யோகநாதன், கனக செந்திநாதன், சில்லையூர் செல்வராசன், அ.ந. கந்தசாமி போன்றோர் ஒரு சிலர்.

சோ. சிவபாதசுந்தரம், இலங்கையர்கோன், வைத்திலிங்கம், சோ. நடராஜா, யோ. பெனடிக்ட்பாலன், தெளிவத்தை ஜோசப், ஈழவாணன், செம்பியன் செல்வம், வரதர், வி. கந்தவனம், சபா ஜெயராசா, இமையவன், காவலூர் இராசதுரை, ஈழத்துச் சோமு, கனக செந்திநாதன், சு.வே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொக்கன். சிற்பி, சிவசரவணபவன், க. நவசோதி, புலோலியூர் ஆ. இரத்தின வேலோன், நெய்தல் நம்பி போன்றவர்களையும் இன்னும் சிலரையும் இந்தப் பிரிவில் அடக்கலாம்.

ஆனால், சக எழுத்தாளர்கள் இவர்களுடைய விமர்சனங்களைப் பொருட்படுத்தாதிருக்கும் பட்சத்தில், இவர்கள் பல்கலைக்கழக வட்டாரத் திற்கும் பொது வாசகர்களுக்குமாக எழுத வேண்டி ஏற்படுகிறது.

எனவே, இவர்களுடைய நடை, ஒரு வித பாண்டித்திய (அதாவது 'ஆழமான விமர்சனம்' என்ற பிரமையை அளிக்கத்தக்க) நடையாக அமைகிறது. அடிக்குறிப்புக்கள், 'ஆழத்திற்கு' ஓர் இலட்சணமாம்.

மூன்றாவது பிரிவு விமர்சகர்கள் வெகுசனத் தொடர்புச் சாதனங் களான வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி போன்றவற்றைப் பயன் படுத்தி, பொது வாசகர்களுக்காக எழுதும் பத்தி எழுத்தாள (Columnists) விமர்சகர்கள், இவர்கள் ஒரு சிலரே.

சாதாரண மக்களின் இரசனையை உயர்த்துவதில் இந்த விமர்சகர்களே பெரும் பங்கு வகிக்கிறார்கள்.

இவர்கள் சாதாரண வாசகர்களுக்கு எழுத வேண்டியிருப்பதனால் பண்டித மனப்பாங்கைக் கைவிட வேண்டியுள்ளது.

அடிக்குறிப்புக்களையும் விளக்கங்களையும் விரிவான பார்வை களையும் தவிர்க்க வேண்டியுள்ளது.

பத்திரிகைத் தேவையை முன்னிட்டுச் சுருக்கமாகவும், மேலோட்ட மாகவும் எழுத வேண்டியுள்ளது. இத்தகைய பத்திரிகை ரக விமர்சகர்களில் கே.எஸ். சிவகுமாரன், தெளிவத்தை ஜோசப், அந்தனி ஜீவா, காவலூர் ஜெகநாதன், பாமா ராஜகோபாலன், ஈழவாணன், யோகா பாலச்சந்திரன், எஸ். திருச்செல்வம் போன்றோரைக் குறிப்பிடலாம். இப்பொழுது உமா வரதராஜன், புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் போன்ற புதிய பத்தி எழுத்தாளர்கள் எழுதி வருகின்றனர்.

இந்தப் பிரிவினரைப் பெயரிட்டு அழைப்பது கடினம், இவர்களை முழுநேர விமர்சகர் (Professional) என்பதா? பத்திரிகையாளர் என்பதா? கலை இலக்கியங்களில் நிறைய ஈடுபாடு கொண்டவர் (Man Of Art sand Letters) என்பதா?

இவர்களைக் கட்டுப்பாடுகளுக்கு உட்படாத சுதந்திர (Freelance) விமர்சகர்கள் என அழைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிக் கூறுவதனால் இத்தகையவர்களுக்குக் கொள்கை, கோட்பாடு, விமர்சன நோக்கு, பணி போன்றவை இல்லை என்றாகாது.

இங்கு கூற வருவது என்னவென்றால், இவர்கள், பல்கலைக்கழக அங்கீகாரமோ, சக எழுத்தாளர் அங்கீகாரமோ இருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லாது, சாதாரண வாசகர்களுக்காகத் தமது இயல்பில் நின்று எழுதுகிறார்கள்.

இவர்களுக்குப் பொதுவாக உயர் கல்விப் பயிற்சி இருப்பதுண்டு ஆனால், 'அக்கெடெமிக்ஸ்' போன்று இவர்களால் எழுதமுடியாது.

திறனாய்வாளர்களாக இவர்கள் வகிக்கும் பங்கைப் புறக்கணிக்க இயலாதிருக்கிறது. காரணம் மக்கள் தொடர்பு இவர்களிடையே கூடுதலாக இருப்பதாகும்.

சாதாரண மக்களின் இரசனையை உயர்த்துவதில் இந்த விமர்சகர்களே பெரும்பங்கு வகிக்கிறார்கள். இத்தகைய திறனாய்வாளர்கள் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் கட்டுரை, மதிப்புரை, தகவற்களம், பத்தி போன்றவற்றை எழுதுபவர்கள்.

இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்ட முதலாவது விமர்சனப் பிரிவினரிடம் இருந்து (பல்கலைக்கழக விமர்சகர்களிடம் இருந்து) பொதுவான அறிவை இந்த மூன்றாவது பிரிவினர் பெற்றுக்கொள்வார்கள்.

இந்த மூன்றாவது இலக்கிய விமர்சகப் பிரிவினர், இரண்டாவது பிரிவினரான ஆக்க இலக்கிய விமர்சகர்களிடம் இருந்தும், சிருஷ்டித் தன்மை பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்கின்றனர்.

மூன்றாவது ரக விமர்சகர்கள் தாமும் இலக்கிய சிருஷ்டித்துறையில் ஈடுபடுவதனால், நுட்பங்களை அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஆக்க இலக்கியத்திலும் ஈடுபட்டுள்ள நான், என்னை மூன்றாவது பிரிவினருக்குள் அடக்கிக்கொள்வேன்.

ஒரு குறிப்பிட்ட படைப்பு முதல் முயற்சியாக இருக்கும் பட்சத்திலும் சாமான்யமாக இருக்கும் பட்சத்திலும், அந்தப் படைப்பை 'ஆழமாக' விமர்சிக்க முயன்றால், விளைவு எப்படியிருக்கும் என்பதை ஊகித்துப் பாருங்கள்.

இத்தகைய விமர்சகர்களின் முதல் நோக்கம், சாதாரண வாசகர்கள் மத்தியில், நல்ல இரசனையை உண்டு பண்ணுவதும், ஆற்றல் இலக்கிய படைப்பாளிகளை நல்ல வழியில் ஊக்குவிப்பதும், பிறருக்கு அறிமுகம் செய்து வைப்பதுமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மூன்றாவது ரக விமர்சகர், முதலாவது, இரண்டாவது ரக விமர்சகர்கள் போன்று எழுத முற்பட்டால், நோக்கம் கைவிடப்பட்டதாகி விடும்.

தவிரவும், பத்திரிகைத் தேவையை முன்னிட்டுச் சுருக்கமாகவும் மேலோட்டமாகவும் எழுத வேண்டியுள்ளது.

மூன்றாவது பிரிவு விமர்சகர்களை எள்ளி நகையாடும் சிலர் தாம் மெத்தப் படித்த ஆழமுடையவர்கள் என்று தாமே நம்பிக்கை கொள் பவர்கள். இவ்வாறு எள்ளி நகையாடப்பட்ட போதிலும், மூன்றாவது பிரிவு விமர்சகர்களுக்கு இருக்கும் ஆற்றல், இலக்கிய கூர் உணர்வோ, பரந்து விரிந்த பல்வகை அறிவோ, அந்தக் கண்டனக்காரர்களுக்குப் பொதுவாக இருப்பதில்லை என்பது கசப்பான ஓர் உண்மை.

'விமர்சகர்கள் என்றால் பத்திரிகையில் எழுதுவோர் மாத்திரமல்ல, விமர்சனம் என்ற பெயரில் வியாபாரக் கும்பல்கள் நடத்தும் விற்பனைக் கூட்டங்களில் துணிந்து நின்று விமர்சிப்பதும் விமர்சனம்தான்' என்கிறார் பேராசிரியர் சி. சிவசேகரம் ('மு.போ.இலக்கியம் என்றொரு யானை இருந்ததாம்'. அலை 18)

விஷயம் என்னவென்றால் மூன்று விதமான விமர்சகர்களும் நமக்குத் தேவை என்பதே. ஒவ்வொரு தரத்திலும், விமர்சனம் தேவை.

மூன்றாவது தர விமர்சகர்கள் எழுதுபவற்றுள் பெரும்பாலானவை தொகுப்பாக வராவிட்டால் நீடித்த வாழ்வுடையதாக அமையமாட்டா.

அதே வேளையில், சாதாரண வாசகர்கள், நேரமின்மை காரண மாகவும், ஆழமாக அறிய வேண்டிய அவசியமின்மை காரணமாகவும், மூன்றாவது ரக விமர்சகர்களின் எழுத்துக்களையே, பரவலாகப் படிக்கிறார்கள்.

காரணம், சுருங்கச் சொல்லி விளக்க வைக்கும் சிறிய அளவில் அமைந்த விமர்சனங்களாக அவை இருப்பது தான்.

மூன்றாவது பிரிவு விமர்சகர்கள் ஆழமற்ற விமர்சனங்களையாகுதல் எழுதாவிட்டால், ஈழத்துத் தமிழ் வாசகர்கள், உடனுக்குடன் இலக்கியச் செய்திகளையும், தகவல்களையும், அறிமுகங்களையும், பார்வைகளையும் அறியும் வாய்ப்பு இருக்கமாட்டாது என்பது, ஒவ்வொருவரும் அறிந்த உண்மை.

உண்மையில், இந்த மூன்றாவது ரக விமர்சனப் பிரிவு ஈழத்துத் தமிழுக்குப் புதிது. ஆங்கிலம் போன்ற பிற மொழிகளில், இத்தகைய 'பிறீலான்ஸ்' விமர்சகர்களின் செல்வாக்கு அளப்பரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அக்கரைச் சீமையிலே' (புதினம் - வரதர்) 'சருகுகள்' (செய்தி - இராமச்சந்திரன்) 'சருகுகள்' (மல்லிகை - டொமினிக் ஜீவா) ஆகிய பத்திகள் மூலமும் 'கனப்பரிமாணம்', 'மனத்திரை', 'சித்திரதரிசினி', 'இலக்கிய வினா விடை' ஆகிய பத்திகள் மூலமும் (தினகரன் வார மஞ்சரி) 'நாற்சாரம்', 'எண் திசைக் கோலங்கள்' போன்ற பத்திகள் (வீரகேசரி) மூலமும் இருபதுக்கு மேற்பட்ட பத்திகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் நான் எழுதினேன்.

நவீன இலக்கிய விமர்சனம், சமகால இலக்கியம் பற்றியது மாத்திர மன்று. பழைய இலக்கியங்களின் புனர்மதிப்பும் நவீன விமர்சனமே.

நவீன ஈழத்து இலக்கிய விமர்சனம் பற்றி மேலும் அறிந்துகொள்ளப் பேராசிரியர் க. கைலாசபதி எழுதிய 'ஈழத்தில் தமிழ் இலக்கியத் திறனாய்வு முயற்சிகள்' (இலங்கை கலாசாரப் பேரவையின் தமிழ் இலக்கிய விழா மலர் 16.1.72), மா. பீதாம்பரம் எழுதிய 'ஈழநாட்டு உரையாசிரியர்கள்' (கணேசையர் நினைவு மலர் - 1960), கைலாசபதி எழுதிய 'இலக்கியமும் திறனாய்வும்' (திருத்தப்பட்ட சென்னை வெளியீடு), 'தாமரை'யில் மறுபிரசுரம் செய்யப்பட்ட கைலாசபதியின் 'தற்கால விமர்சனப் போக்குகள்' என்ற கட்டுரை ஆகியவற்றையும் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

சில ஈழத்துத் திறனாய்வு நூல்கள்

'இலக்கிய விமர்சனம், இலக்கியக் கொள்கை, இலக்கிய வரலாறு ஆகியவை தனித்துறைகள் எனினும், அவை முற்றிலும் வேறுபட்டவை அல்ல. ஒன்றை ஒன்று சார்ந்தும் உள்ளடக்கியும் செல்வன. அவ்வகையில் விமர்சன பூர்வமான இலக்கிய வரலாற்று நூல்கள் சிலவும் இங்கு தோன்றின. இவ்வகையில் பேராசிரியர் வி. செல்வநாயகத்தின் 'தமிழ் இலக்கிய வரலாறு' பலருக்கு ஆதர்சனமாகவும், முன்னோடியாகவும் அமைந்தது. ('இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் - சி. மௌனகுரு, மௌனகுரு சித்திரலேகா, எம்.ஏ. நுஃமான்)

முக்கிய நூல்கள்: இந்த வரிசையில் பின்வரும் நூல்கள் இலங்கை விமர்சனத் துறை வளர்ச்சியை ஓரளவு காட்டி நிற்கின்றன. (எனது 'ஈழத்து இலக்கியம்: நூல்களின் அறிமுகம்' என்ற நூலையும் பார்க்கவும்.)

'காலமும் கருத்தும்' (ஆ. வேலுப்பிள்ளை), 'தமிழ் இலக்கியத்தில் ஈழத்தமிழறிஞர் பெரு முயற்சிகள்' (பொ. பூலோகசிங்ம்), 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' (சொக்கன்), 'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்' (நா. சுப்பிரமணிய ஐயர்), 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' (ஆ. சதாசிவம்), 'ஈழத்தில் தமிழ் இலக்கியம்', 'ஈழத்துச் சிறுகதையின் தோற்றமும், வளர்ச்சியும்', 'நாவலும் வாழ்க்கையும்', 'தனித் தமிழ் இலக்கியத்தின் அரசியற் பின்னணி' (இந்த நான்கு நூல்களையும் எழுதியவர் கா. சிவத்தம்பி), 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்' (மௌனகுரு, சித்திரலேகா, நுஃமான்), 'ஈழத்து நாட்டுப் பாடல்கள்' (பாலசுந்தரம்), 'ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு' (எப்.எக்ஸ்.சி. நடராசா), 'ஈழநாட்டின் தமிழ்ச் சுடர் மணிகள்' (தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை), 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்', 'இரு மகாகவிகள்', அடியும் முடியும்', 'ஒப்பியல் இலக்கியம்', 'தமிழ் நாவல் இலக்கியம்', 'சமூகவியலும், இலக்கியமும்', 'நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்', 'திறனாய்வுப் பிரச்சினைகள்', 'பாரதி பாடபேதம்', 'இலக்கியமும் திறனாய்வும்' (இந்தப் பத்து நூல்களையும் எழுதியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. கைலாசபதி), 'கவிதை நயம்' (க. கைலாசபதி, இ. முருகையன்), 'தமிழியற் சிந்தனை', 'இலக்கியத் தென்றல்', 'தமிழர் சால்பு' (சு. வித்தியானந்தன்), 'போர்ப்பறை', 'மெய்யுள்' (மு. தளையசிங்கம்), 'ஒரு சில விதி செய்வோம்' (இ. முருகையன்),'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சி' (சில்லையூர் செல்வராசன்), 'ஈழத்துச் சிறுகதை மணிகள்' (செம்பியன் செல்வன்), 'இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம்' (சி. சிவானந்தன்), 'பாரதி முதல் பாரதிதாசன் வரை' (எஸ். தில்லைநாதன்), 'ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி' (க.செ. நடராஜா), 'இலக்கியச் சிந்தனைகள்' (க. கைலாசபதி), 'சுவாமி விபுலானந்தரின் கட்டுரைகள்' போன்றவை இந்நூல்களின் சிலவாகும். மேலும் புதிதாகப் பல நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. பேராசிரியர்கள் கா. அருணாசலம், துரை மனோகரன் எழுதியவையும் அவற்றுள் அடங்கும்.

நூல் வடிவில் இடம்பெறாத பல கட்டுரைகளை இலங்கை விமர்சகர்கள் சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் எழுதியிருக்கிறார்கள். இலக்கியம் மாத்திரமன்றி மேடை நாடகம், திரைப்படம், நாட்டியம் போன்றவை பற்றியும் பல கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

ஈழத்தில் தமிழ்க் கலைகள், இலக்கியங்கள் பற்றி ஆங்கில மொழி மூலமும் விமர்சனப் பார்வை செலுத்தப்பட்டு வருகிறது. அண்மைக் காலங்களில் பேராசிரியர் சு. வித்தியானந்தன, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, கா. இந்திரபாலா மற்றும் எஸ். தில்லைநாதன், ஆ. சண்முக தாஸ், சில்லையூர் செல்வராசன், சமுத்திரன், நவாலியூர் சச்சிதானந்தன், செ. கனகநாயகம், சுரேஷ் கனகராஜா, ஏ.ஜே. கனகரத்தினா, சி. சிவ சேகரம், நா. சுந்தரலிங்கம், எஸ். சிவநாயகம், ஆர். முருகையன், எஸ். கணேசலிங்கன், யோகா பாலச்சந்திரன், கே. எஸ். சிவகுமாரன் போன்றோர் ஆங்கிலத்தில் விமர்சனம் செய்திருக்கின்றனர். 'தமிழ் ரைட்டிங் இன் ஸ்ரீலங்கா' (கே.எஸ். சிவகுமாரன்) ஆங்கிலத்தில் வெளிவந்த ஒரு சிறு நூல். அதே போல "Aspects of Culture in Sri Lanka" வும் நான் எழுதியவற்றுள் மற்றொன்று.

'தி ஆர்ட்ஸ் திஸ் வீக்', 'ஆர்ட்ஸ் மகசின்', 'தி ஆர்ட்ஸ் சீன்', 'லிட்டறி குவாட்டர்' ஆகிய ஆங்கில வானொலி நிகழ்ச்சிகளில் கே.எஸ். சிவகுமாரன் ஈழத்துத் தமிழ்க்கலை, இலக்கியங்கள் பற்றிக் கடந்த 60 வருடங்களாக விமர்சித்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Gleanings, As I Like It போன்ற மகுடங்களிலும், Culture என்ற பக்கத்தில் (The Island என்ற நாளிதழில்) நான் எழுதியவையும் ஆங்கில மொழி மூலம் நான் திறனாய்வுப் பத்திகளை எழுதியிருக்கிறேன். தொடர்ந்தும் ஆங்கிலப் பத்திரிகைகளில் அடிக்கடி எனது பத்தித் திறனாய்வுகள், தமிழ், ஆங்கில, சிங்கள இலக்கியங்கள் தொடர்பாக வந்துகொண்டிருக்கின்றன.

ஈழத்தில் விமர்சனத்துறை பத்திரிகைகள், நூல்கள் வாயிலாக மாத்திரமன்றி, வானொலி, தொலைக்காட்சி, கருத்தரங்குகள், கலை இலக்கிய விழாக்கள் போன்றவை மூலமும் வளர்ச்சி பெற்று வருகிறது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக, 'கலைக்கோலம்' என்றொரு நிகழ்ச்சி மூலம் கலை, இலக்கிய விமர்சனங்களைத் தக்கவரைக் கொண்டு ஒலிபரப்பி வருகிறது. அதற்கு முன்னர் தனியாகத் திரைப்பட விமர்சனங்களும், புத்தக விமர்சனங்களும் முறையே கால்மணி நேரம் இரு வாரத்துக்கொரு முறை ஒலிபரப்பாகின. கே. முரளீதரன், கே.எஸ். சிவகுமாரன் ஆகியோர் இக்கால்மணி நேரத் திரைப்பட விமர்சன நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர். இது, அறுபதுகளின் மத்தியில் இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியாகும். இந்த விமர்சன நிகழ்ச்சி களை விடக் கலந்துரையாடல்கள், பேச்சு, சித்திரம் போன்றவை மூலம் விமர்சன நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

எனவே, இலங்கையில் கடந்த நாற்பது, ஐம்பது வருடங்களாக விமர்சனத்துறை வளர்ந்து வருகிறது எனலாம். ஈழத்து இலக்கிய வளர்ச்சி நெறிக்கேற்ப, விமர்சனப் பாங்கும் வெவ்வேறு அழுத்தம் பெற்று வந்திருக் கின்றது. இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய அடிப்படைப் பண்புகள் பற்றிய விவாதங்கள், இவ்விஷயங்கள் பற்றிப் பரவலாக வாசகர்களும் மாணவரும் அறிந்து கொள்ளவும் பங்கெடுக்கவும் உதவிற்று. இதனால், அழகியல், சமூகப்பணி, சமூகப் பிரக்ஞை, உருவம், உள்ளடக்கம் போன்றவை மாத்திரமன்றி, முற்போக்கு, நற்போக்கு, பிரபஞ்ச யதார்த்தவாதம் ஆகியன பற்றியும் கருத்து மோதல்களும், தெளிவும் ஏற்படலாயின.

ஈழத்தில் புதிய எழுத்தாளர்களும் விமர்சகர்களும் உருப்பெறத் தொடங்கிப் புதிய பார்வைகளைச் செலுத்த முற்பட்டனர். கலை இலக்கியம் பற்றி 'உயர்ந்தோர் குழாம்' மாத்திரம் அக்கறை கொள்வதில்லை. வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலமான ஜனரஞ்சகத் தன்மையும் மிளிர விமர்சனப் பாங்கு செழுமை பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருங்கச் சொன்னால், ஈழத்து விமர்சனத்துறை வளர்ச்சி காரணமாக ஏற்பட்டு வரும் மாற்றங்கள் நன்மை பயப்பனவாகவே இருக்கின்றன. எழுத்தாளர்களுக்கு, மாணவர்களுக்கு, கலை இலக்கியங்களில் ஈடுபட்ட வர்களுக்கு, பொது மக்களுக்கு, என்று அனைவருக்கும் புதிய தக வல்களையும் புதிய வளர்ச்சிப் போக்கினையும் காட்டுவதாக ஈழத்தின் விமர்சனத்துறை இருந்து வருகிறது.

உதாரணமாக, ஐம்பதுகளில் பயன்பெற்ற மாணவனை விட, இப்பொழுது பயன்பெறும் மாணவன், புதிய விமர்சன ஞானத்தால் கூடுதலான பயனைப் பெறுகிறான். ஈழத்தில் பலவிதமான விமர்சன அணுகுமுறைகளையும் காணக் கூடியதாக இருக்கின்ற போதிலும், பல்நெறி சார்ந்த விமர்சனப் பாங்கே முக்கிய இடம் பெறுகிறது. இதனால் கலை, இலக்கியம், அறிவியல், அரசியல், பண்பாட்டம்சங்கள், வரலாறு போன்ற பல துறைகளிலும் பரிச்சயம் தேவை. இவற்றின் இணைவாக, ஒரு முழுமையான இரசனையையும் கண்ணோட்டத்தையும் யாவரும் கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

கவிதைத் திறனாய்வு

கவிதை, விமர்சனம் ஆகிய துறைகள் பற்றி நீங்கள் அறிந்திருப்பதற்கு மேலாக நான் ஒன்றும் புதிதாகக் கூறிவிடப் போவதில்லை. ஆயினும், இரு துறைகளிலும் தலைசிறந்து விளங்கிய இரண்டு ஈழத்து அறிஞர்கள் எழுதிய நூல் ஒன்றை, இப்பகுதியில் அறிமுகம் செய்து வைக்க விரும்புகின்றேன்.

விமர்சகர் கைலாசபதியும், கவிஞர் முருகையனும் தெரிவித்திருக்கும் கருத்துகள் 'கவிதை நயம்' என்ற நூலில் வெளியாகியிருக்கின்றன. இந்த நூல், செய்முறை விமர்சனம் (பிறக்ரிக்கல் கிரிட்டிஸிஸம்) என்ற பாங்கில் அமைந்திருக்கிறது. அவர்கள் கூறியிருக்கும் இத்துறைகள் பற்றிய கருத்துக்கள் வருமாறு:

'கவிதை என்பது, முதலாவதாக மிகப் பழமை வாய்ந்த இலக்கிய வடிவம். எனவே, அது நன்கு மெருகேற்றப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, எந்தப் பொருளையும் கவிதையாக்கலாம். கவிதைக் கென்றே பிரத்தியேகமான, சிறப்பான பொருள் கிடையாது.

மூன்றாவதாக, சொற்கள்தான் கவிதையிலே அதிமுக்கியமாக விளங்குகின்றன. கவிதையின் கதையானது சொற்களின் கதையாகும்.

நான்காவதாக, கவிதையிலே இசைத் தன்மை அல்லது ஓசைச் சிறப்பு உண்டு. கவிதை என்றால் வாய்விட்டுப் பாடக் கூடியதே. அதன் காரணமாக, பாட்டு என்றும் கவிதையைக் குறிப்பிடுகிறோம். 'உரையும் பாட்டும்' என்றே பழைய தமிழ் ஆசிரியரும் கூறுவர்.

பொதுவாகக் கூறுமிடத்து, எல்லாக் காலத்திலும் கவிதையின் பொருள் வேறுபட்டுக் காணப்படினும், அது படிப்போருக்கும், கேட்போருக்கும் இன்பத்தையும் உயர்ந்த இலட்சியங்களையும் அளிப்பதாக இருக்கிறது. கதையின் பண்பும், பயனும் அது எனலாம். இதனை அனுபவிக்க உதவுவதே கவிதை நயப்பின் நோக்கமாகும்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம் பற்றி

'சேரவாரும் செகத்தீரே' என்று ஒரு கவிஞன் பாடியதைப் போல், கவியின்பம் காண வாரீர் என்று அழைப்பதே திறனாய்வாளரின் முக்கிய நோக்கம். கவிதையைச் சித்திரவதை செய்வது அன்று. திறனாய்வு என்பது அறுவை வைத்தியம் போன்றது எனச் சிலர் தவறாகக் கருதுவது உண்டு. புறத்தோற்றத்தைக் கொண்டு அவ்வாறு கருதுகின்றனர் என்றும் கூறலாம்.

கவிதை என்பது பல கூறுகளினால் ஆகிய கூட்டுப் பொருள். சொல், பொருள், ஓசை, அலங்காரம், சொல்லுக்கு அப்பால் குறிப்பாக நிற்கும் உணர்வு ஆகிய பல் அம்சங்கள் அதனுள் அடங்கியுள்ளன. இத்தகைய பல உறுப்புகள் அளவாகக் கலந்து, பிரிக்க முடியாத வண்ணம் இயைந்து இருப்பதுதான் கவிதை தனிக்கவிதையில் அல்லது காவியத்தில் பல்வேறு அம்சங்களின் பொருத்தப்பாடு ஊன்றிக் கவனிக்கத்தக்கது. இப்பொருத்தம் அல்லது பொருத்தமின்மை ஆகியற்றைக் கூர்ந்து நோக்கி, ஒரு முடிவுக்கு வர உதவுவதே திறனாய்வின் நோக்கமாகும்.

கற்பனை, ஒலிச்சிறப்பு, யாப்பு, அமைதி, அணிநலம், தொடை நயம், குறிப்புப் பொருள், சுவைகள் ஆகியவை வளம் பொலியுமாறு கவிதை படைக்கப்படுகிறது என்று கூறுகிறோம். இவையெல்லாம் சொற்களின் அமைப்பிலும் அவற்றை புலவன் கையாளும் வகையிலும் தங்கியுள்ளன. சொற்களை ஒன்றுடன் ஒன்று சேர்ப்பதிலும், அவற்றிடையே மண்டிக் கிடக்கும் உயிராற்றலை வெளிக் கொணர்வதிலுமே கவிஞனின் தனிச் சிறப்பு காணப்படுகிறது. சிறந்த சொற்கள் சிறப்பான ஒழுங்கில் அமைந்தது கவிதை என்பர்.'

கற்பனை

'கற்பனை என்பது ஒரு கவிதையை ஆக்கும் போது, கவிஞன் ஆற்றுகின்ற படைப்புத் தொழிலின் ஒரு பகுதியாகும். இப்படைப்புத் தொழில் மூன்று படிகளில் அல்லது கட்டங்களில் நிகழ்வதென நாம் கருதலாம். அனுபவம், கருத்து, படிமம் என்பனவே அம்மூன்று கட்டங்களிலும் முறையே இடம்பெறும் அம்சங்களாகும். அனுபவம் புற உலகிலிருந்து ஈட்டப்படுவது. ஐம்புலன்களின் வாயிலாகக் கிட்டுவது, பலதரப்பட்ட புலப்பாடுகளின் சேமநிதியாக உள்ளது. கருத்து அனுபவங்களினின்றும், சிந்தனையாலும், உள்ளுணர்வாலும் வடித்தெடுக்கப்படுவது பொதுமைப் பண்பு கூடியது. மனநிகழ்வாகவே பெரும்பாலும் நிற்பது. படிமமோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக் கூட்டி கருத்துகளை உணர்த்தக் கூடிய ஒரு சில புலப்பாடுகளின் கூட்டுச் சேர்க்கை. படிமங்களை ஆக்கும் செயல்முறையே கற்பனையாகும்.'

மிகையுணர்ச்சி

'மிகையுணர்ச்சி என்பது, கேவலம் உணர்ச்சியின் தோற்பகட்டு மாத்திர மன்று. அல்லது அளவுக்கு மீறிய உணர்ச்சிப் பரவசமும் அன்று. ஆனால், எத்தகைய செய்கைகளுடனும் தொடர்பற்ற முறையில் உணர்வுகளை வெறுமனே வளர்த்தலாகும். ஓர் உணர்வையோ கருத்தையோ வரையறுத்து, கூர்மையாக்கிக் கூறமுடியாத ஒருவன், இலக்கிய வழக்குச் சொற்களிலே தஞ்சம் புகும்போது, மிகை உணர்ச்சி தோன்ற வழி பிறக்கிறது. கூறமுற் பட்ட அனுபவத்திற்கு உகந்த சொற்கள் வந்து பொருந்தாமையால், வேறு சொற்களால், கூறி முடிக்கப்பட்ட அனுபவம் உண்மையாக இருக்காமற் போவதில் வியப்பெதுவும் இல்லை. குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே அளவுக்கு அதிகமாக ஒருவரது ஏற்புடைமை இருப்பின் அதனையே மிகையுணர்ச்சி என்கிறோம்.'

'இலக்கியத்தில் காணும் மிகையுணர்ச்சி, வாழ்க்கையிலிருந்துதான் ஊற்றெடுக்கிறது. வயது போனவர்கள் சிறிது உணர்ச்சி பூர்வமாகப் பேசிக்கொண்டு இருக்கும்போது, கண் கலங்குகின்றனர். மது அருந்தியதும் சிலருக்கு உளம் நெகிழ்ந்து விடுகிறது. சில்லறை விஷயங்களுக்கெல்லாம் தளதளத்துவிடுவதைக் காண்கிறோம். இத்தகைய சந்தர்ப்பங்களில், மிகையுணர்ச்சி கழிவிரக்கத்தின் சாயலிலோ, அன்றி பச்சாதாபத்தின் சாயலிலோ, அதீத பற்றாகவோ இருக்கிறது. உளவியல் அடிப்படையில் நோக்குமிடத்து சாதாரணமாக ஒருவர் உணர்ச்சி வசப்பட்டால், அவ்வுணர்ச் சியே செயலுக்குத் தூண்டுதலாக அமைவதைக் காணலாம்.'

உரிப்பொருள்

'கற்பனையின் செயற்பாட்டினால் உருவாக்கப்படும், உவமை, உருவகம், குறியீடு முதலாயின கவிதையின் அக உறுப்புகள். சொற்களின் பொருட்பேறு, ஓசை நயம் முதலாயின கவிதையின் புறக்கருவிகள், அணிகலன்களாகும். இத்தகைய உருவ அமைதியைப் பெற்றுத் திகழும் கவிதையின் உயிர்போல மிக முக்கியமாக விளங்குவது அதன் உள்ளுறை அல்லது உரிப்பொருளாகும். இந்த உரிப்பொருள் ஓர் எண்ணமாகவோ உணர்ச்சியாகவோ இருக்கலாம். எண்ணமும் உணர்ச்சியும் பிரிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாதவாறு ஒன்றி, இயங்கி, இரண்டறக் கலந்த கலவையாகவும் இருக்கலாம். ஒன்றை அறிவிப்பதன்று கவிஞனின் நோக்கம், ஒன்றை உணர்த்துவதே.

உலகு பற்றிய நோக்குகளும், கருத்துக்களும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக அமையினும், மிகப் பொதுவான வகையிலே ஒரு குறைந்தபட்ச முரண்பாடு காண்பது இயலக்கூடிய காரியமே.

ஆரோக்கியமாக உயிருடன் நடமாடும் அவயவி கவிதை.

அந்த அவயவியின் மகோன்னதத்தைக் கண்டுணர்வதே, திறனாய் வின் தேறிய நற்பலனாம்.

* * *

மேற்சொன்னவை 'கவிதை நயம்' என்ற நூலில் காணப்படும் வரிகள். உயர் வகுப்பு மாணவர்கள் உட்பட கவிதைப் பிரியர்கள் அனைவரும் கவிதை பற்றிக் குண கூடார்த்தமான (அப்ஸ்ரக்ட்) முறையில் அல்லது திட்டவட்டமாக அறிந்து கொள்ள இந்தப் புத்தகம் உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

நாடகத் திறனாய்வு

'ஈழத்தில் தமிழ் நாடக விமர்சனப் போக்கு' என்று கூறக்கூடிய ஒருநிலை இல்லை. ஈழத்துத் தமிழ் இலக்கிய விமர்சனத்துறை என்று எதையும் குறிப்பிடக்கூடிய அளவுக்குத் தனித்துவமான ஒரு வளர்ச்சி நிலையை நாம் காண முடியாதிருக்கிறது.

இலக்கியத்தை, ஆக்க இலக்கியத்துறை, கவிதை, நாடகம், புனைகதை என்ற வகைகளாகப் பிரிக்கலாம். அவ்வாறு பிரித்துப் பார்க்கும்போது கவிதை, புனைகதை ஆகிய துறைகளில் விமர்சனப் பார்வை இருக்கும் அளவிற்கு, நாடகத்துறையில் போதுமான அளவு விமர்சனங்கள் தமிழில் எழவில்லை. இதற்குக் காரணங்கள் பல :

1. நாடக இலக்கியத் துறையில் முழுக் கவனம் செலுத்தப்படாமை.
2. நல்ல தரமான நாடகங்கள் பரவலான முறையில் எழுதப்படாமையும், மேடையேற்றப்படாமையும்.
3. நாடக இலக்கியங்கள் பற்றிய விமர்சனங்களும் மேடை நாடகங்கள் பற்றிய காத்திரமான, ஆழமான விமர்சனங்களும் எழுதப்படாமை.
4. அவ்வாறு எழுதுவதற்கு எவரேனும் முனைந்தாலும், அவற்றைப் பிரசுரிக்கத் தகுந்த சாதனங்கள் இல்லாமை.

இந்தக் காரணங்கள் பொதுப்படையானவை. ஆயினும், இந்த எல்லைக் கட்டுகளை மீறி அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில விமர்சனங்கள் வெளிவந்திருக்கின்றன என்ற உண்மையையும் நாம் கவனித்தல் வேண்டும். அவ்விதம் வெளிவந்த நாடக விமர்சனங்கள் எந்த வடிவத்தில் எந்தெந்தச் சாதனங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளன என்பதைப் பார்ப்போம்.

வெகுசனத் தொடர்புச் சாதனங்களில் இரண்டான பத்திரிகைகளிலும் வானொலியிலும் இந்த விமர்சனங்கள் வெளியாகியுள்ளன. இவற்றைத் தவிர பட்டிமன்றம், குறிப்பிட்ட நாடகங்கள் பற்றிய கருத்தரங்குகள் போன்றவற்றிலும், விமர்சனக் கருத்துகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகளைப் பொறுத்த மட்டில், நாம் பெரும்பாலும் நாளிதழ்களையே விமர்சனக் கட்டுரைகளுக்காக எதிர்பார்க்க வேண்டியுள்ளது. சிற்றேடு களும் நாடக விமர்சனக் கட்டுரைகளைத் தாங்கி வெளி வந்துள்ளன. ஆனால், இவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது, இனங்கண்டு கொள்ளக் கூடிய விமர்சனப் பாங்கை நாம் காண முடியாதிருக்கிறது. தினப் பத்திரிகைகள், சில வேளைகளில் தமிழ் நாடக 'விமர்சன'க் கட்டுரைகளைப் பிரசுரித்திருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், துரதிஷ்டவசமாக இவற்றில் பெரும்பாலானவற்றை நாம் உண்மையான விமர்சன நெறியில் எழுதப்பட்டவை என்று கூற முடியாதிருக்கிறது.

ஆங்கிலப் பத்திரிகைகளை நாம் எடுத்துக் கொண்டால், அங்கு நாடக விமர்சனங்களை எழுதுபவர்கள் பெரும்பாலும் கலைத்துறையில் ஈடுபாடு கொண்ட பத்திரிகை அலுவலகச் சிறப்பம்ச ஆசிரியர்களாக இருப்பதை நாம் அறியமுடிகிறது. அவ்வாறு பத்திரிகை அலுவலகத்தினர் விமர்சனம் செய்ய முடியாத நிலையில் இருந்தால், வெளியில் இருந்து நாடகத்துறை விமர்சகர்களின் கட்டுரைகளை அப்பத்திரிகைகள் வாங்கி வெளியிடுகின்றன. இது சிங்களப் பத்திரிகைகளை விட ஆங்கிலப் பத்திரிகைகளுக்குப் பெரிதும் பொருந்தும். ஈழத்தில், குறிப்பாகக் கொழும்பில் மேடையேற்றப் பட்ட தமிழ் நாடகங்கள் பற்றிய விமர்சனங்கள் தமிழ்ப் பத்திரிகைகளை விட, ஆங்கிலப் பத்திரிகைகளிலேயே கூடுதலாக வெளிவந்திருக்கின்றன என்பதையும் நாம் அவதானித்தல் வேண்டும்.

நாடகத்துறை விமர்சனத்திற்குத் தினப்பத்திரிகைகள் போதிய இடம் கொடுக்கத் தவறுவதனால், ஒரு சில பத்தி எழுத்தாளர்கள் தமது பத்திகளில் மேலோட்டமாக எழுத வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒரு பக்தி எழுத்தாளர், குறிப்பிட்ட ஒரு நாடகம் பற்றி முறையான விமர்சனப் பாங்கில் விஸ்தாரமாக எழுத முடியாதிருக்கிறது என்பது நாம் அனைவரும் அறிந்த விஷயம்தான். இதற்கு முக்கிய காரணம், இடவசதியின்மையே. தமிழிலும், குறிப்பாக ஈழத்துத் தமிழ் நாடகங்கள் பற்றிய ஒரு சில விமர்சனக் குறிப்புகள், இந்தப் பத்திகள் மூலமே வெளியாகியிருக்கின்றன என்பதையும் நாம் மறக்கலாகாது.

வானொலியைப் பொறுத்தமட்டில் 'கலைக்கோலம்' போன்ற நிகழ்ச்சி களில் ஒரு சில மேடை நாடகங்கள் பற்றிய விமர்சனங்கள் இடம் பெற்றுள்ளன. நாடகம் சம்பந்தமான கலந்துரையாடல்களும், நாட்டுக் கூத்து, நாடகப் பாடல்கள் போன்றவை பற்றிய விளக்கவுரைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றிருக்கின்றன. 'ஆர்ட்ஸ் மகசீன்' என்ற ஆங்கில வானொலி நிகழ்ச்சியிலும் தமிழ் நாடகங்கள் பற்றிய விமர்சனங்கள் ஒலிபரப்பாகி வந்துள்ளன. ஆனால், இந்த வானொலி விமர்சனங்களின் பிரதிகள் கோவைப்படுத்தப்படாதிருப்பதனால் அந்த விமர்சனங்கள் பற்றிய மதிப்பீடுகளைத் தெரிவிக்க முடியாதிருக்கின்றது. வானொலி நிகழ்ச்சி கள் 'காற்றோடு போய் விடுகின்றன' என்பது வானொலி தொடர்பு சாதனத்தின் குறைபாடுகளில் ஒன்றாக இருக்கிறது.

நாடக விழாக்கள் சம்பந்தமாகவும் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் பற்றியும் சில கருத்தரங்குகள், குறிப்பாகக் கொழும்பில் நடைபெற் றிருக்கின்றன. இவற்றின் மூலம் விமர்சனக் கருத்துகள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன.

ஈழத்து நாடகத் திறனாய்வு

ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி பற்றி க.சொக்கலிங்கம் ஒரு நூலை எழுதியிருக்கிறார். நமது நாட்டு நாடக வரலாற்றின் தோற்றம், நாட்டுக் கூத்தில் ஆரம்பிப்பதாக ஆசிரியர் கூறுகிறார். அதே சமயத்தில் முதல் மேடை நாடகம் 1859 ஆம் ஆண்டு இடம் பெற்றதாகவும், 1977 இல் மேடையேற்றப்பட்ட 'புதியதொரு வீடு' வரையிலுமான நமது நாடக வரலாற்றை ஆசிரியர் எழுதியிருப்பதாகவும் முன்னுரையில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிடுகிறார். உண்மையில் 'சொக்கன்' 1917 ஆம் ஆண்டு தொடக்கம் 1973 ஆம் ஆண்டுவரை ஈழத்திலே வெளியான தமிழ் நாடக நூல்களின் ஆய்வையே தந்துள்ளார். அதாவது 'அச்சிற் பதிப்பித்து வெளியான நூல்களே' ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

'மேடை நாடகங்கள் பற்றிப் பெருமளவு ஆய்வுகளும் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நாடக இலக்கியம் பற்றிய அறிவியல் முறை ஆய்வு நிகழாமை பெருங்குறையாகும்' என்று பி. நடராசன், த. பஞ்சலிங்கம் ஆகிய இருவரும், சொக்கனின் நூலுக்கு எழுதிய பதிப் புரையில் குறைபட்டுக் கொள்கின்றனர்.

நாடக இலக்கியம், நாடக இயல் போன்றவை பற்றியும் பத்திரிகை களில் சில பத்தி எழுத்தாளர்கள் எழுதியிருப்பதை இங்கு நினைவூட்ட வேண்டும்.

இருந்த போதிலும், சொக்கனின் இந்த நூல் மிகவும் பிரயோசன மானதொன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சமயத்தில், 'உண்மையில் எம்மிடையே நாடக வரலாறு என்பது, இலக்கிய வரலாற்றின் கிட்டிய சொந்தக்காரனாகவே கொள்ளப் பட்டது, கொள்ளப்படுகின்றது' என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அதாவது, 'நாடக வரலாறு' என்பது நாடகங்களின் வரலாறு மட்டு மல்ல நாடகத்தின் தளமும் களமுமாகிய அரங்கினதும், அவ்வரங்க தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் காரணமாயிருந்த நிறுவனங்களினதும் வரலாற்றையும் மனங்கொள்ள வேண்டும். நாடகத்திற்கு உள்ள ஊடாட் டத்தை அறிய முனைய வேண்டும். எமது நாடக வரலாற்றாய்வின் முக்கிய பண்பாக இது அமைய வேண்டுமென்பது நாடகத்துறை பற்றி அதிகார பூர்வமாகப் பேசக்கூடிய கா. சிவத்தம்பியின் கருத்து. (இ. சிவானந்தன் எழுதிய 'இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம்' என்ற நூலுக்கான முன்னுரை).

நாடக வரலாற்றை, இலக்கிய வரலாறு போன்று எழுத முடியாது. இரண்டுக்குமான அணுகுமுறைள் வேறு வேறு என்று வலியுறுத்தும் பேராசிரியர் சிவத்தம்பி, 'இலங்கைத் தமிழ் நாடக வரலாற்றைப் பொறுத்த வரையில், நாடக வளர்ச்சியின் கலைப் பரிமாணமும் சமூகப் பரிணாமும் மத்தியதர வர்க்க நிலையிலிருந்து அடிநிலைக்குச் சுவறும் நிலையில் மிக முக்கியமான ஓரிடத்தை இலங்கைப் பல்கலைக்கழகம் என்னும் சமூகக் கல்வி நிறுவனம் பெற்றிருந்தது' என்கிறார்.

இ. சிவானந்தன், அரங்கியல் நெறிநின்ற நாடக வரலாற்றை எழுதியிருக்கிறார். ஆயினும், அவர் கொடுத்துள்ள தரவுகள், கட்டுபத்தைப் பல்கலைக்கழக முயற்சிகளையும் உள்ளடக்கியதாக அமைந்திருப்பின் விரும்பத்தக்கதாய் இருந்திருக்கும். தவிரவும் முடிந்த முடிபான ஆராய்ச்சி யாக இந்நூல் இல்லை என்பதை நூலாசிரியரும் ஏற்றுக் கொள்வார் என முன்னுரையாசியர் குறிப்பிடுகிறார்.

சிவானந்தன் 1927 ஆம் ஆண்டுக்கும் 1977ஆம் ஆண்டுக்குமிடைப் பட்ட பல்கலைக்கழக நாடக அரங்கு பற்றிய தரவுகளைத் தொகுத்து, தனது பார்வையைத் தெரிவித்து இருக்கிறார்.

ஈழத்துத் தமிழ் நாடகத்துறை பற்றி வெளியாகிய மூன்றாவது நூல் 'ஈழத்தில் தமிழ் நாடகம்' என்றதொரு சிறிய அறிமுக நூல். அந்தனி ஜீவா எழுதியிருக்கும் இந்நூல், 1978 இல் அவர் திருப்பூரில் படித்த ஒரு கட்டுரையாகும். சொக்கனின் நூல் 1977 இலும், சிவானந்தனின் நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 இலும் வெளிவந்திருக்கின்றன. அந்தனி ஜீவாவின் புத்தகம் 1981 இல் வெளியாகியிருக்கிறது. எனவே நூலாசிரியர் அந்தனி ஜீவாவின் கூற்றான, நாடகங்களைப் பற்றியோ, அல்லது நாடகக் கலைஞர்களைப் பற்றியோ எந்தவிதத் திறனாய்வுகளும், கணக்கெடுப்புக்களும் சரிவர வெளிவந்ததில்லை. ஈழத்தில் தமிழ் நாடகத்தின் வளர்ச்சியையும் தோற்றத்தையும் முழுமையாக ஆராயும் முயற்சி எதுவும் இது காலவரை நடைபெற்றதாகத் தெரியவில்லை என்பது பொய்யாகிறது.

சமய நம்பிக்கைக்காகத் தம் உயிரைக் கொடுத்த தென்னிந்தியக் கத்தோலிக்கரான முத்துக்குமார புலவர் தேவசகாயம் என்ற நாடகத்தை வாழ்க்கையின் உண்மைச் சம்பவங்களை வைத்து எழுதினார்' என்று நூலாசிரியர் கொடுக்கும் தகவல் போதுமானதாயில்லை.

அதே சமயத்தில், அந்தனி ஜீவாவின் மற்றொரு கூற்று, தெளிவாக இருக்கிறது.

தற்காலத் தமிழ் நாடகமேடையின் விழிப்புணர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. பல்கலைக்கழக முயற்சிகளும், திராவிட முன்னேற்றக் கழகப் பிரச்சார நாடகங்களின் வழிவந்த முயற்சிகளுமாகும்.

1978 இற்குப் பின்னர் ஈழத்துத் தமிழ் நாடக மேடை வளர்ச்சி காண்பதாக அந்தனி ஜீவா கருதுகிறார்.

ஈழத்துத் தமிழ் நாடக மேடை, உலக நாடக அரங்கின் தரத்திற்கு வளர்ச்சி அடைந்துள்ளதை வரலாற்று ஆய்வாளர்களே ஒப்புக்கொள் வார்கள் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் ஆசிரியர்.

1972 இற்கு முற்பட்ட, கொழும்பு தமிழ் நாடகங்கள் பற்றி பூரணி (ஐப்பசி - மார்கழி 1972) இதழில் நான் எழுதியிருக்கிறேன்.

1965இல் மேடையேறிய ஜோர்ஜ் சந்திரசேகரின் இது ஒரு காதல் கதை முதல், கொழும்பில் மேடையேறிய முக்கிய நாடகங்கள் பற்றியும், ஆறு நாடகங்கள் என்ற நூல் பற்றியும் நான் திறனாய்வு செய்திருக்கிறேன்.

1969 இல் 'தினகரன்' நாடக விழா மலர் ஒன்றை வெளியிட்டது. அதில் பல பயனுள்ள கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இதனைவிட, 'நுட்பம்', 'பொதிகை', 'இளந்தென்றல்', 'மானுடம்' போன்ற பல்கலைக் கழக வெளியீடுகளிலும், நாடக சம்பந்தப்பட்ட பல அரிய கட்டுரைகள் வெளியாகி இருக்கின்றன.

அண்மைக் காலங்களில் ஈழத்து நாடக மேடை பற்றிப் பல விவாதங்கள் பத்திரிகைகளிலும், கலந்துரையாடல்களிலும் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளன. நாடகத்துறை பற்றி இன்று எழுதுவோர் பலர். நாடகக் கலைஞர்களே பெரும்பாலும் இத்துறையில் ஈடுபட்டுவருகின்றனர்.

கலையரசு சொர்ணலிங்கம், ஏ.ரி. பொன்னுத்துரை, கே.எஸ். பாலச்சந்திரன், சண்முகநாதன் (சானா) போன்றவர்களும் ஈழத்து நாடகத்துறை சம்மந்தமாக எழுதியுள்ளனர். இவையும் விமர்சனத்துறையில் அடங்குபவைதான்.

அண்மைக் காலங்களில் ஈழத்து நாடகத்துறை பற்றி ஸ்ரீ கணேசன், ஜெயசங்கர், அராலி சண்முகப்பிள்ளை, சிதம்பர திருச்செந்திநாதன், குழந்தை சண்முகலிங்கம் போன்றவர்களும் திறனாய்வு முயற்சிகளில் ஈடுபட்டுவந்துள்ளனர்.

பல்கலைக்கழக மட்ட அமெரிக்க ஏடொன்றில் பேராசிரியர் கா. சிவத்தம்பி நாடகத்துறை பற்றி எழுதி இருக்கிறார்.

பேராசிரியர்கள் வித்தியானந்தன், சிவத்தம்பி, கைலாசபதி, இந்திரபாலா, திருகந்தையா, சண்முகதாஸ், மௌனகுரு, தில்லைநாதன், நுஃமான், சி. சிவசேகரம் மற்றும் சித்திரலேகா மௌனகுரு, செ. யோகராசா, முருகையன், யாழ்ப்பாணம் தேவன், சில்லையூர் செல்வராசன், அந்தனி ஜீவா, சுஹைர் ஹமீட், கே.எஸ். சிவகுமாரன் போன்றோர் ஈழத்து நாடகத்துறை பற்றிக் கட்டுரைகளும் திறனாய்வுகளும் எழுதியுள்ளனர்.

இந்த நூற்றாண்டில், குறிப்பிடத்தக்க நூல்கள் சில, மரபுவழி நாடகங்கள் தொடர்பாகவும், நவீன நாடகங்கள் தொடர்பாகவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பேராசிரியர் சி. மௌனகுருவின் பங்களிப்பு இங்கு முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

சமூகவியல் போக்குத் திறனாய்வு

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி ஒரு தலைசிறந்த ஆய்வறிவாளர். நாடறிந்த எழுத்தாளர். முன்னணித் திறனாய்வாளர்களில் மிக முக்கிய மானவர். நெறிப்படுத்தப்பட்ட ஈழத்து இலக்கியச் சொல் நெறிப் பாங்கை இனங்கண்டு, ஆற்றுப்படுத்திய இரு தமிழறிஞர்களில் ஒருவர், (மற்றையவர் மறைந்த பேராசிரியர் கைலாசபதி அவர்கள்) நாடகத்துறை பற்றி ஆழ்ந்த பரிச்சயங் கொண்டவர். பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் நாடகத்துறை விளங்கியமாற்றை ஆராய்ந்து கலாநிதிப் பட்டம் பெற்றவர். இந்த ஆங்கில நூலுக்காகத் தமிழ்நாடு அரசாங்கமும் பரிசளித்தது.

அரசியல் தொடர்புச் சாதனமாகத் தமிழ்த் திரைப்படம் என்ற மற்றுமோர் ஆங்கில நூலைச் சிவத்தம்பி எழுதியிருக்கிறார்.

இவற்றைத் தவிர, நாடகத்துறை பற்றிய பிறநாட்டு ஆங்கிலப் பருவ ஏடுகளிலும் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். நமது நாட்டு இனப் பிரச்சினைக்கான காரணங்களை ஆங்கில வாசகர்களும் அறியுமாறு, தெளிவாக 'லங்கா கார்டியன்' என்ற மாதமிருமுறை சஞ்சிகையில் தொடர் கட்டுரையாக எழுதியுள்ளார்.

தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் சிறப்பு ஆய்வாளராகப் பங்கு கொண்ட சிவத்தம்பி அவர்கள், ஒரு மேடை வானொலி நடிகருங்கூட. இலங்கையர்கோன் எழுதிய 'விதானையார் வீட்டில்' என்ற தொடர் நாடகத்திலே (ஐம்பதுகளின் பிற்பகுதியிலும் அறுபதுகளின் முற்பகுதி யிலும் என்று நினைக்கிறேன்) விதானையாராக வந்து, பாத்திரத் தன்மைக்கு உயிரூட்டியவர்.

வெகுசனத் தொடர்புத் துறையில் நிபுணத்துவம் பெற்றுள்ள பேராசிரியர் சிவத்தம்பி, இத்துறை பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்களை தியடோர் பாஸ்கரன் போன்ற தமிழ் நாட்டு விமர்சகர்கள் ஆதாரம் காட்டி, மேற்கோள் தந்துள்ளனர். பல நூல்களின் ஆசிரியர் சிவத்தம்பி அவர்கள்.

சென்னைத் திரைப்படச் சங்கத்திலே பல ஆண்டுகளுக்கு முன் ஆங்கில மொழியில் சிவத்தம்பி உரை ஒன்றை நிகழ்த்தி இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வுரையின் தமிழ் வடிவம் இப்பொழுது ஒரு நூலாக வெளிவந்துள்ளது. 'தமிழ்ச் சமூகமும் அதன் சினிமாவும்' என்ற இந்த நூலை சென்னை புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டெட் வெளியிட்டுள்ளது.

பேராசிரியர் சிவத்தம்பி உரை நிகழ்த்திய போதும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற விவாதம் சுவாரஷ்யமாக இருந்ததனால், அதனையும் உள்ளடக்கித் தமிழில் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது.

'ஹிந்து' நாளிதழின் திரைப்பட விமர்சகர் சசிகுமார், பழம்பெரும் திரைப்பட நெறியாளர் ஏ.எஸ்.ஏ. சாமி (வேலைக்காரி புகழ்) போன்றவர்களும் தமிழ்நாடு அரசு திரைப்படப் பயிற்சி நிறுவன மாணவர்கள் போன்றோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கின்றார்கள்.

தமது நூலின் நுழைவாயிற் குறிப்புகள் என்ற பகுதியில் ஆசிரியர் எழுதுகிறார். தமிழ் சினிமாவானது தமிழ்ச் சமூகத்தின் சமூகப் பொருளாதார பண்பாட்டு அமைப்புக்களிடையே எவ்வாறு ஒரு தொழினுட்பக் கலை வடிவமாக அமைந்துள்ளது என்பதை விளக்கும் முறையிலேயே உரை அமைந்திருந்தது. உரையின் பொழுது சினிமாவின் தொழினுட்ப அம்சம், அது கைத்தொழிலாகவிருக்கும் தன்மை, அது வெகுசனரஞ்சக வடிவமாக இருக்கும் தன்மை, ஆகிய அம்சங்கள் மேற்கிளம்பவே, கலந்துரையாடலின் பொழுது அவ்விடயங்கள் பற்றிய கருத்துகளே அதிக அழுத்தத்துடன் எடுத்துக்கூறப்பட்டன.

சினிமா என்பது என்ன? பேராசிரியர் சிவத்தம்பி விளக்குகிறார்:

'சினிமா என்பது பிரதானமாக அசையும் பிம்பங்களின் வழிவரும் கட்புலக் கவர்ச்சி. இந்தக் கட்புலக் கவர்ச்சியைக் கமராவினாலே அதன் கண்மூலம் நிகழ்த்துதல், ஒலி என்பது ஒளியின் விளக்கத்துக்கான துணைக் காரணம். சினிமாவில் ஓசைக்கு மாத்திரமல்ல நிசப்தத்துக்கும் முக்கிய இடமுண்டு. நுட்பமாகச் சித்தரிக்கப்படல் வேண்டுமென்ற சினிமா பற்றிய அடிப்படையான முக்கிய பண்புகள் சில வற்புறுத்தப்படல் வேண்டும்.' தமிழ் சினிமா பற்றி ஆசிரியரின் கணிப்பு பின்வருமாறு அமைகிறது:

'தமிழ் சினிமா என்பது தமிழ் மொழியின் பேச்சுப் பகுதிகள் கொண்ட சினிமா என்பது வெளிப்படை. தமிழ்மொழி சுட்டும் பண்பாட்டு வட்டத்தின் சமூகப் பிரச்சினைகளைச் சித்திரிக்க முயல்வதைக் காணலாம். தமிழர் பண்பாடு என்னும் கோட்பாட்டை வாழ்க்கையுடன் இணைத்தல் வேண்டுமென்ற ஒரு கருத்து நிலை வற்புறுத்தப்பட்டமையை இத்திரைப் படங்களில் காணலாம். தமிழ்ச் சினிமாவின் கதைப்பின்னல் முரண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டின் தெரிநிலை ஆகியவற்றில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை. ஆனால், சில தோற்ற வேறுபாடுகளே செய்யப்பட்டுள்ளன. முதன்மைப் பாத்திரங்களின் தனித் தன்மை மிதமிஞ்சிக் காட்டப்படுகின்றது. துணைப் பாத்திரங்களின் தனித்துவத்துக்கு அதிக அழுத்தம் கொடுக்கப்படுவதில்லை. நாயக பாத்திரங்களின் தனிமனிதச் சிறப்பு மிகைப்படுத்தப்படுகிறது. நாயக பாத்திரங்கள், குடும்பம் போன்ற சமூக நிறுவனங்களின் அன்றாடப் பிணைப்புக்களுக்கும் அப்பாற்பட்டவையாகக் காட்டப்படுகின்றன. இந்த, மிகைப்படுத்தப்பட்ட, தனி மனிதத்துவும் காரணமாகத் தமிழ் சினிமாவிலே சித்திரிக்கப் பெறும் சமூக மாற்றம் தனிமனித நிலைப்பட்டதாகவே சித்திரிக்கப்படுகின்றது. பிரச்சினையின் உக்கிரத்தைப் பாத்திரங்கள் வெளிப்படுத்தும் நிலைக்குப் பதிலாகப் பாத்திரத்தினாற் பிரச்சினைகள் விளக்கமுறுவதாகச் சித்திரிக்கப்படுகின்றது. தமிழர் பண்பாட்டின் பல கருத்துரு விழுமியங்கள் பிண்டப் பிரமாணமான விடயங்களாக வற்புறுத்தப்பட்டன. இது தமிழ் சினிமாவின் முக்கிய பண்புகளில் ஒன்று. தமிழ்ச் சினிமாவின் பண்பு எனச் சுட்டிக் காட்டத்தக்க ஒரு நகைச்சுவை முறைமை இல்லையெனினும், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனாற் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்ட நகைச்சுவை முறைமை சமூக ஒவ்வாமைகளைச் சுட்டிக் காட்டுவது, சனரஞ்சமாக இருந்தது.'

'தமிழ் சினிமாவின் தனிப்பண்புகளில் ஒன்று. தமிழ் சினிமாவின் பாடல்கள் பெறும் இடமாகும். தமிழ்த் திரைப்படம் கவிதையைப் பயன்படுத்தும் முறைமை பிரமிக்கத்தக்கது. சினிமா என்னும் மேல்நாட்டு வழி வந்த தொழினுட்பக் கலைவடிவில், தமிழ் மயப்படுத்தப்பட்ட நடைமுறையில் இசைக்கு முக்கிய இடமுண்டு. இசையொலிகளைத் தாழ நிறுத்தி, பாடலில் பொருள் முனைப்புப் பெறும் வகையில் இசையமைக்கப் பெற்றும், பாடல்களின் பொருளுக்கேற்பவும் பாத்திரத்தின் மன நிலைக் கேற்பவும் பாடப் பெறவும் தொடங்க பாடல் முக்கியத்துவம் பெறத் தொடங்கிற்று. திரைப்படத்திற் சம்பவங்கள், பாத்திரங்களின் மனநிலைகள் பற்றிய குறிப்புரையாகவும் விளக்கமாகவும் பாடல்கள் அமைந்தன. பண்பாட்டுச் சின்னங்களை உவமையாகவும் உருவங்களாகவும் கொண்ட பாடல்கள் உணர்ச்சி நிலைக்கு ஏற்ற வகையில் பாடப்பட்ட பொழுது அவை சனரஞ்சகமாயின. பாரம்பரியப் பண்பாட்டின் சின்னங்கள் உயிர்ப்புகள் இக்கவிதைகளில் இடம்பெறத் தொடங்கின.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தமிழ் நாட்டிற் சினிமா முக்கியமான சமூக ஈர்ப்பினைப் பெற்றதற்குக் காரணம் அது நவீனமயப்பாட்டு முகவைச் சக்தியாக அமைந்தமையே' என்று கூறும் சிவத்தம்பி, தமிழ்த் திரைப்படத் துறையில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி என்ன நினைக்கிறார்?

'1950-1970 இன் பிரதான பண்பாகக் காணப்பட்டவை பல, இன்று மாறியுள்ளதால் தமிழ் சினிமாவின் அமைப்பில் இன்று சில முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன' என்று ஏற்றுக் கொள்கிறார்.

புது நடிக நடிகையர் வருகை (பழையவர்கள் விநியோகச் செல்வாக்கு மூலம் தமது படிமத்தை மறக்கவொண்ணாமற் பண்ணுகின்றார்.) அதி மனித கதாபாத்திரங்கள் இல்லை. சூழலால் நிர்ணயிக்கப்படும் கதாநாயகன் பாத்திரம் வயதுக்கேற்ற நடிக, நடிகையர் தெரிவுகள் மாற்றங்களில் சில என்கிறார் ஆசிரியர்.

கா. சிவத்தம்பியின் நூல்

1970களின் பிற்பகுதி முதல், தமிழ்த் திரைப்படத்துறை பலவிதங்களில் மாற்றமடைந்து வருகிறது என்பது எனது அவதானிப்பு. இதுபற்றி தனியாக ஆராய வேண்டும்.

பேராசிரியர் சிவத்தம்பி, ஆய்வறிவுசார் அலசல் ஒன்றை இப் புத்தகத்தில் மேற்கொண்டுள்ளார். விரிவான ஆராய்ச்சி எந்த எந்த வழிகளில் மேற்கொள்ளப்படலாம் என்பதற்கான ஒரு வழிகாட்டியாகவும் இந்த நூல் அமைகிறது. வெகுசனத் தொடர்பு இயல் மாணவருக்குப் பெரிதும் உதவக்கூடியது தமிழ்ச் சமூகமும் அதன் சினிமாவும்.

'திரைப்படத்தின் இலக்கணம்' (Grammar of Cinema) என்ற வகையில் கே.எஸ். சிவகுமாரன் எழுதிய 'அசையும் படிமங்கள்', மற்றும் 'அனைத் துலகக் கலைப்படங்கள்' சிலவற்றின் திறனாய்வாக அமைந்த 'சினமா, சினமா - ஓர் அறிமுகம்' என்ற நூல்களும் குறிப்பிடத்தக்கவை எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

கைலாசபதியின் திறனாய்வு அணுகுமுறை

பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி கலை, இலக்கிய, கல்வி, சமூக, அரசியல் துறைகளிலே பரிமாணங் கொண்ட பங்களிப்பினைச் செய்து விட்டு மறைந்த ஓர் ஆய்வறிவாளர். இன்டலெக்சுவல் (Intelectual) என்ற ஆங்கிலப் பதத்திற்குச் சமமாக ஆய்வறிவாளர் என்ற பிரயோகத்தைப் பிரபல்யப்படுத்திய முதல்வர்களில் அவர் முக்கியமானவர்.

இந்த ஆய்வறிவாளர், விமர்சகர் அல்லது திறனாய்வாளராகவும் கணிக்கப்படுகிறார். ஏனைய திறனாய்வாளர் போன்று கைலாசபதியை மதிப்பிட முடியாதிருக்கிறது. இதற்குக் காரணம், இவர் இலக்கிய வரலாற்றாசிரியனாக நின்றே தமது திறனாய்வைச் செய்திருக்கிறார். அதாவது, ஒரு மதிப்புரையாளனாகக் குறிப்பிட்ட ஓர் ஆக்கத்தைப் பற்றியோ, ஆசிரியனைப் பற்றியோ இவர் எழுதியவை எண்ணிக்கையில் அதிகமில்லை. ஒரு சில நூல்களுக்கு முன்னுரை எழுதும் பொழுதும் கூட பொதுப்படையான அடிப்படைச் சிந்தனைகளைத் தான் தொட்டுச் சென்று வலியுறுத்த வேண்டியவற்றை வலியுறுத்தி இருக்கிறார்.

புறநடையாகக் காவலூர் ஜெகநாதன், சாந்தன் ஆகியோரின் சிறுகதைத் தொகுப்புகளுக்கு எழுதிய முன்னுரைகளை 'ப்ரக்டிக்கல் கிரட்டிசிஸம்' எனலாம். கைலாசபதியின் வாக்கியத்தில் கூறுவதானால், புறநிலைக் கொள்கை என்ற வகையில் அடக்கலாம்.

ஆக, கைலாசபதி மதிப்புரைகளை எழுதுவதை விட தனி இயக்கங்கள், போக்குகள், தனியாட்கள் போன்றவற்றைப் பற்றிய அறிவாராய்ச்சிக் குறிப்புக்களையும் திறனாய்வுக் கட்டுரைகளையும் எழுதி இருக்கிறார். அதாவது, அவர் இலக்கிய வரலாற்றைப் புதிய முறையில் அணுகி, இலக்கிய வரலாற்றாசிரியர்களுக்குக் குறிப்பாகவும், இலக்கிய மாணவர் களுக்குப் பொதுவாகவும் எழுதும் ஓர் ஆய்வறிவாளர். எனவே தான் கைலாசபதியை ஒரு சாமான்ய விமர்சகராகக் கருத முடியாதிருக்கிறது.

அவருடைய ஆரம்ப நூல்களில் ஒன்றான 'பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்' என்ற நூலை எடுத்துக்கொண்டால், சங்ககாலம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமருவியகாலம், பல்லவர்காலம், சோழர் காலம் ஆகிய காலங்களில் எழுந்த தமிழ் இலக்கியங்களை வர்க்க அடிப்படையில் அணுகிப் புதிய கருத்துக்களை அவர் தெரிவித்திருப்பதை நாம் காண்கிறோம். கைலாசபதி தெரிவித்துள்ள கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு, தமிழ் நாட்டு தமிழ் இலக்கிய நவீன ஆய்வாளர்களில் ஒருவராகிய கோ. கேசவன், 'மண்ணும் மனித உறவுகளும்' என்ற நூலை எழுதி இருப்பதை அவதானிக்கிறோம். இது போன்றே நாவல், ஒப்பியல், 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியப் புதுப் புனைவாளர்கள், சிந்தனையாளர்கள் போன்ற விஷயங்கள் குறித்து, தமிழ் இலக்கிய வரலாறாகவே கைலாசபதி எழுதுவதை நாம் காண்கிறோம்.

கைலாசபதி ஓர் இலக்கிய வரலாற்றாசிரியன் என்ற முறையில் முழுமையான கணிப்பை மேற்கொள்ள நூல் வடிவம் பெறாத பல கட்டுரைகள் இருக்கின்றன. அவை அனைத்தும் நூல் வடிவம் பெற்றால் தான், கைலாசபதியின் ஆளுமையை ஓரளவு கணிக்கமுடியும்.

இலக்கியத் திறனாய்வு தொடர்பாக, குறிப்பாக, ஈழத்து இலக்கிய விமர்சனம் தொடர்பாக, கைலாசபதி பின்பற்றிய அணுகுமுறையை விளக்கிக் காட்டுவதே இவ்விடத்தில் எனது நோக்கம். இந்த முயற்சிக்கு ஆதாரமாகக் கைலாசபதியின் மூன்று பிரசுரங்களை எடுத்துக்கொள்வோம். அவையாவன: 'இலக்கியமும் திறனாய்வும்' (1973-1976), 'இலக்கியச் சிந்தனைகள்' (1983) (இந்நூலில் இடம்பெற்றுள்ள 'தமிழும் விமர்சன இலக்கியமும்' என்ற கட்டுரை விசேடமாகக் குறிப்பிடத்தக்கது). 'ஈழத்தில் இலக்கியத் திறனாய்வு' (இக்கட்டுரை இந்தியாவில் வெளியாகிய 'சுடர் மலர்' என்ற ஏட்டில் இடம்பெற்றது).

முதலிலே 'ஈழத்தில் இலக்கியத் திறனாய்வு' என்ற கட்டுரையில் கைலாசபதி தெரிவிக்கும் கருத்துகளைப் பார்ப்போம்.

திறனாய்வு என்பது இக்காலத்தில் எதனைக் குறிக்கும்? இதற்கு ஓரளவு நிறைவான பதிலைப் பேராசிரியர் தருகிறார்.

அழகைச் சுவைப்பதுடன், அதனோடு பிரிக்க இயலாதவாறு பிணைக் கப்பட்டிருக்கும் செய்திகளையும் சிந்தனைகளையும் கருத்துருவங்களை யும் கண்டுகொள்வதும் அவற்றை மதிப்பிடுவதும் அவற்றுக்கு விளக்கம் உரைப்பதும் திறனாய்வின் பண்பும் பயனும் ஆகும். இன்றைய திறனாய்வு, விவரித்து விளக்கும் முறையைப் பற்றுக்கோடாய்க் கொண்டது என்பதில் தவறில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாசிரியர் மரபு போன்று, திறனாய்வு மரபு இலங்கையில் உண்டா? ஆம். இடைக்கால உரையாசிரியர் மரபு நமது நாட்டிலும் செழித்து வளர்ந்து வந்திருப்பதாகக் கைலாசபதி தெரிவிக்கிறார். இதற்கு ஆதாரமாக மா.பீதாம்பரன் எழுதிய ஈழநாட்டு உரையாசிரியர்கள் (கணேச ஐயர் நினைவு மலர் - 1960) என்ற கட்டுரையைக் குறிப்பிடுகிறார். சித்தியாருக்கு உரைகண்ட ஞானப்பிரகாச முனிவரிலிருந்து சங்க நூற் செல்வர் க. அருளம்பலனார் வரை இம்மரபு குறிப்பிடத்தக்க விதத்தில் ஈழத்தில் நீடித்துள்ளது என்பது கைலாசபதியின் அவதானிப்பு. பண்டித முறைத் திறனாய்வு, மரபுவழித் திறனாய்வு என்று இம்முறையைக் கைலாசபதி விவரிப்பார். இந்தப் பண்புள்ளோர் சிலரில் சி. கணேசஐயர், வ.மு. இரத்தினேஸ்வர ஐயர், விபுலானந்த அடிகள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சோ. இளமுருகனார், பண்டிதர் க. வீரகத்தி ஆகியோரின் பெயர்களைக் கைலாசபதி குறிப்பிடுகிறார்.

இரசனை முறைத் திறனாய்வு அல்லது சுவையுணரும் நோக்குத் திறனாய்வு என்ற வகையில் விபுலானந்த அடிகள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆகியோரும் க.ச. அருள் நந்தி, தி. சதாசிவ ஐயர், அ.வ.மயில்வாகனன், மா. பீதாம்பரன், கனக செந்திநாதன், பண்டிதர் பொ.கிருஷ்ணபிள்ளை, பண்டிதர் க.பொ. இரத்தினம் போன்றோரும் பங்களிப்பு செய்ததாகக் கைலாசபதி குறிப்பிடுகிறார்.

முதலிரு பிரிவினருக்கும் இலக்கியத்தின் பயன், இலக்கியத்தில் இடம் பெறக்கூடிய பொருள், இலக்கிய ஆசிரியர்கள் கையாளவேண்டிய மொழிநடை என்பன பற்றிக் கருத்து வேறுபாடு இருக்கவில்லை என்று கைலாசபதி திட்டவட்டமாக தெரிவிக்கிறார்.

ஈழத்து நவீன திறனாய்வாளர்களின் முன்னோடியாக இலங்கையர் கோன், சி. வைத்திலிங்கம், சோ. சிவபாதசுந்தரம் ஆகியோரைக் கைலாசபதி குறிப்பிட்டுள்ளார். கலைப்புலவர் க. நவரத்தினம், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, மு. இராமலிங்கம் ஆகியோரின் பங்களிப்பையும் பதிவு செய்கிறார். இங்கு, எனது ஆய்வுக்கணிப்பொன்று, கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எனது கணிப்பின்படி, ஈழத்தின் முன்னோடித் திறனாய்வாளர் சுவாமி விபுலானந்தர் ஆவார். பார்க்க: 'எனது திறனாய்வு பார்வைகள்', (1998).

தனிப்பட்ட இலக்கியப் படைப்புகள் மட்டுமன்றிப் பொதுவாக இலக்கியம் தொடர்பான பல்வேறு செய்திகள் குறித்தும் கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலும் உண்மை விளக்கம் தரும் நோக்கிலும் சிலர் எழுதினர். கே. கணேஷ், அ.ந. கந்தசாமி ஆகியோர் இத்தொடர்பில் விதந்துரைக்கப்பட வேண்டியவர்கள் என்கிறார் கைலாசபதி.

ஐம்பதுகளின் இறுதியிலிருந்து க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, ஏ.ஜே. கனகரத்னா, சி. முருகையன், சில்லையூர் செல்வராசன் ஆகியோர் தீவிரமாக செயற்பட்டு வருபவர்கள் என்றும் குறிப்பிடும் பேராசிரியர், ஈழத்து இலக்கியங்கள் மட்டுமன்றிப் பொதுவாகத் தமிழ் இலக்கியத் திறனாய்வும் ஆழ அகலம் பெற இவர்கள் பங்களித்துள்ளமை நன்கு தெரிந்த செய்தியாகும் எனவும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தமது கட்டுரையிலே, பேராசிரியர் கைலாசபதி தொடர்ந்து கூறியிருப் பதாவது:

> இவர்களுக்கு (முற்கூறப்பட்டவர்கள்) காலத்தால் சிறிது பின்னதாக கே.எஸ். சிவகுமாரன், ஆ. சிவநேசச்செல்வன், சபா ஜெயராசா, சித்திரலேகா மௌனகுரு, எம்.ஏ. நுஃமான், செ. யோகராசா, க. நவசோதி முதலியோர் திறனாய்வுத்துறையில் ஆர்வத்துடன் உழைத்து வருகின்றனர். இலக்கிய உலகின் வளர்ச்சியினால், பல்கலைக்கழகத் தமிழ் துறைகளும் திறனாய்வுக்கு உரிய இடத்தை அளிக்கத் தொடங்கி யுள்ளன. முற்கூறிய சிலருடன், சி. தில்லைநாதன், பொ. பூலோக சிங்கம் ஆகிய இருவரும் இலக்கிய ஆய்வில் ஈடுபட்டு வந்துள்ளனர். குறிப்பாக, கடந்த நூற்றாண்டுகளில் ஈழத்தில் எழுதப் பெற்ற இலக்கிய ரசனைத் திறனாய்வு செய்யும் முயற்சிகள் இப்பொழுது ஆழமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'சுடர் மலர்' (1978) என்ற தில்லி ஏட்டில் வெளியாகிய கட்டுரையில் இடம்பெற்ற சில குறிப்புகளை முன்னர் பார்த்தோம். இக்குறிப்பு களிலிருந்து பேராசிரியர் கைலாசபதியின் அணுகுமுறை எவ்வாறு செயற்பட்டுள்ளது என்பதை ஒருவாறு நாம் மனங்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. அவருடைய அணுகுமுறையைத் தெளிவாக விளங்கிக் கொள்ள 'இலக்கியச் சிந்தனைகள்' (1983) என்ற நூலில் இடம்பெற்ற கட்டுரையை எடுத்துக் கொள்வோம். இந்த நூலைத் தொகுத்துப் பதித் திருப்பவர், பிரபலப் படைப்பாளியும் மார்க்சிய கலை இலக்கிய விமர்சகருமான செ. கணேசலிங்கன் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். ஏனெனில், இத்தொகுப்பில் இடம்பெற்ற கட்டுரைகள், பேராசிரியர் கைலாசபதியின் சமூகவியல் அழுத்தம் பெற்ற சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தழுவியதாய் இருப்பதுதான். சமூகவியல் பார்வை தவிர்க்க முடியாமல் மார்க்சியஞ் சார்ந்ததுதான் என்பதை வாசகர்கள் அறிவார்கள்.

தமிழின் நவீன இலக்கிய விமர்சனம் தோற்றுவதற்குரிய முன்னீடுகள் பற்றிப் பேராசிரியர் கைலாசபதி எடுத்துக்கூறும் பொழுது, ஆய்வறிவு முறை, மரபு எதிர்ப்பு உணர்வு, புதிது புனையும் ஆர்வம் ஆகிய அடிப்படை முதல் தேவைகளைச் சுட்டிக் காட்டுகிறார். சி.வை. தாமோதரம்பிள்ளையை மூல பாடத்திறனாய்வு முன்னோடியாக இனங்காணும் பேராசிரியர், பிள்ளையவர்களிடம் முனைப்பான விமர்சன வீச்சு காணப்பட்டதையும் சுட்டிக் காட்டுகிறார்.

நவீன இலக்கிய விமர்சன அணுகு முறை பற்றிப் பேசும்பொழுது, விமர்சன இலக்கியம் தன்னளவிலே செழித்து வளர்ந்துவிட இயலாது. மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, மெய்யியல், சமயம் முதலிய ஏனைய துறைகளில் நிகழும் ஆய்வுகளுக்கியைந்த முறையிலேயே இலக்கிய விமர்சனமும் இடம்பெறும் என்ற பண்பையும் திறனாய்வாளர் கைலாசபதி வலியுறுத்தியிருக்கிறார். இதனையே தமது 'சமூகவியலும் இலக்கியமும்' (1979) என்ற நூலின் முன்னுரையிலே அழுத்தந் திருத்த மாகக் குறிப்பிடுகிறார். அவருடைய அணுகுமுறை என்ன என்பதையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது என்று கைலாசபதி கூறுகிறார்.

> 'திறனாய்வுத் துறையில் முக்கிய கவனஞ் செலுத்தத் தொடங்கிய கால முதல் கலை, இலக்கியம் முதலியவற்றை அவற்றுக்குரிய வரலாற்றுப் பின்னணியிலும் சமுதாயச் சூழலிலும் வைத்தே ஆராய்ந்து வைத்திருக் கிறேன். மார்க்சியத்தைத் தழுவிக் கொண்ட நாள் முதலாக அதனை முனைப்பான கூறுகளில் ஒன்றாகிய சமூகவியலை எனது பல்வேறு ஆய்வுகளுக்கும் பற்றுக்கோடாகக் கொண்டு வந்துள்ளேன். சமூக வியலில் உண்டாகிய ஈடுபாடே ஒப்பியல் ஆய்விற்கு என்னை இட்டுச் செல்கிறது. இவற்றின் பயனாக இலக்கியத்தை அறிவியல் அடிப் படையில் அணுகக் கற்றுக் கொண்டேன்'....... 'நவீன காலத்திலே திறனாய்வு தனிப்பட்ட ஓர் ஆய்வுப்பிரிவாக இயங்கி வருகிறது. நோக்கம், ஆய்வுமுறை, பண்பு, பயன்பாடு இவற்றில் தனக்கெனச் சில சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது. இலக்கண விதிகளை மட்டும் அது பிரமாணமாகக் கொள்வதில்லை. மனித வாழ்க்கையை விவரித்து விளக்கங்கூறும் அறிவுத்துறைகள் பலவற்றை அது சார்ந்து நிற்கிறது. மனிதப் பண்பியல் துறைகளான வரலாற்றியல், தொல்பொருளியல், மெய்யியல், அழகியல், மொழியியல் முதலியவற்றுடன் சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> விஞ்ஞானத்துறைகளான மானிடவியல், சமூகவியல், உளவியல், அரசியல், பொருளியல், மக்கட் பண்பாட்டியல் என்பனவும் இலக்கிய ஆய்விற்கு இன்று, இன்றியமையாதன. தனித்தும், சார்ந்தும் இயங்கும் திறனாய்வை முற்கால இலக்கிய ஆய்வுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.'

பேராசிரியர் கைலாசபதி 'தமிழும் விமர்சன இலக்கியமும்' என்ற தமது கட்டுரையிலே ('இலக்கிய சிந்தனைகள்' என்ற நூலில் இடம் பெற்றது), பண்டிதத் திறனாய்வு, புதுமை மோகத் திறனாய்வு என்ற இரு போக்குகள் பற்றியும் விளக்கிக் காட்டுகிறார். இத்தகைய இரு முனைப்பட்ட விமர்சன அணுகு முறைக்கு மாற்று மருந்தாகவும், உண்மையான நவீன விமர்சனத்துக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குவது சமூகவியல் அணுகு முறையாகும். இது கணிசமான அளவுக்கு மார்க்சியத்தினால் நெறிப்படுத் தப்படுவதொன்று எனக்கொள்ளலாம். இவ்வாறு தமது அணுகுமுறையை நியாயப்படுத்தும் கைலாசபதி, இந்த அணுகுமுறையின் சிறப்பியல்பு களையும் எடுத்துரைக்கிறார்.

> 'இலக்கியத்தை அடிப்படையில் சமூக விளைபொருளாகக் கொண்டு, அதனை உரிய வரலாற்றுச் சூழலில் வைத்து நோக்கி, அதன் உயிராற்றல் காலத்துக்குக் கட்டுப்பட்டும், காலத்தை வென்றும் நிற்கும் தன்மையை விளக்குவதே சமூகவியல் அணுகுமுறையின் பிரதான அம்சங்களாகும்.'

வரலாற்றுப் பார்வை, வர்க்க ஆய்வு, அழகியல் அக்கறை ஆகிய மூன்றையும் இணைத்து விமர்சிக்கும் பார்வை கைலாசபதியுடையது. பொதுவுடைமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்ட கைலாசபதி, சிவத்தம்பி, முருகையன், கே. சண்முகலிங்கம், என். சண்முகரத்தினம், எம்.ஏ. நுஃமான், சி. மௌனகுரு, இளைய பத்மநாபன் முதலியோர் அண்மைக் காலத்திலே, 'விமர்சனத்திலே ஆழமான பார்வையையும் நுட்பமாக திறன்முறைகளையும் புகுத்தியவராவர்' என்கிறார் பேராசிரியர். விமர்சன இலக்கியம் ஆற்றலும் ஆழமும் பெற வேண்டுமாயின், அது, உலகத்தை மாற்றியமைப்பதற்கு உழைக்கும் வர்க்கமும் அதன் நேச சக்திகளும் ஓயாது பயன்படுத்தும் அறிவாயுதமாகவும் இருத்தல் வேண்டும் என்கிறார் கைலாசபதி. அவ்வாறு பார்க்கும் பொழுது செ. கணேசலிங்கன், சி. சிவசேகரம் என்ற இரு தீவிர மார்க்சிய விமர்சகர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் விட்டுவிட்டாரென்பதையும் குறிப்பிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக 'இலக்கியமும் திறனாய்வும்' என்ற நூலிலே பேராசிரியர் கைலாசபதி தெரிவித்திருக்கும் கருத்துக்களைத் தொகுத்து நோக்குவோம்.

> 'செய்முறைத் திறனாய்வு எமது இலக்கிய உலகிற் காணப்படும். அநுபூதி நெறி ரசனை என்ற தீங்கினைத் தவிர்க்கும் மாற்று முறையாக அமைய முடியும். ஆரம்ப நிலையில் அது இன்றியமையாததாகும். இல்லாவிடில் பகுத்தாய்வுக்கும் உறுப்பாய்வுக்கும் இடந்தராத மூடு மந்திரமாகவே கவிதை இருக்கும். செய்முறைத் திறனாய்வு மூலமாகவே, கவிதை ஆய்வானது அகநிலைப்பட்டதாயன்றிப் புறநிலை சார்ந்ததாய் அமையும் வாய்ப்பைப் பெறுகிறது. விதி முறையாலன்றி விவரண முறையாலும், விளக்க முறையாலும் இலக்கியத்தைச் சுவைக்கும் நெறி வளர்ச்சி பெற முடியும்.'

பேராசிரியர் கைலாசபதியின் கருத்துகளைத் தொகுத்து நோக்கும் போது ஈழத்திலே பல நெறிகளையும் உள்ளடக்கிய சமூக வரலாற்றுப் பின்னணியில் இலக்கியத்தை மதிப்பிடும் போக்கு வளர்ந்து வருவதை அவர் விரும்பி வலியுறுத்தினார் என்பது தெரியவருகிறது. சமூகவியல் பார்வை கைலாசபதியினுடையது. இதில் மார்க்சியம் கலந்திருப்பதையும் அவதானிக்கலாம். அதே சமயம், வறட்டு மார்க்சிய சுலோகங்களை உச்சரிக்காமலே, கல்விமான் என்ற முறையிலே, பரவலாகவும் ஆழ மாகவும் அவர் இலக்கியத்தை விமர்சித்தார். இன்றைய இலக்கியப் போக்குகளின் கலாசார வேர்கள் 19 ஆம் நூற்றாண்டிலிருப்பதை அவர் கோடிட்டுக் காட்டினார். 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் அறிஞர்கள் பற்றிய புனர் மதிப்பீடுகள் கைலாசபதியின் தனியான சிந்தனைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

சுவாமி விபுலாநந்தர் ஈழத்தின் திறனாய்வு முன்னோடி

சுவாமி விபுலாநந்தர், எவ்வாறு இலங்கைத் தமிழ்த் திறனாய்வுத் துறைக்கு மாத்திரமன்றிப் பொதுவாகத் தமிழ்த் திறனாய்வுத் துறைக்கும் முன்னோடியாக இருந்தார் என்பதைப் பார்ப்போம். கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பிற்கான பாடத்திட்டத்தை வரைந்த குழு, அவ்வகுப்பிற்குரிய பாட நூல்களுள் ஒன்றாக விபுலாநந்த அடிகள் எழுதிய இலக்கியக் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பை, 1974 ஆம் ஆண்டு வெளியிட்டது.

அந்த நூலில் இடம்பெற்ற கட்டுரைகளை ஆதாரமாகக் கொண்டே எனது கருத்தை நிறுவ முயல்கிறேன். கருத்தை, கருத்தாக மாத்திரம் தெரிவித்தால் போதுமானதாக அமையாது. எனவே, குறிப்பிட்ட கட்டுரைகளில் இருந்து பொருத்தமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து விளக்க முயல்கிறேன்.

முதலிலே, 'இலக்கியச் சுவை' என்ற தலைப்புள்ள கட்டுரையைப் பார்ப்போம். 1939 ஆம் ஆண்டு கல்முனை நகரத்தில் நடைபெற்ற ஆசிரியர் விடுமுறைக் கழகத்தினரின் ஒரு கூட்டத்தில் அடிகளார் தலைமை தாங்கினார். அங்கு, இலக்கியம் கற்றலும் இலக்கியச் சுவையில் ஈடுபடலும் என்பது பற்றி அவர் ஆற்றிய இலக்கிய நயச் சொற்பொழிவு இதுவாகும்.

எம்மில் பலர் இன்றும் கூடப் பழந்தமிழ் இலக்கிய வரிசையை வகுதி ரீதியில் நிரற்படுத்தத் தெரியாதவர்களாக இருக்கிறோம். ஆயினும் சுமார் 53 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் இலக்கியங்கள் எவ்வாறு சுவை பயக்கின்றன என்று அடிகளார் வகுத்தார். அவர் கூறுகிறார்:

> 'பரந்துபட்ட தமிழ் இலக்கியம் என்னும் பரவையின் உள்ளே சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்து நல்லியப் புலவர் வகுத்தமைத்த பத்துப் பாட்டும், எட்டுத்தொகையும், பதினெண் கீழ்க்கணக்கு என்பனவும் பின்னரெழுந்த சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலகேசி என்பனவும் கொங்குவேள்மார்க் கதையின் மூவர் தமிழும், திருவாசகமும் திருக்கோவையாரும், நல்லாயிரத் திவ்வியப் பிரபந்தமும், பெரிய புராணம், ராமாவதாரம், கந்த புராணம், வில்லி பாரதம், திருவிளையாடற் புராணம் இரண்டும் என்பனவும் ஆரியப்புலவர் பாகவதமும், காசிதாண்டவமும், நைடதமும், ரகுவமிசமும், தேம்பாவணியும், சீறாப்புராணமும், இரட்சணிய யாத்திரிகமும், சிறு பிரபந்தங்கள் என நின்றவற்றுள்ளே குமரகுருபரரும், சிவப்பிரகாசமும், மீனாட்சிசுந்தரரும், சுப்பிரமணிய பாரதியும் வகுத்தமைத்தனவும் தமிழ் மாணவராலே பயிலப்பட்டு வருகின்றன. இவை யாவும் செய்யுள் நடை இலக்கியங்கள்.

உரை நடை இலக்கியங்கள் தமிழில் அருகி நடப்பன. நக்கீரனார் கண்ட களவியல் உரையும், பரிமேலழகியார் ஈர்ந்த திருவருளுரையும், நச்சினார்க்கினியர் அருவந்தளித்த சிந்தாமணியுரையும் அடியார்க்கு நல்லார் வழங்கிய சிலப்பதிகார உரையும், பெரியாச்சான்பிள்ளை உதவிய பிரபந்த உரையும், ஆறுமுகநாவலர் அன்பினோடருளிய பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் என்பனவும் இந்நாளிலெ தமிழுக்கு வரம்பாகி, தென்றிசைக் கலைச்செல்வர், பெரும் பேராசிரியர், எழுத்தறி புலவர், என உலகு புகழ, நீடு நின்று தமிழ் தொண்டாற்றி வரும் சாமிநாதர் அருளிய மீனாட்சிசுந்தரர் சரிதம், உதயணன் கதை, பௌத்த தர்ம சங்கம் என்பனவும் சிந்தாமணி, சிலப்பதிகார, மணிமேகலைக் கதைச் சுருக்கங்களும், உரை நடை இலக்கியங்களாகி நிலவுகின்றன.'

இவ்வாறு குறிப்பிட்ட விபுலாநந்த அடிகள் பின்னர் 'இலக்கியம் இவை யெனத் தந்தொம். இனி, இலக்கியச் சுவையாவது யாது, அச்சுவையில் ஈடுபடுவதற்கு வேண்டிய மனப்பழக்கம் யாது, இலக்கியம் கற்றற்கு இயைந்த கருவிகள் யாவை' என்பன போன்ற வினாக்களை எழுப்புகிறார். இவ்வாறு செய்வதே ஒரு திறனாய்வாளரின் முயற்சிகளில் முதல்படி நிலைகளாகும். இந்தப் படிகளை அரை நூற்றாண்டுக்கு முன்னரே விபுலாநந்த அடிகள் தெட்டத்தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். அது மாத்திரமல்ல, கலை இலக்கியத்துறைகளில் அடிநாதமாகத் தொனிக்கும் விஷயங்களை, இன்றைய விமர்சகர்கள் இன்று கூறி வரும் அதே கருத்து களை, அன்றே அவர் கூறியுள்ளதையும் அதானிக்கலாம். உதாரணமாக, விபுலாநந்த அடிகள் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

'மனமானது வெளிப்பாட்டுத் தோன்றுமிடத்து அறிவு, இச்சை, துணிவு என முத்திறப்பட்டு நிற்கும் என்பது மன நூலார் கண்ட முடிவு. அறிதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இச்சித்தல், தணிதல் என்னும் முத்திறச் செயலின் தெளிவு, இனிமை, உறுதி என்னும் குணங்களை அளவி நிற்பன. இவை முறையே உண்மை, அழகு, நன்மை என்னும் குணிகளைச் சார்பன.'

இதற்கு அடுத்ததாக நூல்கள் எவ்வாறு வகுக்கப்படலாம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

> 'உண்மை உணர்த்தும் நூல்களும், பூத பௌதிக விஞ்ஞான நூல்களும், தர்க்க நியாய தத்துவ நூல்களும், அழகை உணர்த்துவன் இசை ஓவிய நூல்கள், நன்மை ஆகிய அனைத்தும் உணர்த்துவ நல்லிசைப் புலவர் அளித்த இலக்கிய நூல்கள். இவை செய்யுள் எனப்படும்.'

பேராசிரியர் விபுலாநந்தர் அவர்கள் செய்யுளின் முக்கியத்துவத்தையும் தொட்டுக் காட்டுகிறார்.

> 'ஏனைய கலைத்துறைகள் உள்ளத்தின் ஒவ்வொரு திறத்தினைப் பற்றி நிற்கச் செய்யுள் மாத்திரம் உள்ளம் முழுவதையும் பற்றி நிற்கும். ஆதலினாலே மதிப்பிடற்கரியதொரு நிறைவினையும் மறுமலர்ச்சி யையும் உள்ளத்திற்கு அளிக்கும்.'

திறனாய்வாளன் ஒருவனின் தேடல் முயற்சிகளில் ஒன்று ஒப்பீடு ஆகும். பல்வேறு இலக்கிய வகைகளுக்கும் இடையில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பது அதன் பணிகளில் ஒன்று எனலாம். வில்லி பாரதத்தில் வரும் இலக்கியக் காட்சிகளைக் கிரேக்கக் கவி ஹோமரின் (Homer) படைப்புகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் முன்னோடித் தன்மையை விபுலாநந்தர் அவர்களிடம் காண்கிறோம். பிற்காலத்தில் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் தமிழ் சங்க காலப் படைப்புகளைக் கிரேக்க வீர காவியங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் பெறுவதற்குத் தூண்டு கோலாக, சுவாமி விபுலாநந்தரின் இந்த ஒப்பீட்டுப் பாங்கு அமைந்ததோ என்றும் நாம் வியக்கலாம். குறிப்பிட்ட வில்லி பாரதக் காட்சியொன்றை விளக்கிய அடிகளார், 'இத்தகையதோர் காட்சி களை ஹோமர் எழுதிய வீர காவியங்களிலும் காண்தலரிது' என்று கூறுகிறார்.

ஒப்பீட்டாய்வு என்று பார்க்கும் பொழுது வில்லி பாரதத்தில் வரும் போர்க்களத்திலும் பூஞ்சோலையிலும் காட்சிகளை ஒப்பிட்டு இலக்கியச் சுவை எத்தகையது என்று அவர் விளக்குகிறார். அது வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> 'போர்க்களத்திலே பெருமிதச் சுவை தலையாய சுவையாகி நிற்கும். செயற்கருஞ் செயல்களைக் கண்டு இறும்பூதெய்தும் உள்ளத்திலே மருட்கை என்னும் சுவை தோன்றும். எள்ளி நகைக்கின்ற நகையும் அசைவு கண்டிரங்கும் அவலமும் பகைமேற் செல்லும் வெகுளியும் இகழ்ந்தரையாடும் இழிவரலும் அஞ்சத்தக்கன. கண்டுழி நிகழும் அச்சமும் வெற்றியாலெய்திய உவகையும் என ஏனைய சுவைகளும் போர்க் களத்திலே தோன்றுதற்குரிய.'

இவ்விதமாகச் சுவைகளைச் சுட்டிக் காட்டிய விபுலாநந்தர், தொடர்ந்து பூஞ்சோலைக்காட்சியை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்:

> 'பூஞ்சோலைக்காட்சியின் உள்ளே காதலர் இருவர் கருத்தொப்ப ஆதரவுபட்ட உவகையும், இனிய நகையும், வியப்பின்பாலதாகிய மருட்கையும், பிரிவுநோக்கிய அச்சமும், பிரிவாலெய்திய அவலமும், பெருவரவின் பொருள் குறித்து எழுந்த சுவையினால் மாத்திரமன்று, பாவினகத்து எழுத்துக்கள் அமைந்து நின்ற தாளவிகற்பங்களினாலும், கவிஞர் தமது உள்ளக் குறிப்பினை வெளிப்படுத்துவார்.'

அடிகளார் மேலும் விளக்குகிறார்.

வளவன்பதி முதலாக வயங்கும்பதி தோறும்
துளவங்கம ழதிசீதள தோயங்கள் படிந்தே
இளவண்டமி றெழுதேடுமுன் னெதிரேறிய துறைசூழ்
தளவங்கமழ் புறவஞ்செறி தண்கூடல் புகுந்தான்

என்னும் செய்யுளின் பின் 'குன்றில் இளவாடை வரும் பொழுதெல்லாம்' என்னும் செய்யுள் வருகிறது. இடையினவெழுத்துப் பயின்று மெல்லென்று நீர்மையாகி நிற்கும் 'துழவங்கம ழதிசீதள தோயம்', 'இளவண்டமழி றெழுதேடு', 'தவழங்கமழ் புறவம்' என்னும் சொற்றொடர்களின் நயத்தை நோக்கும்படி கூறுகிறார் அடிகளார்.

இந்தக் கட்டுரையில் பேராசிரியர் விபுலாநந்த அடிகள் மடக்குகள் பற்றியும் சுவைகள் பற்றியும் எடுத்துக் காட்டியிருப்பதுடன் சந்த விருத்தத்தின் இலக்கணத்தை நாம் அறிந்திருக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறுகிறார்.

இன்றைய சூழலில் இந்த விமர்சன அணுகு முறைகள் ஒன்றும் புதிதானவை போல் தோன்றாமல் இருக்கலாம். ஆயினும், இந்த அணுகு முறைகள் தமிழ் இலக்கியப் பரப்பில் நவீனத்துவ நோக்கில் முதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவையாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துகளாகும். அதனால் தான் விபுலாநந்த அடிகளைத் தமிழ் திறனாய்வுத்துறை முன்னோடியென நாம் வலியுறுத்துகிறோம்.

சென்சிபிலிட்டி (Sensibility) என்ற ஆங்கில விமர்சனப் பதம் பற்றி இன்னமும் தெளிவான ஓர் விளக்கம் நம்மிடையே இருப்பதாகத் தெரிய வில்லை. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி 'சென்சிபிலிட்டி' என்ற ஆங்கில வார்த்தைக்குக் கொடுக்கும் வியாக்கியானம் வருமாறு: 'ஊறுகோள் உணர்ச்சி, உணர்ச்சி வயப்படும் நிலை, எளிதில் உணர்ச்சி களுக்கு ஆட்படும் நிலை, உணர்வுச் செவ்வி, மெய்யுணர்வு நயம், எளிதில் ஊறுபடும் தன்மை.'

விபுலாநந்த அடிகள் 'செந்தமிழ்' என்ற ஏட்டில், 1940 ஆம் ஆண்டு வெளியாகிய 38 ஆம் தொகுதியில், 'ஐயமும் அழகும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையில் 'சென்சிபிலிட்டி' என்ற ஆங்கில விமர்சனப் பதத்தின் நுட்ப வியாக்கியானத்தை பின்வருமாறு தமிழ் இலக்கிய ரீதியாக அவர் விளக்கும் பாங்கு பாராட்டத்தக்கது:

> 'காட்சிக்கும் துணிவுக்கும் இடையே ஐயம் நிகழும். காட்சி ஐம்புல வாயிலாக எய்தும் உணர்வு, துணிவு யாதொரு பொருள் யாதோர் இயல்பிற்றாயற்றோன்றினும் அத்தோன்றிய வார்த்தை கண்டொழியாது அப்பொருளின் கண் நின்று மெய்யாகிய பொருளைக் காணும் மெய் யுணர்வு ஆதலின் ஐயத்தின் நீங்கிற் தெளிந்தாரான் எய்துற்குரியது.'
>
> 'அளவினால் எல்லைப்பட்ட பொருளினைக் கண்ணுற்றான் ஒரு நோக்கோடு அமைவான். நோக்குந்தோறும் புதிய புதிய அழகினைத் தோற்றுவிக்கும் ஒரு பொருள் கண்ணெதிர்ப்படுமாயின் அதனைக் கண்டோன் நோக்கிய கண் இமையால் நோக்கி நோக்கி அப்பொருளின் காட்சி நலனைத் துய்த்தற்கு முயல்வான். இம்முயற்சியே ஐயவுணர்விற்கு அடிப்படையாயிற்று. ஆதலினாலே ஈண்டு நாம் ஆராயும் காட்சி, ஐயம் என்னும் இரண்டினுள்ளும் காட்சியினும் ஐயம் சிறப்புடையது என்று அறிதல் வேண்டும். ஐயமானது வியப்பு எனவும் மருட்கை எனவும் தமிழ் நூலார் வகுத்துக் கூறிய அற்புத ரசத்தினைச் சார்ந்து வருவது. ஒரு பாற்கிளவி கண்ணும் வருவகை தானே வழக்கென மொழி என ஆசிரியர் தொல்காப்பியனாரும் 'ஒருமொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே' எனப் பிற்காலத்தாரும் கூறிய விதி சொல்லிலக்கணத்திற்குப் போலவே பொருளிலக்கணத்திற்கும் பொருந்துவது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலாநந்தர், இன்றையத் தொடர்பியல் அடிப்படைகளைத் தொட்டுக் காட்டுவது போல, அன்றே இலக்கியத்தில் தொடர்பியல் பயன்படுத்தப்படுவதைத் தொட்டுக் காட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, அவர் கூறுகிறார்:

> 'நல்லிசைப் புலவர் யாத்தமைத்த கல்வியிலே ஈடுபட்டு நெஞ்சமுருகி இன்புறுவோன் அக்கவிதையின் பால் அன்பு செலுத்துகிறான். கவிதையை யாத்த புலவன் படிப்போருக்கு இன்பம் பயப்பது கருதியே யாத்தான். ஆதலின் படிப்போருக்கும் படிக்கப்படும் கவிதைக்கும் இடையே அமைந்த தொடர்பு பெருந்திணையன்று, கைக்கிளைத் திணையாம் என்பது வெளிப்படை - இயற்கைக்கும் புலவனுக்கும் இடையிலான தொடர்பு கைக்கிளைத் திணையின்பாற்படுவதென அறிகிறோம். இவ்வாறு பொது வாய் நிறம் இன்பம் பற்றிய அன்பினை நூன் முறையாக வகுத்துக் கூறப்புகுந்த ஆசிரியர் மிக்கதிறன்மேல் வைத்துக் கூறினார் எனினும், 'குழவி மருங்கினும் கிழவ தாகும்', ஊரோடுதோற்றமும் உரித்தென மொழிப எனக் கைக்கிளைப் புறனாகிய பாடாண் பகுதியினுள்ளே பிறவற்றிற்கும் ஏற்றுக் கூறினார்'

சுவாமி விபுலாநந்தர் அவர்கள் விஞ்ஞான, கணிதத் துறைகளிலும் ஒரு மேதை. அன்னாரின் அறிவியல் அறிவும் அழகியல் அறிவும் இணைந்தது காரணமாக, காரணகாரியத் தொடர்புடைய திறனாய்வுப் பாங்கு இயல்பாய் வந்தமைகிறது.

நாம் இப்பொழுது ஆராயும், 'ஐயமும் அழகும்' என்ற கட்டுரை யிலேயே வெளிப்படும் ஏனைய கருத்துகளையும் நாம் நோக்குவோம்.

ஐம்புலன் உணர்வினைக் கூறும் பொருளியல் நூல்களுக்குக் காட்சி, கருவியாகும். அதாவது, 'சயன்ஸ்' (Science) எனப்படும் விஞ்ஞானம்.

'நோக்கிய கண் இமையாமல் நோக்கி நோக்கி' இன்புறுதற்குரிய ஓவிய நூலால், வட்டிகைச் செய்தி என்றித் தொடக்கத்தவாகிய அழகு நூல்களுக்கு ஐயம் கருவியாகும். அதாவது, 'பைன் ஆட்ஸ்' (Fine Arts) எனப்படும் நுண் கலைகள்.

'துணிவு தத்துவ ஞானம்' என வட நூலார் கூறும் மெய்யுணர்வு நூல்களுக்கும் ஐயம் கருவியானது, அதாவது ஃபிலோசஃபி (Philosophy).

ஐயத்தின் வழி அழகு பிறப்பதென உணர்த்துவதற்கு ஆன்றோர் செய்தளித்த அழகிய செய்யுட்களை அடிகளார் பின்னர் எடுத்துக்காட்டி விளக்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரையின் ஈற்றிலே செய்யுள் அணிகள் ஆன்றோர் செய்யுள் களில் இணைந்து நிற்பதை எடுத்துக்காட்டி, 'ஈன்று உரைப்பிற்பெரும்', என முடிப்பதில் இருந்து திறனாய்வின் முக்கிய பண்புகளில் ஒன்றாகிய சுருங்கக் கூறி விளங்க வைக்கும் பண்பிற்கு முக்கியத்துவம் அளிக்கிறார்.

'செய்யுட்களில் தன்மை உவமை, உருவகம், தீவகம், பின்வருநிலை, வேற்றுப் பொருள் வைப்பு, ஒற்று, அதிசயம், தற்குறிப்பேற்றம், நிரநிரை, ஆர்வமொழி, சுவை ஒப்புவமைக் கூட்டம்' என்னும் செய்யுள் அணிகள் இயைந்து நிற்பதை விபுலாநந்தர் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாறு பகுப்பாய்வு செய்ததன் மூலம், உருவம், உள்ளடக்கம் ஆகியன ஒன்றோடு ஒன்று இயைந்து இருப்பதைத் திறனாய்வாளர் சொல்லாமல் சொல்லுகிறார் எனலாம்.

பேராசிரியர் விபுலாநந்த அடிகள் வெறுமனே இலக்கியத் திறனாய் வாளர் மட்டுமல்ல. அவர் ஒரு கலை விமர்சகரும் கூட. இதனை, அரை நூற்றாண்டிற்கு முன் எழுதப்பட்ட அவருடைய கட்டுரை ஒன்றிலிருந்து நாம் அறியமுடியும். 'செந்தமிழ்' தொகுதி 38 இல் அடிகள் எழுதிய 'வண்ணமும் வடிவும்' கட்டுரை இதைக் காட்டும்.

'மிகப்பழைய காலத்தில் சிற்பங்களை வடிப்பவர்கள் 'மண்ணீட்டாளர்' எனப்பட்டனர். இவர்களை ஓவியர் என்பதும் இதற்குரிய நூலினை ஓவியச் செந்நூல் என்பதும் பழைய வழக்கு' என்கிறார் அடிகளார். அவ்வோவியங்களை அமைப்போர், நுண் உணர்வும் நுழைந்த நோக்கும் உடையராதல் வேண்டும் என்பதை 'மதுரைக்காஞ்சி'ச் செய்யுள் ஒன்றிலிருந்து எடுத்துக் காட்டுகிறார். அந்தச் செய்யுள் அடிகள் வருமாறு:

'எவ்வகைய செய்தியும் உவமங்காட்டி நுண்ணிதின் உணர்ந்த வளைந்து நோக்கிற் கண்ணுள் வினைஞர்.'

இந்தக் கண்ணுள் வினைஞர் யாவர்? அடிகளார் கூறுகிறார்:

> 'வெண்சிதையில் தீட்டிய உருவத்தினது இயற்கை வண்ணம் வெளிப் படுமாறு வர்ணம் தீட்டுவோரும், வட்டிகை பலகையிலேயே துகிலினைக் கோலினாலே பலவித வர்ணங்களை எழுதி அழகிய சித்திரங்களை அமைப்போரும் கண்ணுள் வினைஞர் எனப்பட்டனர்..... கண்ணுள் வினைஞர் - சித்திரகாகிதள்' என அடியாருக்கு நல்லார் உரை கூறும்.
>
> 'துவர வட்டிகை மணிப்பலகை வண்ணநுண்டு சிலிகை என்னும் சித்தாமணிச் செய்யுள் அடியினுள்ளே கண்ணுள் வினைஞருக்கு வேண்டிய கருவி மூன்றும் கூறப்பட்டன'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வட்டிகை என அடியாருக்கு நல்லார் கூறுதலின், இக்காலத்து மேனாட்டுச் சித்திரக்காரர்கள் வழங்கும், 'பலேட்' (Pallate) என்னும் பலகையினை ஒத்த வட்டிகைப் பலகைகளே பண்டை நாளிலும் இருந்தன என எண்ண இடமுண்டு'.

ஓவியக் கலைத் திறனாய்வு தொடர்பாக முதலில் ஓவியம் பற்றிய சில செய்திகளைத் தருகிறார். அவற்றைப் பழந்தமிழ் இலக்கியத்தில் இருந்து எடுத்துக்காட்டுவது, அடிகளார் நமது பழைய பண்பாட்டில் ஊறித் திளைத்திருந்தமையும் அப்பண்பாடு நவீனத்துவத்திற்கு ஆதாரமாக இருப்பதையும் உணர்த்தி, அவர் ஒரு நல்ல திறனாய்வாளர் என்பதையும் வெளிப்படுத்துவதனால், அவரை, நமது முன்னோடித் திறனாய்வாளர் வரிசையில் முதன்மை இடம் வகிக்கச் செய்கிறது.

கீழைத்தேய ஓவிய மரபு பற்றி ஓரிரு வாக்கியங்களில் பொருத்தம் குறித்து உதாரணங்களுடன் காட்டிய பின்பு, திறனாய்வாளர் விபுலாநந்தர், திறனாய்வாளர் நுட்பமாக ஆராய வேண்டிய விஷயம் ஒன்றையும் கோடிட்டுக் காட்டுகிறார். அவர் கூற்று வருமாறு: 'மண்ணீட்டாளர் கண்ணுள் வினைஞர் ஆகிய இருபாலாரையும் ஓவியர் என்பதும், வண்ணம் வடிவம் என நுணுகி வேறுபடுத்தாது அனைத்தினையும் ஓவியம் என்பதும் ஒரு கலை.'

இந்த ஒரு தலைப் பாங்கை விரும்பத்தகாத அம்சமாகச் சொல்லாமல் சொல்லி அடிகளார் ஓவியத்தை எவ்வாறு அளவிட வேண்டும் என்ற வரைவிலக்கணம் ஒன்றையும் தொட்டுக் காட்டுகிறார்.

'ஓவியனானவன் படத்தில் வர்ணம் தீட்டியோ, சுவர் மீது சிதையினால் புனைந்தோ, வெண் சலவைக் கல்லைச் செதுக்கியோ, கருங்கல்லைப் பொளிந்தோ வெளிப்படுத்திய உருவத்தை அறிவுடையோன் நோக்கும் போது, ஓவியனது கை வண்மையை வியப்பதோடு அமையாது, 'ஓவியன் உள்ளத்து உள்ளியது' இதுவெனக்கண்டு வியத்தல் வேண்டும். ஓவியனது உள்ளக் கருத்தே ஓவியத்திற்கு உயிர் போன்றது.

'நவில் தொறும் இனிமை பயக்கும் நூல் நயம் போலவும், பயிலும் தோறும் இனிமை பயக்கும் பண்புடையினர் தொடர்பு போலவும், பார்க்கும் தோறும் அறிவுடையோனுக்கு உவகை அளிக்கும் ஓவியமே அழகிய ஓவியமாகும்.'

இவ்வாறு அழகாகத் தமிழைக் கையாண்டு, திறனாய்வுக் கோட்பாடுகளை விளக்கிய முதல்வர் அடிகளார் என்பதில் எந்தவித ஐயமும் வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வண்ணமும் வடிவமும்' என்ற கட்டுரையிலே தொடர்ந்து வரும் செய்முறைத் திறனாய்வு விளக்கத்தைப் படிக்கும் பொழுது திறனாய்வாளர் விபுலாநந்தரின் திறனை வியக்காமல் இருக்க முடியவில்லை. இதோ அடிகளாரின் சம்மந்தப்பட்ட பகுதிகள்.

'பஞ்சரத்தில் உள்ள கிளிப்பிள்ளை பொன் வட்டிலிற் பாலடிசில் உண்ணுவதை இவ்வோவியம் காட்டுகின்றது' என்று ஓர் ஓவிய விமர்சகர் கூறினால், அது போதுமான விளக்கம் இல்லை என்கிறார் அடிகளார், அவர் கூறுகிறார்:

> 'காட்சி மாத்திரத்திலே அளந்து தீர்ப்பதற்குரிய ஓவியம் அறிஞருக்கு உவகை பயப்பதில்லை. இப்பொழிலகத்தே நிற்கும் மாமரத்தின் கனியினை இக்கிளிப்பிள்ளை உண்ணுகின்றது. எனக்குரிய ஓவியமும் முன்னையதைப் போல்வதே. ஆனால், ஓர் ஓவியன் இவ்விரண்டினை யும் ஒரு படத்திலே சித்திரித்துத் தருகிறான் என வைத்துக்கொள்வோம். பொழில் நடுவில் அழகிய மாளிகை. மாளிகை மேல் மாடத்தில் ஒரு மடவரல் பஞ்சரத்துக் கிளிக்குப் பாலடிசில் ஊட்டுகின்றாள். பக்கத்தில் உள்ள மாமரக் கிளையில் இருக்கும் கிளி தன்னிச்சையாக மாங் கனியினை உண்கின்றது.' இப்படத்தினைப் பார்த்தவுடனே நமது சிந்தையிலே பல்வேறு எண்ணங்கள் உதிக்கின்றன. இப்படம் சுதந்திர வாழ்க்கையையும் அடிமை வாழ்க்கையையும் குறிப்பிடுகின்றதா அன்றேல், மனை வாழ்க்கையையும் பட்டிக்காட்டு வாழ்க்கையையும் காட்டுகின்றதா என இவ்வாறு எல்லாம் சிந்திக்கின்றோம்.

'கண்ணினைக் கவர்ந்த படம் மனத்தினையும் கவர்ந்து விட்டது' எனக் கூறிச் செல்லும் விபுலாநந்த அடிகளை வெறுமனே 'அழகியல் ரசிக விமர்சகர்' என்று அறியாதவர் கூறுவதை மேலும் நாம் அனுமதிக்கலாமா?

இன்னும் ஒன்று, இக்காலத் திறனாய்வாளர் பெரும்பாலும் எடுத்துக் கொண்ட பொருளைக் கோட்டை விட்டுவிட்டு, அங்கங்கெல்லாம் சென்று தமது போலித் தன்மையான 'ஆழ'த்தைப் பறைசாற்றுவர். ஆனால் விபுலாநந்த அடிகளோ மிகவும் இறுக்கமாகத் திறனாய்வு செய்வார். உதாரணமாக, இந்தக் கூற்றைக் கவனிப்போம்.

> 'செவியின்பம், நாவின்பம், மூக்கின்பம், ஊற்றின்பமாகிய நான்கும் எடுத்துக்கொண்ட ஆராய்ச்சிக்குப் புறம்பானவை ஆதலின், அவை தம்மை ஒழித்து வண்ணமும் வடிவமும் காட்டும் செய்யுளானது வல்லான் வகுத்த ஓவியம் போன்று அகக்கண்ணுக்கு உவகை அளிக்கும் மாண்பினை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று எழுதிச் செல்லும் அடிகளார் தேவைக்கேற்ற அளவுகோல்களை மாத்திரம் வலியுறுத்துவதை நாம் காண்கிறோம்.

அடுத்ததாக, நிலவும் பொழிலும் என்ற கட்டுரையை எடுத்துக் கொள்வோம். அங்கு, விபுலாநந்த அடிகளார் இவ்வாறு கூறுகிறார்:

'இன்பப் பொருள் அனைத்தும் அழகினோடு இயைந்து நிற்பன. அழகினை அளத்தற்கு மனிதர் கொள்ளும் அளவு கோல் இரண்டு உள. 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்துற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள' என்று அமையின் மகளிர் பாற்பெறும் இன்பவிழைவின் வயப்பட்டோருக்கு 'பனி மலர்க்குழற் பாவை நல்லாரே' எல்லா அழகிற்கும் அவ்வலகின் வழியெய்தும் எல்லா இன்பங்களுக்கும் நனி சிறந்த எடுத்துக்காட்டுவர் என்பது வெளிப்படை.

'கவிஞன் கண்ணாடி போன்று பிற நிகழ்ச்சியைத் தன்னிகழ்ச்சியாகக் காட்டும் ஆற்றல் வாய்ந்தவன். ஆதலின், மேற்கூறிய அறிவுகோல் இரண்டினாலும் அழகினை அளத்தல் அவர்க்கு இயல்பாகும்'

சுவாமி விபுலாநந்தர் ஆங்கில இலக்கியத்தில் நன்கு பரிச்சயம் பெற்றவர் என்பது அவருடைய கட்டுரைகளைப் படிக்கும் பொழுது நமக்குத் தெரியவருகிறது. குறிப்பாக, ரொமான்டிக் பொயெட்ஸ் (Romantic Poets) எனப்படும் மனோரதியக் கவிஞர்களின் கவிதா அனுபத்தைப் பெரிதும் சுவைத்தவர். வேட்ஸ்வேர்த், ஷெலி, கீட்ஸ், ப்ளேக், கோலரிட்ஜ் போன்ற மனோரதிய இயற்கைக் கவிஞர்களைத் திறனாய்வு நோக்கில் சுவைத்தவர்.

ஜோன் கீட்ஸ் என்ற கவிஞரின் ஆக்கங்களிலிருந்து சில வரிகளை அழகு தமிழில் தந்து 'கவியும் சால்பும்' என்ற கட்டுரையில் எழுதி இருக்கிறார். இக்கட்டுரை 1941 ஆம் ஆண்டு, 'செந்தமிழ்' தொகுதி 38 இல் வெளியாகியது. அக்கட்டுரையை விபுலாநந்த அடிகள் இவ்வாறு ஆரம்பிக்கிறார்:

திருமலி யழகுடைச் செழும்பொருள்தானே உவகை நீர்மையது அங்கவ்வுவகை, பன்னாட் கழியினும் கழியா வியற்பிற்றண்டா வின்பந் தந்துநிற்பதுவே என ஆங்கில மொழிப் புலவராகிய கீற்ஸ் என்பவர் தாம் இயற்றிய, எந்திமியோன், என்னும் பெருங்காப்பியத்திற்குத் தோற்றுவாய் கூறினார்.

இவ்வாறு கூறும் திறனாய்வாளர் விபுலாநந்த அடிகள், கீட்ஸின் A thing of beauty is a for ever என்று ஆரம்பிக்கும் கவிதை மொழித் தொடரை இவ்வாறு தமிழிற் தருகிறார்: 'அழகுடைய பொருள் என்றும் உவகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது அழியாவின்பத்தில் நீர்மையது. ஆதலின், அதுவே புலவராற் பாடுதற்கமைந்தது.' இது கீற்ஸ் நிறுவிய முடிவு என்கிறார் விபுலாநந்தர்.

கீற்ஸின் மற்றொரு சிந்தனையான "Beauty is truth. truth Beauty – that's all ye know on earth and all ye need to know" என்பதை இவ்வாறு தமிழில் தருகிறார் அடிகளார்: 'அழகே உண்மை, உண்மை அழகென உலகினில் அறிந்தோர் அறிவுபிறவேண்டார்.'

இதை விளக்கும் விமர்சகர், 'ஆண்ட அழகிற்கு உண்மை ஒப்புடைப் பொருளாகக் கூறப்பட்டது' என்கிறார்.

அது மட்டுமல்லாமல், இந்தியத் தத்தவ ஞானத்தின் சில கூறுகளுடன் எவ்வாறு மேலைத்தேய இலட்சியச் சிந்தனைகள் இணைகின்றன என்பதையும் தொட்டுக் காட்டுகிறார். அவற்றை நாம் மீள அவதானித்தல் பொருத்தமுடையது:

> 'அறிவு, இச்சை, செயல் (ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி) எனும் மன நீர்மை மூன்றினுள் அறிவு உண்மைப் பாலது இச்சை அழகின் பாலது செயல் செம்மைப்பாலது உண்மை, அழகு, செம்மை என்பது முறையே அறிவு, இச்சை, செயலுக்கு எல்லையாகவும் நிலைக்களமாகவும் அமைந்தன.'
>
> 'மன நீர்மை மூன்றாயினும் மனம் ஒன்றே ஆதலினாலே உண்மை, அழகு, செம்மை என்பன தம்முள்ளே ஒப்புடையவாயின. அழகே உண்மை, உண்மையே அழகு, அழகே செம்மை, செம்மையே அழகு, உண்மையே செம்மை, செம்மையே உண்மை.'
>
> 'செம்மை, உண்மை, அழகென்னும் இவற்றை வட நூலார் சிவம், சத்தியம், சுந்தரம், என்பார்.' ஆங்கில நூலார், Goodness, Truth, Beauty என்பர்.

இவ்வாறு அழகாக ஒப்பீடு செய்யும் அடிகளாரின் விளக்கவுரை, மேலும் இலக்கியத் திறனாய்வு நயச் செறிவைத் தருகிறது. அதனையும் பார்ப்போம்.

> 'நெஞ்சத்து நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற் கல்வியழகே அழகு என்புழி'. 'நெஞ்சத்து நல்லம்' எனச் செம்மையும் 'கல்வியழகு' என அறிவும் அழகின் வேறின்மையாதற் கூறப்பட்டது. 'உருவின் மிக்கதோர் உடப்பினைப் பெற்றோரும் கல்வியறிவில்லாதவழி அறிவுடையோரால் அழகிலரெனக் கருதப்படுவராதலின் கல்வியழகேயழகு' என்னுமிடத்து வந்த ஏகாரம் பிரிநிலையும் தோற்றமுமாயிற்று.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அழகும் உண்மையும் கவிப்பொருளாயினவாறு போலச் செம்மை வயத்ததாகிய சால்பும் கவிப் பொருளாயிற்று. காப்பியத் தலைவனிடங் காணப்படும் இயல்பே காப்பியக் கவிகள் விளித்துக் கூறும் பெரும் பொருள்.'

'வாழ்க்கையிலே சால்பு வாய்ந்தோனாகிய கவிஞன் ஒருவன் சால்பினைக் கவிப்பொருளாகக் கொண்டு செய்யுள் செய்வானாயின், அச்செய்யுள் இனிமையும் மாண்பும் உறுதியுந் தந்து மிளிருமென்பது அறிஞராயினருக்கு உடம்பாடேயாம்'.

குறிப்பிட்ட 'கல்வியும் சால்பும்' என்ற இக்கட்டுரையின் நோக்கத்தை ஒரு திறனாய்வாளனுக்கே உரிய திட்டவட்டமான முனைப்புடன் விபுலாநந்தர் எடுத்துக் கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது.

வெள்ளக்கால் கிழார் இயற்றிய தனிச் செய்யுள்கள் பற்றிக் குறிப்பிடும் விபுலாநந்தர் இவ்வாறு கூறுகின்றார்:

'வெள்ளக்கால் கிழார் இயற்றிய தனிச் செய்யுளகத்துக் காணப்படும் கவியழகுகள் பல துறைய.... அவையனைத்தையும் ஆராய்ந்து கூறப்புகின் உரை பெருகுமாதலின், மக்களைத் தேவராக்கும் நீர்மயராகிய 'சால்பு' என்னும் பெரும் பொருளினைக் குறித்து, வாழ்க்கையிலே சால்பு வாய்ந்த இப்பெரும் கவி கூறிய பல கவிதைகளிலே ஒரு சிலவற்றை ஆராய்ந்து அவை தம்முட் பொதிந்த அழகினை எடுத்துக் காட்டுதலே 'கவியும் சால்பும்' என்னும் பொருளுரையின் நோக்க மாகும்.'

மேற்கண்டவாறு கூறிவிட்டு, பொருளுரையைத் திறனாய்வாகவே விபுலாநந்தர் எழுதியிருப்பதைப் படிப்பவர்கள் உணரத்தவறார்.

'இலக்கியத் திறனாய்வு' என்ற வகுதிக்குள் இலக்கியக் கட்டுரை களையும் அடக்கலாம். அத்தகைய இலக்கியக் கட்டுரைகளில் ஒன்று 'யாழ் நூல்' பற்றி அவர் எழுதியதாகும். அக்கட்டுரையில் யாழ் உறுப்பியல் என்ற தலைப்பிலே வில், யாழ், பேரியாழ், சுவைக்கடை ஆகியன பற்றி வரைபடங்களுடன் தகவல்களை அவர் இலக்கிய நயம் செறிந்த கட்டுரை யாகத் தருது திறனறிந்து சுவைக்கும் வாசகர்களுக்குப் பரம திருப்தி அளிக்கும்.

இதே போன்றே 'இயலிசை நாடகம்' என்ற கட்டுரையையும் குறிப்பிட வேண்டும்.

'வசன நடை கைவந்த வல்லாளன்' என்று ஆறுமுக நாவலரைப் போற்றுவதில் தவறில்லை. ஆனால், விபுலாநந்தரின் தமிழ் நடையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியாக்கத் திறனையும் வியந்து பாராட்டாமல் இருக்க முடியவில்லை. பிற்காலத்தில் ரா.பி. சேதுப்பிள்ளை, அறிஞர் அண்ணா போன்றவர்கள் தமிழைக் கையாளும் ஆற்றலைப் பெறுவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் விபுலாநந்த அடிகள் என்றால் அது மிகையாகாது.

தமிழரும் யூதரும் ஆபிரிக்கரும் இன்று உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பவர்கள். தமிழுக்கென்று தனி நாடு ஒன்று இல்லாவிட்டாலும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உலக நோக்குக்கிணங்க ஆறுகோடிக்கும் அதிகமான தமிழர் இன்று உலகெங்கிலும் பரவிக் காணப்படுகின்றனர். சுவாமி விபுலாநந்தரின் ஒரு கூற்று இந்த இடத்திலே பொருத்தமானது. அவர் கூறுகிறார்: 'உலக சரித்திரமே தமிழ்க் குலத்தாரோடு தொடங்கு கின்றது என்பதும், இன்றைக்கு ஒன்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பூவலயத்தின் நடுப்பாகம் முழுவதிலும் தமிழ்க் குலத்தார் சீரும் சிறப்பும் உற்று வாழ்ந்தார்கள்' என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுவாமி விபுலாநந்தர் 'ஆங்கில வாணி' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை முதற் தடவையாக ஆங்கில இலக்கியச் செல்வங்களைத் தமிழ் இலக்கியத்திற் பழகிய அனைவரும் எளிதிற் புரிந்து கொள்ளும் விதத்தில் எழுதப்பட்டமையும் நமது திறனாய்வு நோக்கிற்கு உட்பட்டதே.

தமிழ் நாட்டுப் பண்புகள் சிலவும் ஸ்கொட்லாந்து நாட்டுப் பண்புகள் சிலவும் ஒத்திருப்பன. ஸ்கொட்லாந்து மக்கள் ஆங்கிலம் பேசும் முறையும் இலங்கைத் தமிழர் ஆங்கிலம் பேசும் முறையும் ஒத்திருப்பதை நாம் குறிப்பிடலாம். ஐ. டி. என் தொலைக்காட்சியில் இடம்பெற்ற ஸ்கொட்லாந்து தொலைப்படத்தின் சில காட்சிகளில் பாத்திரங்கள் பேசும் முறை யாழ்ப் பாணத்துத் தமிழர் ஆங்கிலம் பேசும் முறையைத் தழுவியதாக இருந்ததை நாம் அவதானித்தோம். ஸ்கொட்லாந்தில் பிறந்த புகழ் பெற்ற எழுத்தாளர் சேர் வோல்டர் ஸ்கொட். அவரைப் பற்றி விபுலாநந்தர் இவ்வாறு மதிப்பீடு செய்கின்றார்:

> 'வோல்டர் ஸ்கொட் எத்தனையோ சிறந்த வசனக் காவியங்களைச் செய்திருக்கின்றார். இவர் ஆற்றிய செய்யுள் வடிவ நூல்கள் அத்துணை உயர்வுடையவல்லவாகினும் கதை பொதிந்த பனுவல்களாதலின் இளைஞர்களுக்கு உவகை பயப்பன. இவர் ஸ்கொட்லாந்தில் பிறந்தவர். தேசாபிமானம் நிறைந்தவர். பழைய காலத்திலே நமது நாட்டிலே வாழ்ந்த குறுநில மன்னரது வீரச் செயல்களையும் அவர்களது மன்றங் களிலே யாழிசைத்த பாணர் திறத்தினையும் சிறப்புறக் கூறுவார்...... இவரது பாடல்களைப் படிக்கும் பொழுது பழந்தமிழ் நாட்டின் நினைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலே இயல்பாக எழும். பன்னுயிர் காக்கத் தம்முயிரை ஈயும் மறவச் செயலும், அடுகளத்திலே தம் மைந்தர் பொருது வீழ்ந்த செய்தி கேட்டு உவகைக் கண்ணீர் புகுந்த வீரத் தாயார் செயலும் ஆண்மை சான்ற ஆடவரும் அழகு வாய்ந்த அரிவையரும் கேட்டு உளமுருகுமாறு வீரஞ்செறிந்த பாடல்களை யாழ் இசையோடு பாடும் பாணர் செயலும் பழந்தமிழ் நாட்டுக்கு உரியனவன்றோ? இத்தகைய செயல்கள் வோல்டர் ஸ்கொட் என்னும் கவிஞரது நாட்டுக்கும் உரியன.'

வரலாற்று மனோரதிய நாவல்களை, அதாவது, 'ஹிஸ்ரோறிக்கல் ரொமான்ஸஸ்' (Historical Romances) தமிழில் எழுதிப் புகழ்பெற்ற 'கல்கி' கிருஷ்ணமூர்த்தியைத் தமிழ் நாட்டு சேர் வோல்டர் ஸ்கொட் என்றும் கூறுவர். 'கல்கி' ஸ்கொட்டினால் கவரப்பட்டவர் என்பது வெளிப்படை.

திறனாய்வாளர் விபுலாநந்தர் வேட்ஸ்வேர்த் என்ற கவிஞனின் ஆக்கம் ஒன்றையும் தமிழிற் தந்து திறனாய்வு ரீதியில் அறிமுகப்படுத்துவதும் பாராட்டத்தக்கது. 'ரொமான்டிக்' கவிஞர்கள் எனப்படும் வேட்ஸ் வேர்த், ஷெலி, கீற்ஸ், பைரன் ஆகியோர் பற்றியும் தொட்டுப் பார்க்கும் அடிகளார் கீற்ஸ் மறைவின் நூற்றாண்டு விழாவிற்குத் தாம் அனுப்பிய கவிதை ஒன்றையும் இக்கட்டுரையில் சேர்த்துள்ளார்.

மற்றும் ரெனிசன், ஹோமர், பிரவுனிங், ஜோர்ஜ் பேர்னாட் ஷோ போன்றவர்களையும் அடிகளார் அறிமுகஞ் செய்கிறார்.

விபுலாநந்த அடிகளார் எழுதிய மற்றொரு பயனுள்ள நீண்ட திறனாய்வுக் கட்டுரை 1922 ஆம் 23 ஆம் 24 ஆம் ஆண்டுகளில் 'செந்தமிழ்' ஏட்டில் வெளியாகியது. 'மேற்றிசைச் செல்வம்' என்னும் தலைப்பிலே வரலாற்றுச் செய்திகளை அழகு தமிழில் தருவதோடல்லாமல் ஓர் ஆய்வறிவாளனுக்கே உரிய முறையில் கருத்துக்களைத் தர்க்க ரீதியாகவும் தருகிறார். உதாரணமாக இந்தப் பகுதியைப் பார்ப்போம்:

'.......இவ்வாறெல்லாம் மேலைத்தேச சாஸ்திரிகள் ஆராய்ந்து கண்டிருக்கிற முடிவுகளை நமது புராணோதிகாச முடிபுகளோடு ஒட்டி யுக்தி கொண்டு ஊசிக்கக் கிடக்கும் சித்தாந்தங்கள் சிலவுள. அவற்றை முடிந்த முடிவுகள் என்று கொள்வதற்குப் போதிய சான்றில்லையாதலால் 'இருத்தல் கூடும்' என்னும் படியிற்கொண்டு ஆராய்வது அறிஞர் கடன்'

என்கிறார். இதுவும் திறனாய்வுப் பண்பு அல்லவா? இன்னோர் இடத்திலே இவ்வாறு கூறுகிறார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹோமர் என்னும் மகாகவி இயற்றிய 'இலியட்', 'ஒடிசி' என்னும் காப்பியங்கள் இரண்டும், யவனபுரத்தாருக்கு நாற்பொருள் பயக்கும் நீர்மையவாகப் பின்நூல் பலவற்றிற்கும் முதன் நூலாக நிலை பெற்றிருந்தன.'

'இக்காவியங்கள் ஒவ்வொன்றும் 24 காதைகளால் அமைந்தன. 30 காதைகளால் அமைந்த மணிமேகலை நூலின் செய்யுள் தொகை 30 அகவற்பாவாலானது போல இவ்விரு காப்பியங்களும் 24 வீர பாக்களால் முடிந்தன. வீரப்பா பலவாய அடிகளால் நீண்டு நடக்கு நேர்மையது.'

'இதன் யாப்பினை ஆராயுமிடத்து அடியொன்றுக்கு ஆறு சீராய் முதலைந்து சீரும் குருலகு லகு என நிற்க ஈற்றிச் சீர் குருகுரு எனக் காண்போம். ஒரேயொரு சீர் இடையிநால் குரகுருவென நிற்பதுண்டு. வடமொழி யாப்பின் வழிவந்த செய்யுளினங்கள் தமிழில் வந்து நடப்பது போல யவன மொழியின் வழிவந்த வீரப்பாவையும் சொல்லாசிரி யருரைத்த கலிப்பா வகையினுள் அடக்கித் தமிழிலெதுவாம்?'

என்று அவர் எழுதுவதைப் படிக்கும் எவரும் விபுலாநந்த அடிகளின் ஒப்பீடு செய்யும் தன்மையை அவதானிக்கலாம்.

'தமிழ் ஹெரோயிக் பொயேற்றி' என்ற தலைப்பில் பேராசிரியர் க. கைலாசபதி ஆங்கிலத்தில் எழுதிய நூலிலே கிரேக்க, தமிழ் வீரயுகப் பாடல்களை ஒப்பீடு செய்தார். கைலாசபதி அவர்களுக்குக் கலாநிதிப் பட்டம் இந்த ஆராய்ச்சி மூலம் கிடைத்தது. கைலாசபதி அவர்கள் நவீனத்துவ நோக்கில் திறனாய்வுத்துறையை வளர்த்துச் செல்ல முன்னோடியாக நின்றவர் விபுலாநந்த அடிகளே.

அடுத்து வரும் மேற்கோள் இதனை ஓரளவு நிரூபிக்கும். விபுலாநந்தர் கூறுகிறார்:

'ஹோமருடைய காலம் கலி 2057 என ஒரு சாராரும் கலி 2050 என மற்றொரு சாராரும் கூறுவர். கலி 2300 வரையில் இருந்த ஹெஸியோட் என்னும் பெரும் பலவர், 'நாளும் வினையும்' என்ற பெயரில் நூலொன்று செய்தளித்தார்.

'இந்நூல் நமது மொழியில் உள்ள பதினெண் கீழ்க்கணக்கினை யொத்த நடையினது. ஹோமர் இயற்றிய தனிப்பாசுரங்களும் பலவுள. இவையாவும் வீரச் சுவையும் இன்பச் சுவையும் செறிந்தன.'

இன்னோர் இடத்திலும் திறனாய்வாளனுக்குரிய ஒப்பியல் நோக்குத் தன்மையைக் காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தமிழ் நூலில் தலை சிறந்து விளங்கும் புறநானூறு என்னும் நூலானது வடிவேலேந்தி அடுகளத்துப்பொருத சுத்த வீரர்களால் பாடப்பட்ட வஞ்சினக்காஞ்சி போன்ற செய்யுட்களைத் தன்னகத்துக் கொண்டமை யானன்றோ நாம் அதனைப் பொன்னே போற்போற்றுகிறோம். யவனபுரத்தப் பூர்வ நூல்களும் இத்தகையனவே. ஆதலினாலன்றோ அவை இன்றும் நிலை பெற்று இன்று தேவருலகத்தில் அமுதம் போலப் படிப்போருக்கு உற்சாகத்தையும் தீவிரத்தையும் தருகின்றன.'

ஒரு திறனாய்வாளனுக்கு இருக்க வேண்டிய கட்டுக்கோப்பான நெறி முறையை அடிகளார் நினைவுறுத்துவார். 'எடுத்துக்கொண்ட விஷயத்தோடு தொடர்புடைய பொருளை மாத்திரம் பேசலாம் என்று எண்ணுகிறேன்' என அவர் 'சோழமண்டலத் தமிழும் ஈழ மண்டலத் தமிழும்' என்ற ஒப்பாய்வுக் கட்டுரையில் குறிப்பிடுதை நாம் அவதானிக்கலாம்.

விபுலாநந்த அடிகளின் மாணவரே பேராசிரியர் கணபதிப்பிள்ளை. பின்னவரின் 'நானாடகம்' என்ற தொகுதியைப் படித்துச் சுவைத்த அடிகளார் 'மட்டக்களப்பு வழக்கு மொழியினையும் ஓரிரண்டு நாடகங் களிலே படம்பிடித்தும் வைப்பது நன்று' என ஆலோசனை கூறினார். திறனாய்வாளர் என்ற வகையில் மறைந்த சுவாமி விபுலாநந்தர் அவர்கள் எவ்வாறு செயற்பட்டார் எனக்காட்டும் முகமாக சில விபரங்களை இக்கட்டுரையில் தொகுத்துத் தந்தோம்.

(இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 26.07.91 ஏற்பாடு செய்த சுவாமி விபுலாநந்த அடிகள் நூற்றாண்டு விழா நினைவுரையாக வாசிக்கப்பட்ட கட்டுரையிது. பின்னர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட பண்பாடு மலர் இதழ் 2 - 1991 ஒகஸ்ட் இதழில் பிரசுரமானது. கனடா வெளியீடான 'விபுலம்' ஏட்டிலும் இது மறுபிரசுரம் செய்யப்பட்டது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு

ஆய்வறிவாளர் கைலாசபதியும் நூல் ஆசிரியரும்

மறைந்த பேராசிரியர் கைலாசபதி அவர்கள் பற்பல துறைகளில் ஈடுபட்டுப் பெரும் பணி செய்துள்ளார் என்பது நாம் அறிந்ததே. ஓர் எழுத்தாளனாக, ஒரு பத்திரிகை ஆசிரியனாக, ஒரு கல்விமானாக, ஒரு திறனாய்வாளனாக, ஓர் ஆய்வறிவாளனாக அவர் ஆற்றிய பணிகள் நமது நாட்டிற்கும், தமிழியலுக்கும், மனுக்குலத்திற்கும் பயனளித்து உள்ளன. வெகுஜனத் தொடர்புச் சாதனங்களை அவர் பயன்படுத்திய முறையும் பாராட்டத்தக்கது. நல்ல பேச்சாளனாக, ஒலிப்பரப்பாளனாக, போதனாசிரியனாக விளங்கிய அவரிடத்து ஒரு காந்த சக்தி காணப்பட்டது. 'செய்வன திருந்தச் செய்' என்பதில் அசையாத நம்பிக்கையுடையவர் கைலாஸ். அவரை அணுகியவர் எவரையும் இதய சுத்தியுடன் ஆதரித்து, குறை நிறைகளைச் சுட்டிக்காட்டி, அன்பு செலுத்தி, ஆதரவான முறையில் வழிநடத்தி வந்துள்ளார். அவ்விதம் பயனடைந்த பலரில் நானும் ஒருவன்.

1954 இல் அவரை முதன் முதலில் இலங்கை வானொலிக் கலையகம் ஒன்றிலே கண்டேன். பழக்கம் ஏற்படவில்லை. வெள்ளவத்தை 40 ஆம் ஒழுங்கையில் எனது பெற்றோருடன் வசித்த வேளை, அவர் 42 ஆம் ஒழுங்கையில் தமது மாமனார் குடும்பத்துடன் வசித்து வந்தார். அப்பொழுதும் தொடர்பு ஏற்படவில்லை.

'தினகரன்' ஆசிரியராக அவர் பதவியேற்ற பின்னரே, நான் அவரிடம் சென்று என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். இந்த அறிமுகம், சுமூகமாக அமையச் சூழ்நிலை உதவிற்று.

அக்காலத்தில் சிறுகதை, புதுக்கவிதை, திரைப்படப் பாட்டுக்கள் போன்றவற்றில் நான் விருப்பம் கொண்டிருந்தேன். இருந்தபோதிலும், ஆங்கிலத்திலே கலை இலக்கிய விமர்சகனாக நூல்களைப் படித்தும் வந்தேன். எனது 'நெகட்டிவ்' (Negative) இயல்புகளைப் 'பொசிட்டிவ்' (Positive) ஆக்கும் எண்ணத்துடன் அவர் கூறினார். ''நீர் ஒன்றில் ஆக்க இலக்கியகாரனாக இருக்க வேண்டும். அல்லது விமர்சகர்கனாக வளர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஆக்க இலக்கியம் படைக்கப் பலர் நம்மிடையே இருக்கிறார்கள். உமது உலக இலக்கிய அறிவு, தமிழுக்குச் செழுமையூட்ட வேண்டுமாயின், நீர் நமது தமிழ் இலக்கியங்களைப் படித்து விமர்சனங்கள் எழுதினால் என்ன? அது உமக்கும் நல்லது, ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கும் உதவினாலும் உதவும்'' என்றார். நான் ஆச்சரியப்பட்டேன். விமர்சகனாக நானும் மாறலாம் என்ற தைரியத்தையும் உற்சாகத்தையும் வழிகாட்டலையும் தந்த அந்தப் பேராசானுக்கு, நான் பணிவுடையேன்.

அவர், ப்ளக்கனோவின் நூல் ஒன்றைத் தந்து அதனைப் படிக்குமாறு கூறினார். 1959 ஆம் ஆண்டு ஜனவரியில் 'எழுத்து' என்ற விமர்சன ஏடு தமிழ் நாட்டில் முதல் தடவையாகப் பிரசுரமான போது, அதனை எனக்கு அறிமுகப்படுத்தியவரும் கைலாஸே. நம்பினால் நம்புங்கள், சமகாலத் தமிழ் இலக்கியம் பற்றி ஒன்றுமே அறிந்திராத எனக்கு நுழைவாயில் அமைத்துத் தந்தவர் கைலாஸ். பின்னர் பேராசிரியர் சிவத்தம்பி, எம்.எஸ்.எம். இக்பால், சில்லையூர் செல்வராசன், பி. ராமநாதன், கனகரத்தினம் (ஜவாஹர்) இவர்கள் மூலமே புதுமைப்பித்தன் முதல் ஜெயகாந்தன் வரையிலுமான, சிதம்பர ரகுநாதன் முதல் வல்லிக் கண்ணன் வரையிலுமான, விந்தன் முதல் ஜானகிராமன் வரையிலுமான, கு.ப.ரா. முதல் ந. பிச்சமூர்த்தி வரையிலுமான, சிட்டி முதல் க.நா.சு. வரையிலுமான பல தமிழ் நாட்டு இலக்கியக் கர்த்தாக்கள் பற்றியும், விமர்சகர்கள் பற்றியும் அறிய நேர்ந்தது. இது ஐம்பதுகளின் கடைக்கூறில் நிகழ்ந்தது.

'நாவலாசிரியர் வரிசையில் வரதராசனாரின் இடம்', 'நான் விரும்பும் நாவலாசிரியர்' போன்ற தொடர்களில் எழுதும்படி என்னைப் பணித்து, எமது பெரிய எழுத்தாளர்கள் மத்தியில் எனக்கும் இடமளித்து, எனது கட்டுரைகளை வெளியிட்டார். 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்' என்பது போல நானும் ஓரளவு பிரபல்யம் பெறத் தொடங்கினேன். இதற்கிடையில் 'எழுத்து', 'சரஸ்வதி' போன்ற பத்திரிகைகளிலும் எனது கட்டுரைகள் வெளியாயின.

எனது வழிகளில் கலை, இலக்கியங்களை அணுக அவர் தடையாக இருக்கவில்லை. ஆயினும், சமூகவியல் அடிப்படையில் நோக்குவதே பொருத்தமுடையது என்று அடிக்கடி வலியுறுத்தி வந்தார். இதற்கிடையில், கைலாஸ் அவர்களை அறியுமுன் நமது நாட்டு மற்றொரு தலைசிறந்த ஆய்வறிவாளரான பேராசிரியர் கா. சிவத்தம்பியை அறிமுகஞ்செய்து கொண்டேன். அவர் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். நான் படித்து வந்த கொழும்பு அர்ச். ஜோசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரித் தமிழ் மன்றமும் அவருடைய கல்லூரித் தமிழ் மன்றமும் விவாதம் ஒன்றை நடத்திய போது, நானும் பங்கு கொண்டேன். அப்பொழுது தான் 'சிவா' அவர்களுடன் அறிமுகமாகினேன்.

கைலாஸும், சிவாவும் எனது பலவீனங்களை நன்கு அறிந்திருந்தும் உற்சாகமூட்டி விமர்சனத் துறையில் கவனஞ்செலுத்த வழிகாட்டினர்.

கைலாசபதி அவர்களுடன் கலந்தாலோசிக்கத் தொடங்கிய பொழுதுதான், எனது பல குறைபாடுகள் தெரிய வந்தன. முதலில் 'டொக்மட்டிக்' (Dogmatic) ஆக இருக்க வேண்டாம் என்றார். மேலைத்தேய விமர்சனப் பார்வைகள் மாத்திரமே முற்று முழுதாகச் சரியானவை என்று கருத வேண்டாம் என்றார். உயர்ந்த கருத்துக்களையும் எளிமையான, இலகுவான முறையில் தெரிவிக்க வேண்டும் என்றார். பத்தி எழுத்தின் மூலம், பொதுவாக விமர்சகர்களுக்குப் பயனளிக்கும் தொண்டைச் செய்கிறேன் என்று என்னை உற்சாகப்படுத்தினார். எனது பத்திரிகை எழுத்துகள் நூல் வடிவம் பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி வந்தார். எனது முதல் நூல் ஆங்கிலத்திலே வெளிவந்த பொழுது அதற்கு அணிந்துரை வழங்கினார். பட்டப்படிப்பையும், ஆராய்ச்சிகளையும் நான் மேற்கொள்ள வேண்டும் என்று கூறி வந்தார். கலை இலக்கியங்கள் மாத்திரமன்றி, பல துறைகளைப் பற்றியும் ஈடுபாடு கொண்டு அவற்றின் செய்திகளைத் தமிழில் தரவேண்டும் என்றார். அவர் தெரிவித்த ஆலோசனையின் பேரிலேயே, தினகரன் வாரமஞ்சரியிலே 'அறிவியல் வளர்ச்சி' என்ற கட்டுரைத் தொடரை எழுதினேன்.

இந்தக் கட்டுரைகள் 'மூன்று நூற்றாண்டுகளின் முன்னோடிச் சிந்தனைகள்' என்ற பெயரிலே வடக்கு கிழக்கு மாகாணத்தினால் 1999 இல் வெளியிடப்பட்டது.

எனது நூல்கள் ஆங்கிலத்திலே அதிகம் வரவேண்டும் என்றார். நானும் ஓர் ஆங்கில இலக்கியப் பட்டதாரி என்பதை நானே மறந்துவிடும் போதெல்லாம், அதனை நினைவூட்டி, என்னிடமே மேலை இலக்கியங்கள் பற்றிய சில பல தகவல்களைக் கேட்டறிவார். உண்மையிலேயே நமது நாட்டுத் தமிழ் எழுத்தாளர்களிலே (ஆங்கில இலக்கியத்தை ஒரு பாட மாகப் பயின்ற பட்டதாரிகளான ஏ.ஜே.கனகரத்னா, சி.வி. இராஜசுந்தரம், மஹ்ரூப், நிர்மலா நித்தியானந்தன், சுரேஷ் கனகராசா, செ. கனகநாயகம் போன்றவர் உட்பட) பேராசிரியர் கைலாசபதியைப் போன்ற சமகால ஆங்கில விமர்சன நூல்களைப் படித்தவர் எவருமிருந்திரார் என நான் துணிந்து கூறுவேன். அவர் மூலமாகவே நான் சில நூல்களைப் படித்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேற முடிந்தது. உதாரணமாக மார்க்சிய விமர்சகர் கோல்ட்வெல் எழுதிய 'த கிரிட்டிக்கல் இடியம்' (The Critical Idiom) என்ற ஆங்கில.

வானொலியில் செய்தி ஆசிரியனாகவும், ஒலிபரப்பாளனாகவும் நான் பணி புரிந்தவேளை, எனது முயற்சிகளைப் பாராட்டி வாழ்த்தினார்.

ஆங்கில வாசகர்களுக்கும், நேயர்களுக்கும் நமது கலை இலக்கிய முயற்சிகளை அறிமுகப்படுத்திவருவதை மாத்திரம் பலர் பாராட்டுவதுடன் நின்றுவிடும் பொழுது, கைலாஸ் அவர்கள், எனது பணிகளில் ஓர் அம்சமே அது என்றும் அடிப்படையில் நமது நாட்டு முன்னணித் தமிழ் விமர்சகர்களில் ஒருவனாக நான் என்னைக் கருதிக்கொள்ள வேண்டும் என்றும், 'பத்தி' எழுத்துடன் நின்று விடாது பரந்து விரிந்த ஆழமான முயற்சிகளைத் தான் எதிர்பார்ப்பதாகவும் வலியுறுத்தி வந்தார்.

கைலாஸின் உற்சாகமான வரவேற்பையும், ஆதரவையும், அன்பையும், மதிப்பளித்து விவாதித்து, தன்வழிக் கருத்துகள் பொருத்தமுடைமை என்று நிலைநாட்டும் பண்பையும், சுவையான ஆய்வறிவுப் பரிவர்த்தனையையும் பெற்று வந்தேன். கைலாசபதி தன்னை ஒரு சமூகவியல் ஆய்வறிவாளனாகவே இனங்காட்டிக் கொண்டார். அவருடைய கருத்துப்படி,

> 'இக்காலத்தில் இலக்கிய கர்த்தா ஒருவர் விவேகத்துடனும் ஆற்றலுடனும் செயற்பட வேண்டுமாயின் கணிசமான உலகியல் அறிவும் அனுபவமும் பெற்றிருக்கவேண்டுவதன்றி, சமுதாயத்தின் இயக்கவியல் பற்றிய ஞானமும் வாய்க்கப் பெற்றிருத்தல் அவசியமாகும். திறனாய்வு மனித வாழ்க்கையை விவரித்து, விளக்கங்கூறும் அறிவுத்துறைகள் பலவற்றைச் சார்ந்து நிற்கிறது. மனிதப் பண்பியல் துறைகளான வரலாற்றியல், தொல்பொருளியல், மெய்யியல், அழகியல், மொழியியல் முதலியன வற்றுடன், சமூக விஞ்ஞானத்துறைகளான மானிடவியல், சமூகவியல், உளவியல், அரசியல், பொருளியல், மக்கட் பண்பாட்டியில் என்பனவும் இலக்கிய ஆய்வுக்கு இன்று இன்றியமையாதன. தனித்தும் சார்ந்தும் இயங்கும் இப்பண்பே நவீன இலக்கியத் திறனாய்வை முற்கால இலக்கிய ஆய்வுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.

(முன்னுரை 'சமூகவியலும் இலக்கியமும்' 1979, சென்னை, என்.சி.பி.எச்.)

பல்நெறி சார்ந்த (Multi – Disciplinary) ஆய்வும், அணுகுமுறையும் தமிழிற்கு அறிமுகமாகிப் பரவலாகி வருவது கைலாசபதி மூலமே என்பது மிகையல்ல. அது மாத்திரம் போதாதா பெயர் நீடித்தது நிற்க? சென்ற நூற்றாண்டிலே, ஈழம் உலகுக்கு அளித்த தமிழ் ஆய்வறிவாளர் கைலாசபதி என்பதை, அடுத்த சில தசாப்தங்கள் நிரூபிக்கத்தான் போகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன திறனாய்வுக் கோட்பாடுகள்

கே.எஸ். சிவகுமாரன்

திறனாய்வு என்பதனை நாம் எவ்வாறு பொருள் கொண்டு விளங்கிக் கொள்ளலாம்? இதற்கு விடை காண இந்நூல் முயலுகின்றது. இந்தப் பொருள் பற்றிய விளக்க நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் ஏற்கெனவே வெளிவந்துள்ளன. திறனாய்வு என்ற பதத்தை Literary Criticism என்று ஆங்கிலத்தில் கூறுகிறார்கள்.

தமிழ் இலக்கிய மரபிலே பழைய இலக்கியங்களுக்கு உரை யெழுதியவர்களின் ஆக்கங்களில் திறனாய்வு சார்ந்த பண்புகளிருந்த போதிலும், 'நவீன' திறனாய்வுப் போக்குகளையே இந்நூல் அறிமுகம் செய்ய முயல்கிறது.

மேனாட்டார் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய இலக்கிய வகைகளுள் திறனாய்வு முறையும் ஒன்று. தமிழில், குறிப்பாக 20 ஆம் நூற்றாண்டிலே, இந்த மேனாட்டு இலக்கியங்கள் சார்ந்த கருத்தியல்கள் உள்வாங்கப்பட்டதன் காரணமாக அவை 'நவீன' என்ற அடைமொழி பெறுகின்றன.

'திறனாய்வு' தொடர்பாகப் பல நூல்கள் ஏற்கெனவே தமிழில் வெளிவந்துள்ளபோதும் கே.எஸ். சிவகுமாரன் எழுதிய நூல்களிலிருந்து தொகுக்கப்பட்டதொரு வியாக்கியானமானதாகவே இந்தச் சிறு நூல் அமைகிறது. இந்நூல் சிறியதும், பெரியதுமான 14 அதிகாரங்களைக் கொண்டது.

நவீன இலக்கியங்களை அறிபரவல் செய்தலில் கே.எஸ். சிவகுமாரனின் வகிபாகம் முக்கியமானது. ஆங்கிலத்திலும் தமிழிலும் அவர் மேற்கொள்ளும் இதழ்க்கீல எழுத்துக்கள் அறிமுகப்படுத்தலாக, தகவலாக, மதிப்பீடுகளாகப் பல நிலைகள் கொள்கின்றன.

தமிழ்வழி எழும் ஆக்க எழுத்துக்களை ஆங்கில வழி அறிமுகம் செய்தலும் ஆங்கில எழுத்துக்களைத் தமிழ் வழி அறிமுகம் செய்தலும், தகவல் என்ற நிலையையும் கடந்த பண்பாட்டுப் பரிமாற்றங்களாகின்றன. நவீன அறிவுச் செயலமைப்புடன் இணைந்த நீட்சியாக அவை அமைகின்றன.

அவரது வாசிப்பின் வழியாகத் தாம் களஞ்சியப்படுத்திய அறிவைப் பகிர்ந்து பயனுறச் செய்யும் பொதுமை நோக்கு அவரின் மானிட நேயத்தின் வெளிப்பாடு.

விரித்துரைத்தல், சுருக்கியுரைத்தல் என்ற எழுத்து நடைமுறையில் அவர் சுருக்கியுரைத்தல் வழியைச் சார்ந்தவர். அது ஒரு வகையில் இதழ்க்கீல எழுத்து அனுபவத்தின் நேர்விளைவு என்று கொள்ளத்தக்கது.

படைப்புக்களை நேர்நலன்வழி (Positive) நோக்கும் அணுகுமுறையோடு நீட்சி கொண்டிருப்பவர் கே.எஸ். சிவகுமாரன்.

- பேராசிரியர் சபா. ஜெயராசா

குமரன் புத்தக இல்லம்

விடயம்: தமிழ் இலக்கியம்

ISBN 978-955-659-432-4

9 789556 594324

விலை ரூபா 400.00

#619

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org